997

1226

வாருங்கள்! குழந்தைகளுக்காகக்
குழந்தைகளுடன் வாழ்வோம்




7-FEB 1940
MADRAS

கழகப் புதிய தமிழ்ப்பாடம்

ஐந்தாம் புத்தகம்






திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

கழக வெளியீடு—உசுக

கழகப் புதிய தமிழ்ப் பாடம்

KAZHAGAM NEW TAMIL READER

ஐந்தாம் புத்தகம்

FIFTH BOOK

12161
494·8186

*

புதிய பாடத்திட்டத்தின்படி
கழகத்தின் சிறுவர்கல்வி அறிஞர்
கூட்டத்தார் எழுதியது.

BY
A COMMITTEE OF CHILD EDUCATION
SPECIALISTS OF THE SOCIETY

*

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை

பிரமாதி—ஐப்பசி, 1939

பதிப்புரிமை]

[விலை அணா 6½

[*All Rights Reserved*]

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
TIRUNELVELI & MADRAS.
Nov. 1939

The Jupiter Press, Madras.

முன்னுரை

1939 ஆம் ஆண்டில் புதிதாய் வெளியிடப்பட்ட பாடத் திட்டத்தையொட்டி இக் "கழகப் புதிய தமிழ்ப்பாடங்கள்" எழுதப்பட் டிருக்கின்றன. பிள்ளைகட்கு உற்று நோக்கும் அறிவு மிகும்வண்ணம், தாவரங்கள், பிராணிகள், பறவைகள், இயற்கைத் தோற்றங்கள் முதலியவற்றைப் பற்றிப் பாடங்கள் தரப்பட்டிருக்கின்றன. பொது அறிவு பெருகும் வண்ணம் சுகாதாரம், பௌதிக சாத்திரம், பூகோளம், சரித்திரம் முதலிய அறிவியல் துறைகளைப் பற்றிய பாடங்களும் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

நம் நாட்டு மக்கள் செல்வத்தில் ஓங்கி வாழ்வதற்குரிய கைத்தொழில், விவசாயம், வாணிகம் ஆகிய இவைகளைப் பற்றிய பாடங்களும் இப்புத்தகங்களிற் காணப்படும். இன்னும் நாட்டுப் பற்று மொழிப்பற்று ஆகிய இவைகளை இளமையிலேயே பிள்ளைகட்கு அறிவுறுத்தும் வண்ணம் இப்புத்தகங்களிற் பெரியார், புலவர்கள், வீரர்களுடைய வரலாறுகளும் அடங்கி யிருக்கின்றன.

இளைஞர்கள் மனத்தைக் கவர்ந்து அவர்கட்கு மகிழ்ச்சியளிக்க இனிய கதைகளும், இன்னிசைப் பாடல்களும், உவகையூட்டும் நாடகங்களும் இப்புத்தகங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்நாடக பாடங்களே நடித்துக் காட்டுவதற்குப் பிள்ளைகள் படிக்குந்தோறும் மௌன வாசிப்பிற்கும் கருவியாகும்.

பாடங்கள் ஒவ்வொன்றின் இறுதியிலும் அருஞ்சொற்களும், தொடர்களும் எடுத்துக் காட்டப்பட் டிருக்கின்றன; இவைகளைப் பிள்ளைகள் வாக்கியங்களில் அமைக்கப் பழக வேண்டும். இன்னும் பிள்ளைகள் பாடங்களின் பொருளைச் செவ்வனே அறிய அவைகளைக் குறித்த கேள்விகளும், அடியில் தரப்பட்டிருக்கின்றன. பாடத் திட்டத்திற் கண்டபடி படிப்படியாக இலக்கணப் பொருள்கள் பாடங்களின் இறுதியில் சுருக்கியும் விளக்கியும் உதாரணப் பயிற்சிகளுடன் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

பொருளடக்கம்

திருக்குற்றால நீர்வீழ்ச்சி (மூவர்ணப் படம்)

1.	திருக்குற்றாலம்	...	...	1
2.	கல்வியும் கேள்வியும்	...	...	6
	,, பாட்டு	...	...	10
3.	அகத்திய முனிவர்	...	...	11
4.	அன்னையின் அன்பு	...	...	16
5.	இந்தியாவின் பெரிய பட்டினம்	...	...	17
6.	தோட்டக்கால் பயிர்கள்	...	...	23
7.	இரக்கமுள்ள இளைஞன்	...	...	29
8.	உடன்வாழ் உயிர்கள்	...	...	32
9.	சர்க்கரை எடுத்தல்	...	...	38
10.	தமிழகம்	...	...	44
11:	குயில் பாட்டு	...	...	51
12.	சுகாதார வழிகள்	...	...	53
	,, வாக்கியங்கள்	...	...	58
13.	நீரின்நிலை வேறுபாடுகள்	...	...	58
14.	திருவள்ளுவர்	...	...	63
15.	திருக்குறட்பாக்கள்	...	...	69
16.	நால்வரும் ஒன்று சேர்ந்து வாருங்கள் (ஒரு நாடகம்)	...	...	70
17.	கிறிஸ்து நாதர்	...	...	79
18.	பிதாக்கள் எவர் எவர்?	...	...	85
19.	தேனீவளர்த்தலும் தேன் எடுத்தலும் (முதற்பாகம்)		...	86
20.	,, ,, (இரண்டாம் பாகம்)			94
21.	தமிழ்நாட்டு வீரர் சிதம்பரம் பிள்ளை	...	...	100
22.	நன்றும் இன்றே செய்யவும் வேண்டும்		...	107
23.	ஆடை நெய்தல்	...	...	108
24.	கணபதி எழுதிய கடிதங்கள்	...	...	116
25.	செய்யுட் பாடம்	...	...	118
I.	கடவுள் வாழ்த்துப்பாக்கள்	...	...	,,
II.	நீதிச் செய்யுள் மூதுரை, நல்வழி	...	...	120



திருக்குற்றாலம் நீர்வீழ்ச்சி.

கழகப்

புதிய தமிழ்ப் பாடம்

ஐந்தாம் புத்தகம்

---

1. திருக்குற்றாலம்

இதோ எதிரே பாருங்கள்; ஓர் அழகிய மலை வீழ் அருவியின் படம். இப் பேரருவி மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஒருபிரிவாகிய திரிகூட மலையிலிருந்து விழுகின்றது. இவ்விடத்திற்குத் திருக்குற்றாலம் என்று பெயர். இது திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி என்னும் நகருக்கு அருகில் மூன்று மைல் தூரத்தில் உள்ளது.

இத் திருக்குற்றாலத்தை அடுத்துள்ள மலைச் சரிவுகள் வளமிக்க சோலைகள் நிறைந்துள்ளன. அவைகளின் ஓரங்களிற் பச்சைப் பசேரென்று அடர்ந்து நெருங்கியுள்ள புதர்களும் செடி கொடிகளும், கண்ணுக்கு அழகுகாட்டும் பலவகை நிறங் கொண்ட மலர்களைச் சொரியும். ஆங்காங்குச் செழித் தோங்கி வளர்ந்த தெங்கு பாக்கு மரங்கள், காய்கள் நிறைந்த குலைகளைத் தாங்க முடியாமல் காற்றில் தள்ளாடிக்கொண்டு நிற்கும். இடையிடையே மா, பலா, வாழை முதலிய கனிதரு மரங்களிற் சுவை

மிக்க பழக்குலேகள் தொங்கிக்கொண்டிருக்கும். மந்திகள் தங் குட்டிகளை மார்போடு இறுகக்கட்டி அணைத்துக்கொண்டு இம் மரங்களில் தாவிக் கனிகளைப் பறித்துத் தின்று குட்டிகளுக்கும் ஊட்டும். இப்பழங்களைத் தின்று வயிறு நிறைந்த குரங்குகளெல்லாங் கூட்டம் கூட்டமாக மரக்கிளைகளில் ஏறி ஒன்றை யொன்று பற்றித் தொங்கிக்கொண்டு ஊஞ்சலாடும்.

செடி கொடிகளினின்றும் பூக்கள் சொரிந்து விழுந்து தரையை மூடிக்கொண்டிருக்கும். இவ்வாறு பச்சைப் புல்லின்மீது வெள்ளை, ஊதா, நீலம், மஞ்சள், சிவப்பு முதலிய பலநிற மலர்கள் விழுந்து கிடப்பது அங்கங்கே இரத்தினக் கம்பளங்கள் விரித்து வைத்தாற்போலக் காணப்படும். வண்டினங்கள் செடி கொடிகளிலுள்ள பூக்களின் தேனைக் குடித்துவிட்டு ரீங்காரம் செய்வதனல், அவ்விடம் ஓர் 'இசை அரங்கம்'போலத் தோன்றும். இக் காட்சிகளும், சண்பகம் மல்லிகை ரோஜா முதலிய மலர்களின் நறுமணமும், குளிர்ந்த காற்றும் எல்லாம் கூடி நம் துயரங்கள் அனைத்தையும் மறக்கச் செய்து மனத்திற்கு அமைதியையும், அளவற்ற ஆனந்தத்தையும் அளிக்கும்.

இனி இச்சோலேகளினின்றும் நீங்கி, அடுத்து இருக்கும் அருவியை அணுகுவோம். ஆங்குள்ள மண்டபங்களிலும், படிக்கட்டுகளிலும், நடந்து சென்று கரும்பாறைகளை மிதிக்கும்போதே அருவி

யின் நீர்த்துளிகள் வானிற் சிதறி நம்மீது விழுவது, பனிநீர் தெளித்து நம்மை வரவேற்பதுபோல் இருக்கும். மென்மையான வெண்மேகங்கள் அங்கு அடிக்கும் காற்றில் வெகு வேகத்துடன் ஓடிவந்து நமது முகத்தில் தாக்கும். அருவியின் வீழ்ச்சி நுரையுடன் கூடிப் பால் பொழிவதுபோற் கரும்பாறையினின்றும் ஓயாது ஒழியாது தடதடவென்று வீழ்ந்து நதியாய் ஓடும். மனிதர் அண்ணாந்து பார்க்கவும் முடியாத அவ்வளவு உயரத்திலுள்ள தேன்கூடுகளிலிருந்தும் கீழே பாறைகளின்மேல் தேன் அவ்வப்போது சொட்டும்.

குற்றாலத்து நீர்வீழ்ச்சியில் தலை முழுகுவதற்கென்றே மக்கள் ஆங்கு ஆவலோடு செல்கின்றார்கள். பாறைகளில் எப்போதும் தண்ணீர் விழுந்து ஓடிக்கொண்டேயிருப்பதால், அவை பாசி பிடித்து அதிகமாய் வழுக்கும். ஆதலால் மக்கள் அவைகளின்மீது நடக்கும்போதும், நின்று முழுகும்போதும் மிக்க கவனத்துடன் இருக்கவேண்டும். நீர்வீழ்ச்சி பெருக்கெடுத்துவரும் இடத்தில் நாம் நிற்போமானால், பாரமான கற்கள் தடதடவென்று நமது தலையின்மேல் விழுந்து நம்மைத் தள்ளுவதுபோல் இருக்கும். அருவியின் வேகம் மூச்சுவிடவும் முடியாமல் நமக்குத் திகைப்பை உண்டாக்கும். ஆதலால் இடையிடையே நாம் அருவியின் கீழிருந்து தலையை வெளியே எடுக்க வேண்டியதாயிருக்கும். அப்போது நாம் நம்மைச் சுற்றிவிழும்

அருவிநீரில் வானவில்லின் நிறங்கள் தென்படு வதைக் காணலாம். அருவியிலிருந்து சிதறி வானத்தில் எழும்பிப் பக்கங்களில் விழும் சிறு திவலைக் கூட்டங்களிலும் சூரியன் ஒளிபட்டு வானவில் விழுவதைப் பார்க்கலாம். இவை அருவியின் அழகை மிகுதிப்படுத்தி நமது மனத்தின்கண் இன்பத்தைப் பெருகச்செய்யும்.

சாரல் காலத்தில், அதாவது ஆனி, ஆடி, ஆவணி மாதங்களிற் குற்றாலத்தின் இயற்கையழகு வெகுவாய் மிகும். அது தென்மேற்குப் பருவக் காற்று அடிக்குங் காலமாதலால் மலையில் மழை ஏராளமாய்ப் பொழியும். அதனால் அருவியிற் பெரும் பெருக்கு உண்டாகும், நீர்வளம் நிறைந்து நிலவளஞ் சிறந்து செடி கொடி மரங்கள் செழிக்கும். சாரல் காற்று வீசுவதனாலும் மேகங்கள் வந்து மலைச்சாரலில் தவழ்வதனாலும் குற்றாலம் இக்காலத்தில் மற்ற இடங்களைவிட மிகவுங் குளிர்ச்சியாயிருக்கும். ஆகையினால் இம்மாதங்களில் உடல் நலம் விரும்புவோரும் இயற்கை அழகை நுகர எண்ணுவோரும் திரள் திரளாய் இங்கு வந்து வசிப்பார்கள். இத் திருக்குற்றாலத்தின் இயற்கைக் காட்சிச் சிறப்பினை ஆங்குச் சென்று நேரிற் கண்டு களித்தவர்களே, இயம்பவும் எழுதவும் வல்லவராவார்கள்.

இஃது ஒரு சிறந்த புண்ணியத் தலமும் ஆகும். இங்குப் பழைமையான ஆலயமும் ஒன்று உண்டு.

பெரியோர்கள் பலர் இங்கு வந்து சிலநாட்கள் தங்கிப் போயிருக்கின்றனர். இவர்களிற் சிலர் இத்தலத்தின் அருமைக் காட்சிகளைப் புகழ்ந்து பாடியும் இருக்கின்றனர்.

கோடைக்காலத்திற் குற்றாலம் ஒரு நகர்போற் காணப்படும். பல திசைகளினின்றும் மக்கள் அங்கு வந்து கூடிச் சிலநாட்களோ, சில மாதங்களோ தங்கி உறைவார்கள். அப்போது மாளிகைகளிலும், மடங்களிலும், மண்டபங்களிலும் மக்கள் நிறைந்திருப்பார்கள், பல திறப்பட்ட கடைகளும் மலிந்து காணப்படும். இவ்வாறு இத் திருக்குற்றாலம் அந்தக்காலத்தில் இயற்கை அழகில் மாத்திரமே அன்றிச் செயற்கை அழகிலும் சிறந்து ஒளிரும்.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும் :—

(a)	சோலை	ரீங்காரம்	நுகர்தல்
	திவலை	வரவேற்பு	உணர்தல்
	இறுகக்கட்டல்	அவ்வப்போது	மாளிகை
	தாவுதல்	திகைப்பு	மாடம்

(b)	மலை வீழ் அருவி	இரத்தினக் கம்பளம்
	மலைச் சரிவு	இசை அரங்கம்
	பச்சைப் பசேர்	அண்ணாந்து பார்த்தல்
	கனிதரு மரம்	இயற்கைக் காட்சி

பருவக்காற்று.

1. இப் பாடத்தைப் படித்து முடித்தவுடன் என்ன உன் மனத்தில் தோன்றுகிறது சொல்.

2. குற்றாலத்தில் உள்ள ஒரு சோலையைப்பற்றி நாலைந்து வாக்கியங்கள் எழுது.

3. குற்றாலத்தின் கோடைக்காலக் காட்சியைப்பற்றி ஒரு பத்தி (பாரா) எழுது :—

4. மந்திகள் கனிகளைப் பிடுங்கித் தின்னும்—இந்த வாக்கியத்தில் மந்திகள், **எழுவாய்** ; பிடுங்கித் தின்னும் **பயனிலை** — என்பது உனக்குத் தெரியும். மந்திகள் எவைகளைப் பிடுங்கித் தின்னும் ?

இந்தக் கேள்விக்கு விடை 'கனிகளை' அல்லவா ? 'கனிகளை' என்பது **செயப்படு பொருள்** என்று சொல்லப்படும்.

மரங்கள் குலைகளைத் தாங்கும் — இதிற் செயப்படுபொருள் எது ?

---

2. கல்வியும் கேள்வியும்

பொன்போன்ற பிள்ளைகளே! நீங்கள் அழகாக இருக்க விரும்புகிறீர்கள் அல்லவா? அதனால் அன்றோ நீங்கள் எண்ணெயிட்டுத் தலைவாரி ஒழுங்காக மயிரை அமைத்துக்கொள்கிறீர்கள்! உட்சட்டை மேற்சட்டைகளை உடம்போடு உடம்பாகப் பொருந்தப் போட்டுக்கொள்கிறீர்கள்! சரிகை முன்றானையுள்ள ஆடையை உடுத்திக்கொள்ள ஆசைப்படுகின்றீர்கள்! உடம்பின்மீது நன்மணங் கமழச் சுண்ணங்களையும் பூசிக்கொள்கின்றீர்கள்! இவைகளெல்லாம் உடம்பிற்கு அழகும் மனத்திற்குக் கிளர்ச்சியுங் கொடுப்பனவேயாம். ஆனாலும், இவ்வுடைகளும் பூச்சும் உங்களைக் காணும் பிறருக்கு இன்பங் கொடுப்பனவே யன்றி, உண்மையில் உங்

களுக்கு இன்பங் கொடுப்பன ஆகா. நீங்கள் நல்ல பிள்ளைகளாய் இருக்கின்றீர்களென்று உங்கள் மனமே உங்களுக்குத் தெரிவிக்குமானல், அதுவே உங்களுக்கு உண்மை இன்பங் கொடுப்பதாகும். நீங்கள் நல்லவர்களா யிருப்பதையோ அல்லது கெட்டவர்களா யிருப்பதையோ உங்கள் மனத்திற்கு உண்மையாய் அறிவிக்கத் துணைசெய்வது, நீங்கள் கற்கும் கல்வியே. ஆகையால், உங்களுக்குக் கல்வி அழகே அழகாகும்.

கல்வி என்ற மொழி **கல்** என்னுஞ் சொல்லி னின்றும் பிறந்தது. கல் என்ருல் 'தோண்டு' என்று பொருள். தோண்டுதலாவது நிலத்தினைப் பறித்துப் பார்த்தல். அஃதாவது ஆராய்தலாகும். ஆகவே, ஆராய்ந்து பொருள்களை அறிதலே கல்வி எனப் படும். அக் கல்வி பலவகைப்படும். உலகத்தையும், உலகத்திலுள்ள பொருள்களையும் அறிதல் ஒன்று; உலகத்தில் மக்கள் செய்யவேண்டிய தொழில்களை யும், அவற்றின் தன்மைகளையும், அவற்றைச் செய் யும் முறைமைகளையும் அறிதல் மற்ருென்று; அற நூல்களையும் நீதிநூல்களையுங் கற்றறிந்து அவற்றின் கருத்துப்படி நடத்தல் இன்னுென்று. இவை எல்லா வற்ருலும் உண்டாகும் அறிவே கல்வியறிவாகும். இக்கல்வி மக்கள் யாவருக்கும் முக்கியமானது.

நீங்கள் பூகோள பாடம் படிக்கிறீர்கள். அஃது உலகத்தைப்பற்றி அறிவிக்கும் நூல்களில் ஒன்று. நீங்கள் பொருட்பாடம் படிக்கிறீர்கள். அஃது உல

கத்திலுள்ள பொருள்களைப்பற்றி அறிவிக்கும் நூல்களில் ஒன்று. நீங்கள் படிக்கும் வாசகபாடப் புத்தகங்களிற் பயிர் செய்தல், துணி நெய்தல், இயந்திரம் இயக்குதல் முதலியவைகளைப்பற்றிப் படிக்கிறீர்கள்; அவை கைத்தொழில்களைப்பற்றி அறிவிப்பனவாம். மக்கள் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றி அறிவிக்கும் நூல் அறநூலாகும். மக்கள் பொய், கொலை, களவு முதலிய கெட்ட குணங்களையும் தீய செயல்களையும் நீக்கி ஒருவரோ டொருவர் ஒற்றுமையுடன் வாழும் முறைகளைப்பற்றி அறிவிக்கும் நூல் நீதிநூலாகும்.

கல்வியைக் கசடறக் கற்றல் வேண்டும். கசடு என்பது ஐயமும் திரிபும் ஆகும். ஐயமாவது ஒரு பொருளை இதுவோ அதுவோ எதுவோ என்று மயங்குதல். திரிபாவது ஒன்றை மற்றொன்றாக மாறி உணர்தல். இவ்விரு குற்றங்களும் நீங்கியதே கசடற்ற கல்வியாகும்; அதுவே உண்மையான கல்வி. குற்றமறக் கல்வி கற்றபின், கற்ற வழியில் நிற்றல் வேண்டும். அதுவே மக்களுக்கு உண்மையான இன்பத்தைத் தரும்.

கல்வியை ஒருவன் தானே கற்றல் சிறந்த பயன் தராது. ஐயந் திரிபறக் கற்க ஓர் ஆசிரியரது உதவி வேண்டும். ஆதலால் ஆசிரியரிடமே அவன் அதனைக் கற்றல் வேண்டும்.

பள்ளிக்கூடத்திற் படித்து முடித்த பின்னும் நீங்கள் படிப்பதை விடக்கூடாது. அறிவியல் நூல்

களை அமைவுடன் கற்றறிதலும் உற்றுநோக்கிப் பொருள்களின் நுட்பங்களை யறிதலும், கற்றறிந்த பிறர் வாய்ச் சொற்களைச் செவியாற் கேட்டு மனத்திற் பதிய வைத்தலும் ஆகிய இவைகளை நீங்கள் சிறந்த கடமைகளாகக் கொள்ளல் வேண்டும்.

அறியாமை என்னும் நோயை அறவே தீர்க்கும் மருந்து கல்வியைப்போல் வேறொன்றில்லை. கேடடையாத சிறந்த செல்வமும் அதுவே.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும் :—

(a)	சுண்ணம்	கசடு	அறியாமை
	கமழ்தல்	கற்போன்	அமைவு
	இயக்குதல்	ஆசிரியன்	நுட்பம்
	ஒற்றுமை	கடமை	அறிவியல்

(b)	உடம்போடு உடம்பாக	அறநூல்
	ஐயந்திரிபு	செவியாற் கேட்டல்

1. கல்வி அழகே அழகு — இஃது எவ்வாறென்பதை விளக்கு.

2. நாம் என் எப்போதுங் கல்வியைக் கைவிடக்கூடாது ?

3. கல்வியைக் கசடறக் கற்றல்வேண்டும்.

இதில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் — இவை எவை ?

கல்வியும் கேள்வியும்

செய்யுள்

1. இளமையிற் கல்.
2. எண்ணெழுத் திகழேல்.
3. ஓதுவ தொழியேல்.
4. கேள்வி முயல்.
5. நூல் பல கல்.
6. வித்தை விரும்பு.

7. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.
8. கைப்பொருள்தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
9. நான்முறை தெரிந்து சீலத் தொழுகு.
10. ஓதாதார்க் கில்லை உணர்வொடு வொழுக்கம்.
11. எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.
12. கல்விக் கழகு கசடற மொழிதல்.
13. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
14. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.
15. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.
16. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும் :—

(a)	**உணர்வு**	**பதர்**	**ஒழுக்கம்**
	கற்கை	**சீலம்**	**குடி**

(b) எண்ணுமெழுத்தும் மெய்ப்பொருள் பிச்சைபுகுதல் கைப்பொருள் நூன்முறை குலநலம் மேற்பால்

1. செல்வப் பொருளினும் கல்விப் பொருள் சிறந்தது என்?

---

3. அகத்திய முனிவர்

அகத்திய முனிவர் ஒரு மட்குடத்திற் பிறந்தவர்; குள்ளமானவர். ஆகையால் அவருக்குக் **குட முனி** என்றும் **குறு முனி** என்றும் பெயர்கள் உண்டு. அவர் வடநாட்டவராயினும் தமிழ்மொழிவல்லவராதலால், தென்னாட்டார் அவரைத் **தமிழ் முனி** என்றும் அழைப்பர். அவர், ஒரு நாள், காட்டு வழியாகப் போய்க்கொண் டிருந்தார். அங்கு ஒரு பெரிய மரத்தின் கிளைகளில் தம் மூதாதைகள் தலை கீழாகத் தொங்கிக்கொண் டிருந்ததைக் கண்டார். கண்டவர், வியப்பும் மனக்கலக்கமும் கொண்டு, அவர்களைப் பார்த்து, "மூப்பிற் சிறந்து விளங்கும் என் முன்னோர்களே! நீங்கள் இவ்வாறு தொங்கித் துன்பப் பட்டுக்கொண்டிருப்பதற்கு உற்ற காரணம் என்னே? அதனை அடியேன் அறியுமாறு திருவாய்மலர்ந் தருளவேண்டும்," என்று கேட்டார். அவர்கள் பெருமூச்சு விட்டுக்கொண்டு அகத்தியரைப் பார்த்துப், "புத்திரனே! நீ இல்லற வாழ்க்கையை ஏற்று மக்கட்பேற்றை அடையும்வரை, யாங்கள் இந் நிலைமை

யிலேயே இருக்கவேண்டு மென்பது இறைவன் விதித்த விதியாகும்,'' என்றூர்கள்.

தம் முன்னோர் படும்பாட்டை ஒழிக்க எண்ணங் கொண்டு, அகத்தியர், உடனே அவ்விடம் விட்டுச் சென்று, தமக்கு இயைந்த ஒரு பெண்ணைத் தேடி விதர்ப்ப நாட்டினை யடைந்தார். ஆங்கு அவர், **உலோபாமுத்திரை** என்னும் ஓர் அரசிளங் குமரியின் பேரழகையும் நுண்ணறிவையுங் கண்டு அவளையே மனைவியாகக் கொள்ள விரும்பினர். அவள், தனக்கு வேண்டிய தங்க நகைகளைக் கொண்டுவந்து கொடுப் பவருக்குத், தான் மனைவியாவதாகத் தெரிவித்தாள்.

உலோபாமுத்திரையின் வாய் மொழிகளைக் கேட்ட அகத்தியர், உடனே புறப்பட்டு, நகைக்கு வேண்டிய பொருள் சேகரிப்பதற்குத் தேசந் தேச மாகச் சென்றூர். எங்கும் விரும்பிய பொருள் கிடைக்கவில்லை. கடைசியாகச் செல்வவான்க ளாகிய **வில்வலன், வாதாவி** என்னும் இரண்டு சகோ தரர்க ளிருக்குங் காட்டுவழியே வந்தார்.

வில்வலன் வாதாவிகள் கொடுமன முடையவர் கள். அவ்விருவரும் தங்களிடம் வருபவர்களைக் கொன்று அவர்களிட முள்ளவைகளைப் பறித்துக் கொள்வார்கள். அவர்கள் கொலைசெய்யும் விதம் விந்தையானது: வில்வலன் வாதாவியைக் கொன்று சமையல் செய்து தங்களிடம் வந்தவனுக்கு விருந் திடுவான்; விருந்தாளி உண்டவுடன், வில்வலன், 'வாதாவி!'' என்று அழைப்பான்; உடனே

வாதாவி உண்டவன் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிவருவான். அப்போது அவ்விருந்தாளி



இறக்க, இருவரும் அவனிடமுள்ள பொருள்களை யெல்லாம் எடுத்துக்கொள்வர். இவ்விரு சகோதரர் களும் இவ்வாறே பெருஞ் செல்வரானர்கள்.

வழக்கம் போலவே வில்வலன் வாதாவியைக் கொன்று அகத்தியருக்கு விருந்திட்டான். அன்று அவர்களிடம் வந்த விருந்தாளி சாதாரண மகனே? தெள்ளிய ஞானமுடைய தெய்வ மகனரல்லரோ! முக்காலமு முணரவல்ல முனிவரல்லரோ! செயற் கரிய செய்யும் பெரியாரல்லரோ! அகத்தியர் விருந்

துண்டவுடன் வில்வலன் "வாதாவி" என்றழைக்க, அகத்தியர் "ஜீர்ணபி" என்று வயிற்றைத் தடவினர். வழக்கம்போல் தன் அருமைச் சகோதரன் வெளிவராமல் அகத்தியர் வயிற்றுக்குள்ளேயே அழிந்துபோனது கண்டு பயந்த வில்வலன், அவரைப் பணிந்து, அவர் கேட்ட பொருளைத் தடையின்றித் தந்தான்.

அகத்தியர் அப்பொருளைக் கொண்டு விதர்ப்ப நாட்டிற்குச் சென்று, தங்க நகைகளைச் செய்து தந்து, உலோபாமுத்திரையை மணஞ்செய்துகொண்டார். வாதாவி வில்வலரின் பொருள், அகத்தியர் தம் முன்னோர் வருத்தத்தையும், அவனியின்கண்ணுள்ளார் அடைந்துவந்த துன்பத்தையும் ஒருங்கே ஒழித்தது.

அகத்தியர், உலகத்துமக்கட்கு உண்டாயிருந்த இன்னுமொரு பெருங்கேட்டினையும் விலக்கினர். காலகேயர் என்னும் அரக்கர் கடலின் நடுவில் ஒரு கோட்டை கட்டிக்கொண்டு, அதனினின்றும் நள்ளிரவில் வெளியேறிவந்து உலகத்து மக்களைப் பற்பல வழிகளில் துன்புறுத்தி வந்தனர். அதனல், மக்கள் தேவர்கட்குச் செய்யுஞ் சிறப்பும் பூசனையும் செய்யாதொழியத் தேவர்கள் வருந்தித் திருமாலைச் சரணடைந்தனர். அவர் அகத்தியரை அழைத்து அவரிடம், தேவரது வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கக் கட்டளையிட்டார். அகத்தியர் கடற்கரை சேர்ந்து அக் கடல் நீரைக் கையால் மூன்றுதடவை

அள்ளிக் குடித்துக் கடலை வற்றச்செய்தார். தேவர்கள் உடனே காலகேயரைக் கடற்பிலத்தில் தேடிக் கண்டு, போர் செய்து வென்று கொன்றனர்.

அகத்தியர் கடல் நீரைத் திரும்ப வெளிவிட்டாரில்லை. வெகுகாலம் கடல் ஒரு பெரும் பிலமாகவே இருந்தது. அதற்குப் பின் பகீரதன் என்னும் அரசன் பெருந்தவஞ் செய்து தேவலோகத்தினின்றுங் கங்கையைப் பூமிக்குக் கொணர்ந்து கடலை நீரால் நிரப்பினான்.

அகத்திய முனிவர் வானத்தின்கண் ஒரு சிறந்த விண்மீனாக இன்றைக்கும் விளங்குகின்றார்.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும் :—

(a) சேகரித்தல் அவனி அறிஞர் மூப்பு
விந்தை ஒருங்கே மூதாதை இயைதல்
பூசனை

(b) கொடுமனம் குறுமுனி
உயிர் நீத்தல் செயற்கரியசெய்தல்
விருந்திடுதல் நள்ளிரவு
தெள்ளிய ஞானம் வெளியேறுதல்
தெய்வமகன் இல்லற வாழ்க்கை
முக்காலம் நுண்ணறிவு

1. வில்வல வாதாவிகள் வரலாறு என்ன?

2. அகத்தியர் கடல் குடித்த காரணம் யாது?

3. ஆறாவது பத்தியில் உள்ள வாக்கியங்களில் எழுவாய் பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துக் காட்டு.

4. அன்னையின் அன்பு

"நாதர்முடி மீதிருக்கும்" மெட்டு

என்னை அன்பாய்ப் பெற்றெடுத்த அன்னையாரே,
இன்னமுதப் பால்கொடுத்த அன்னையாரே!
பொன்னின் நல்ல தொட்டிலிட்டு என்னை ஆட்டினாய்,
பொங்குதமிழ்ப் பாட்டுப்பாடி இன்பம் ஊட்டினாய்!

நான்வருந்த நீ மருந் தருந்தல் என்னமோ,
நல்லவன் நான் வாழவேண்டும் என்ற எண்ணமோ!
வான் உலாவும் வட்டமதி தன்னைக் காட்டினாய்,
வண்ண வண்ண ஆடைமணி ஆரம்பூட்டினாய். (2)

கையிலென்னை யேந்தி முகங் கண்டு மகிழ்ந்தாய்,
கண்மணியே, செல்வமே! என்றென்று புகழ்ந்தாய்!
மெய்யிலென்னைக் கொண்டணைத்து முத்தந் தொடுத்தாய்,
மேன்மையான பாலும்சோறும் நித்தங் கொடுத்தாய். (3)

என் சிறிய மழலை கேட்டு இன்பம் ஊறினாய்,
இளநடை கண்டுனது துன்பம் ஆறினாய்!
உன் கருணை இன்றி நானும் உய்வதும் உண்டோ,
உலகினில் உன்னை அன்றி வேறு தெய்வமும் உண்டோ.

(என்னை அன்பாய்)

பயிற்சி

1. இந்தப் பாட்டுக்கள் ஒவ்வொன்றும் உன் தாய் உனக்குச் செய்த நன்மைகளைப் பற்றிச் சொல்லுகின்றது.

முதல் மூன்று பாட்டுக்கள் ஒவ்வொன்றினின்றும், அப்படிப் பட்ட நன்மைகள் இரண்டிரண்டு எடுத்துக் காட்டு.

2. எழுவாய், செயப்படுபொருள் என்னும் இரண்டும் உனக்கு நன்ருய்த் தெரியும் அல்லவா ?

உன் தாய் உன்னை வளர்த்தாள் — இதில் எழுவாய், செயப்படுபொருள் இரண்டையும் எடுத்துக் காட்டு.

எழுவாயை முதல் வேற்றுமை என்று சொல்லுவார்கள்.

செயப்படுபொருளை இரண்டாம் வேற்றுமை என்று சொல்லுவார்கள்.

இரண்டாம் வேற்றுமைக்கு அடையாளம் (உருபு) 'ஐ' ஆகும். உன்+ஐ=உன்னை

முதல் வேற்றுமைக்கு உருபு கிடையாது.

---

5. இந்தியாவின் பெரிய பட்டினம்

ஆறுகள் பெரும்பாலும் மலைகளினின்றும் உற்பத்தியாகிப் பள்ளத்தாக்குகளிற் பாய்கின்றன. அந்த ஆறுகளில் வெள்ளத்துடன் கலந்து செல்லும் வண்டலானது, அப் பள்ளத்தாக்குகளில் ஆங்காங்கு ஒதுக்குண்டு தங்கிவிடுகின்றது. அதனல் அப்பள்ளத்தாக்குகள் செழுமையும் கொழுமையும் பெறுகின்றன. அதனல் அங்கு விளையும் பொருள்கள் அப் பகுதி மக்கட்குப் போதுமான அளவுக்கு மேல் மிகுந்து காணப்படுகின்றன. அவ்வாறு மிகுந்த பொருள்களை அவர்கள் வேற்றூர்களுக்கு அனுப்பிவைத்து, அவ்விடங்களினின்றுந் தமக்கு வேண்டிய வேறு பொருள்களைத் தருவித்துக்கொள்கிருர்கள். மேலும் அவர்கள், அவைகளைக் கடல் கடந்து அடையவேண்டிய பிறநாடுகளுக்கும் ஏற்று

மதி செய்தனுப்பி, அந்நாடுகளினின்றும் ஆங்குள்ள வேறு பொருள்களைத் தருவித்து **இறக்குமதி** செய்து கொள்கிறார்கள். இதுவே **வெளிநாட்டு வாணிபம்** என்று சொல்லப்படுகிறது.

உள்நாட்டுப் பொருள்கள், ஆறுகள் அல்லது வாய்க்கால்களின் மூலமாகப் படகுகளிலும், பாதைகளின் மூலமாக வண்டிகளிலும் கடற்கரையிலுள்ள ஒருபெரிய நகருக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுகின்றன. அவைகள் அந் நகரினின்றுங் கடல்மூலமாகக் கப்பல்களில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவ்வாறே வெளிநாட்டுப் பொருள்களும் இந் நாட்டு மக்கட்குக் கிடைக்கின்றன. ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் நடைபெறும் இக் கடற்கரை நகர்களே **துறைமுகப் பட்டினங்கள்** என்று சொல்லப்படும்.

வட இந்தியாவிலுள்ள **கல்கத்தா** இத்தகைய துறைமுகப் பட்டினங்களில் ஒன்று. இது கங்கை நதியின் கிளையாகிய ஹூக்ளி நதியின் கரைமேல், வங்காள விரிகுடாக் கடற்கரைக்கு எண்பது கல் தூரத்தில் உள்ளது. கப்பல்கள் ஹூக்ளி நதியின் மூலமாகக் கல்கத்தாவுக்கு வந்து போகின்றன. கங்கை பிரமபுத்திரா நதிகளின் மூலமாக உள் நாடுகளினின்றும் வரும் தானியம், தேங்காய், சணல் நார் முதலிய பொருள்கள் கல்கத்தாவின் மூலமாகவே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உலகத்தின் நாலாபக்கங்களினின்றும்

வருகின்ற மண்ணெண்ணெய், பஞ்சு, ஆட்டுமயிர், இரும்பு இவைகளினலாகிய பொருள்கள், கடிகாரங் கள், நெருப்புப் பெட்டிகள், மருந்துகள் முதலியவை கல்கத்தாவில் இறக்குமதி செய்யப்பட்டு உள்நாடு களுக்கு அனுப்பப்படுகின்றன. இரண்டு நூற்றாண்டு களுக்கு முன் கல்கத்தா ஒரு சிறு நகராகவே இருந்தது. ஆனல் இப்பொழுது இவ்வெளி நாட்டு வாணிபத்தினல், வரவர ஒரு பெரிய பட்டின மாயிற்று. மாளிகைகளில் வசிக்கும் செல்வவான் கள் பலருடன் மட்டற்ற மக்கள் தொகுதியையுங் கொண்டு, அஃது இப்பொழுது நாட்டுக்குச் சிறந்த நகரமாக விளங்குகின்றது.

கல்கத்தாவின் ஒரு பேட்டை **ஹௌரா** என்பது. கிழக்கு இந்திய இருப்புப்பாதை, வங்காள நாகபுரி இருப்புப்பாதை, கிழக்கு வங்காள இருப்புப்பாதை என்ற மூன்றும் இங்கேதான் ஒன்று கூடுகின்றன. இங்கே பெரிய கைத்தொழிற் சாலைகள் பல உள. இங்குள்ள ஒரு பெரிய தொழிற் சாலையில் வட இந்தியாவிற் பயிராகும் சணலெல்லாம் கொண்டு வரப்பட்டு நாராக்கிக் கோணிகளாக நெய்யப்படு கின்றன. மற்றென்றில், மேலை நாட்டின் இரும்பி னல் தூலங்களும், பாலங்களும் செய்யப்படுகின்றன. காகித ஆலைகளும், பஞ்சாலைகளும் கணக்கற்று வேலை செய்கின்றன. நதியில் தங்கியிருக்கும் பல-நாட்டுக் கப்பல்கள் பார்ப்பதற்குச் சிறந்த கண் காட்சியாகும். ஹௌரா ஒரு பெரிய பாலத்தால்

கல்கத்தாவோடு இணைக்கப்பட்டிருக்கின்றது. இரவும் பகலும் மக்கள் அப் பாலத்தின்மீது நடந்த வண்ணமா யிருப்பார்கள். பலர் இப்பாலத்தின் அருகிற் கங்கா நதியில் நீராடி, அடுத்துள்ள காளி கோயிலுக்குப் போய்ப் பூசனை புரிவார்கள். அந்தத் துறைக்குக் **காளி கட்டம்** என்று பெயர். இதன் காரணமாகவே 'கல்கத்தா' என்னும் பெயரும் உண்டாயிற்று.



கல்கத்தா பழைமையான பட்டினம் அன்று. ஆகையால், அங்கே திருச்சி காசி காஞ்சி போன்ற மிகப் பழைய நகரங்களிற் காணப்படும் காலங் கடந்த கட்டிடங்கள் கிடையா. எனினும், அதன்கண் **டல்ஹௌசிச் சதுக்கம்** எனப் பெயர் பெற்ற ஒரு பகுதி உண்டு. அங்கே பல கட்டிடங்களுடன்

ஆட்சித் துறைக் கட்டிடங்களும் இருக்கின்றன. இச் சதுக்கத்தை யடுத்துச் சுமார் இரண்டு மைல் சதுர முள்ள பரந்த பெரிய **பசும்புல் மைதானம்** ஒன்று உண்டு. இங்கு மக்கள் காற்பந்து, கோற்பந்து முதலிய விளையாட்டுக்கள் ஆடுவார்கள். அதன் ஒரு கோடியிற் கிறிஸ்தவப் பண்டிகை நாட்களிற் குதிரைப் பந்தய ஓட்டமும், குதிரைப் பந்தடி ஆட்டமும் நடந்தேறி வருகின்றன. அங்கு மக்களிற் சிலர் நல்ல காற்று உட்கொள்ள நாடோறும் காலை மாலை வேளைகளிற் குதிரை யேறிச் சவாரி வருகிறார்கள். பலர் சுற்றி உலாவி வருகிறார்கள். அதன் கீழ்க்கோடியில் ஐரோப்பியர்கள் குடியிருக்கிறார்கள். அங்கு உண்டி யளிக்கும் பல விடுதிகளும் கூட்டங்கூடுங் கட்டிடங்களும் இருக்கின்றன.

இருநூறு ஆண்டுகட்கு முன் கல்கத்தா ஆங்கிலேயருக்கு ஒரு வாணிப நகராகவே இருந்து வந்தது. பின்னர், அஃது இந்திய அரசாங்கத் தலைநகராயிற்று. இன்றும் அங்கே அநேக ஐரோப்பிய வாணிபர்கள் குடியிருக்கிறார்கள். ஆங்கிலேய ஆட்சியை இந்தியாவில் நிலை நிறுத்தின வீரதீரரின் உருவச் சிலைகளும், நினைவூட்டு நிலயங்களும் அங்கே காணப்படுகின்றன. ஆற்றுக்கு அப்பால் தாவரக் கல்வி ஆராய்ச்சிக்குரிய பற்பல மரஞ்செடி கொடிகளைக் கொண்ட பேர்போன தோட்டம் ஒன்று உண்டு. அங்கு ஆயிரக்கணக்கான விழுதுகளைக் கொண்டு ஆயிரம் அடி சுற்றளவுக்குத் தழைத்

துள்ள ஓர் ஆலமரம் இருக்கிறது. 'தனிமரம் தோப்பாமா?' என்னும் பழமொழியின் பொருளை வீணாக்கி அதுவே ஒரு காடுபோற் காணப்படும். அவ் விழுதுகளுக்கு இடையில் வண்டிப்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன.

கல்கத்தா 1911-ஆம் ஆண்டு வரையில் இந்தியாவின் அரசாங்கத் தலைநகராக இருந்து வந்தது. இப்போது **டில்லிமா நகரம்** இந்தியாவின் முக்கிய பட்டணம். எனினும், கல்கத்தாவே இந்தியாவில் மிகப் பெரிய பட்டினமாகவும் முக்கிய வாணிப நகராகவும் இருந்து வருகின்றது.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a) வண்டல் கொழுமை செல்வவான் பாலம்
பள்ளத்தாக்கு வாணிபம் தொகுதி பஞ்சாலை
வீரதீரன் பட்டினம்

(b) கடல் கடத்தல் மட்டற்ற ஆட்சித்துறை
துறைமுகம் கைத்தொழிற்சாலை நிலைநிறுத்தல்
நாலாபக்கம் காலங் கடந்த உருவச்சிலை
நினைவூட்டு நிலயம்

1. டல்ஹௌசிச் சதுக்கத்தைப்பற்றி உனக்கென்ன தெரியும்?
2. கல்கத்தாவின் சிறப்பியல்புகள் எவை?
3. இப் பாடத்தில் முதல் வேற்றுமைச் சொற்கள் இரண்டும் இரண்டாம் வேற்றுமைச் சொற்கள் இரண்டும் எடுத்து எழுது.

6. தோட்டக்கால் பயிர்கள்

மரங்களோ, செடிகளோ, கொடிகளோ அல்லது இவைகளில் ஒன்றிரண்டு கலந்தோ அடர்ந்து வளர்ந்திருக்கும் இடங்கள் மூன்று. அவை **காடு, தோப்பு, தோட்டம்** எனப்படும். மக்கள் நடமாடாத இடத்தில் மரஞ்செடி கொடிகள் இயல்பாக வளர்ந்து அடர்ந்து கிடப்பது காடாகும். ஒரு நிலத்தில் மக்களால் வித்துகளிட்டோ, நாற்றுகள் நட்டோ வைத்துச் சில காலம் பாதுகாக்கப்பட்டு, அவை வளர்ந்து பெரியவையானபின் தாமே பலன் கொடுக்க விடப்பட்ட இடம் தோப்பாகும். ஒரு நிலத்திற் புதிய புதியவாக மரங்களாவது, செடிகளாவது, கொடிகளாவது வித்திட்டோ நாற்று நட்டோ வைக்கப்பட்டு, அவ்வப்பொழுதும் நீர் பாய்ச்சிக் கொத்தி எஞ்ஞான்றும் பாதுகாக்கப்பட்டுவருவதுதோட்டமாகும். இவற்றுள் தோட்டத்தைப்பற்றி இங்குச் சொல்லப்படும்.

கரும்பு, வாழை, வெற்றிலை முதலியவைகளும். காய்கறி வகைகளும் தோட்டக்கால் பயிர்களாகும். இவற்றைப் பயிர் செய்யும் விதங்கள் சுருக்கமாய்க் கூறப்படும்.

கரும்பு:—கரிசலான நிலத்தை ஆழ உழுது எருவிட்டுப் பாத்திகள் கட்டி, மஞ்சிக் கால்களிற், கணுக்கள் மேலே தெரியும்படி கரும்புத் துண்டுகளை நடவேண்டும். கரும்புப் பயிருக்குக் காய்ச்சல் காலத்தில் வாரத்துக்கு இரண்டு தடவை நீர்

பாய்ச்சி, மாதா மாதம் கொத்தடம் போடவேண்டும். நாலைந்து மாதத்துக்குள், கரும்பு, இலைகள் விட்டு ஆள் புகக்கூடாதபடி அடர்த்தியாய் வளர்ந்து விடும். தோட்டத்துக்குள் வேலை செய்ய வேண்டியவர்கள் அது முதல் ஒரு கம்பளத்தைப் போர்த்துக் கொண்டுதான் உள் நுழைய வேண்டும். ஏனெனில், கரும்பிலைகள் சொறசொறப்பாயும் வாள் போன்ற விளிம்புகளை உடையவையாயும் இருப்பதால், அவை உடம்பை அறுத்து விடும். பன்னிரண்டு மாத காலத்திற் கரும்புப்பயிர் வெட்டுவதற்குத் தக்கதாகும். மக்கள் கரும்பை வெட்டி ஆலையிலிட்டுச் சாறு எடுத்துக், காய்ச்சி வெல்லமாக்குவார்கள். அவ் வெல்லத்தினின்று சீனியும், அதிலிருந்து கற்கண்டுஞ் செய்யப்படும்.

வாழை:—வாழை பெரும்பான்மை நன்செயிலுஞ் சிறுபான்மை புன்செயிலும் பயிராகும். நிலத்தை உழுது எருவிட்டுக் குறைந்தது அவ்வாறடிகள் இடைவிட்டுக் குழிகள் வெட்டவேண்டும். வேறு தோட்டத்தினின்றுங் கன்றுகளை வெட்டிக் கொணர்ந்து, குழிக்கு ஒன்ருக நட்டுக் கெட்டிப்படுத்த வேண்டும். நட்ட சில நாட்களுக்கெல்லாம் அவை குருத்துவிடும். அப்போது அக் கன்றுகளைத் தலையில் அறுத்து எறிந்துவிட்டுப் பாத்திகள் கட்டி, வாரத்துக்கு ஒரு தடவை நீர் பாய்ச்சி, மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை கொத்திக் கொடுக்க வேண்டும். **வாழைக்கு ஆறு கோத்து**

நூறு தண்ணீர் என்பார்கள். கன்று வைத்த முதலாண்டுக் கடைசி தொட்டு வாழை ஒன்றரை அல்லது இரண்டாண்டளவும் பலன் கொடுக்கும். காற்றடித்து மரங்கள் மடிந்து வீழாதபடி, தோட்டத்துக்கு உயர்ந்த வேலி கட்டி வைத்தல் நல்லது. கடுங் காற்றிற் பாதுகாப்பாக ஒவ்வொரு மரத்துக்கும் மூங்கில்களால் முட்டுக்களுங் கொடுக்கலாம்.

வெற்றிலை :—வெற்றிலைக்கு நிலம் கரிசலாகவும், வளமாகவும் இருக்க வேண்டும். முதன் முதல் நிலத்தில் இரண்டு மூன்றடி அகலத்தில் மஞ்சிவிட்டு, அவ்வளவு அகலமும் முழங்கா லாழமுங் கொண்ட கால்வாய்கள் வெட்ட வேண்டும். இவைகட்குக் கிடங்குகள் என்று பெயர். மஞ்சிகளின்மேல் இரண்டடிக்கு ஒன்ருக அகத்தி விதைகளைச் சிறு சிறு குழிகளிற் போட்டு நீர் விடவேண்டும். அப்போதே நிலத்தைச் சுற்றிப் பேய்க்கரும்புத் துண்டுகளை நட்டுப் பயிராக்க வேண்டும். சுமார் ஒன்றரை மாதங்களுக்குள்ளாக அகத்திச் செடிகளும் பேய்க்கரும்புகளும் வேண்டிய உயரத்திற்கு வளர்ந்துவிடும். அப்போது காற்றுக்குப் பாதுகாப்பாகப் பேய்க்கரும்புகளைக் கிட்டிபோட்டு வேலி போற் கட்டிவிட வேண்டும். பிறகு வேறு தோட்டத்தினின்றும் வெற்றிலைக் கொடித் துண்டுகளைக் கொண்டு வந்து, ஒவ்வொரு அகத்திச் செடியின் பக்கத்தில் ஒவ்வொரு கொடித்துண்டு வைத்துப் பதி போட வேண்டும். கிடங்குகளில் தண்ணீர் பாய்ச்சி வைத்

துக் கொண்டு, கொடிகளைப் பதி போட்ட சில நாட்கள் முதல் நாள் தோறுங் கிடங்கு நீரை ஒரு பானை யோட்டாற் சேந்தி மஞ்சிகளின் மீது இறைத்து வரவேண்டும். கொடிகளுக்கு



ஈரம் நன்ருய் உறைக்க வேண்டுமே தவிர, அண்டையில் நீர் தங்குதல் கூடாது. நாற்பது நாட்களுக்குள் கொடிகள் இலைவிட்டு வளர ஆரம்பிக்கும். வளர வளர, அவை கீழே விழாதபடி அவற்றை அகத்திச் செடிகளிற் சேர்த்து மெல்லிய கட்டுக்கள் போடவேண்டும். இதற்குச் **சேர்வை கட்டுதல்** என்று பெயர். ஒரு மாதத்துக்கு ஒரு தடவை கிடங்கிலுள்ள சேற்றைச் சிறிது வாரி மஞ்சி ஓரங்களில் இலேசாக அணை கட்டவேண்டும். இதற்குக் **கங்கு கட்டுதல்** என்று பெயர். தோட்டக்காரர்கள்

மஞ்சிகளின் மேல் அங்கங்கே வாழைக் கன்றுகளை யும் வைத்துப் பயிராக்குவார்கள். வாழை நார் வெற்றிலையைக் கட்டாகக் கட்ட உதவும். கொடி நட்ட பத்து மாதங்களுக்கெல்லாம் வெற்றிலையைக் கிள்ள ஆரம்பிக்கலாம்.

காய்கறிகள் :—காய்கறித் தோட்டங்களில் கத்தரி, வெண்டை, அவரை, கொத்தவரை, பீர்க்கு, புடலை, சுரை, பூசனி முதலிய காய் வகைகளும் கீரைவகைகளும் பெரும்பான்மையாய்ப் பயிராகின்றன. நிலத்தை உழுது எருவிட்டு மஞ்சிகட்டி நீர் பாய்ச்சிக், கத்தரி நாற்றுக்களை அம் மஞ்சிகளின் மேல் நடுவார்கள். வெண்டை, கொத்தவரை ஆகிய இவற்றை விதைகளாகவே ஊன்றிவிடுவார்கள். அவரை, பீர்க்கு, புடலை ஆகியவற்றின் விதைகளை, வெட்டி எருவிட்ட குழிகளில் ஊன்றி, நீர் விடுவார்கள். குழிகளுக்குமேற் பந்தல் வேய்ந்து, அதன் மேல் அக்கொடிகளைப் படர விடுவார்கள். சுரை, பூசனி ஆகியவற்றின் விதைகளையுங் குழிவெட்டிப் போட்டே பயிராக்குவார்கள். இக் கொடிகள் தரையிலேயே படரும். இவை இரண்டுமுதல் நான்கு அல்லது ஐந்து மாதங்களிற் பூத்துக் காய்க்க ஆரம்பிக்கும். கீரை விதைகளைப் பாத்திகளில் தெளித்துப் பயிர் செய்வார்கள். இவைகள் எல்லாம் ஆறு முதல் எட்டுமாதப் பயிர்களே.

இப்போது இருப்புப்பாதைத் தொழிற்சாலைகள், பஞ்சாலைகள், அச்சுக்கூடங்கள், பலசரக்குக்

கிடங்குகள், அலுவற் சாலைகள், பெரிய பெரிய வாணிப நிலயங்கள், துறைமுகத் தொழிற்சாலைகள் முதலியன நகரங்களில் மிகுதியா யிருக்கின்றன. நாட்டுப்புறங்களினின்றும் ஆட்கள் இச் சாலைகளில் வேலை செய்யக் கும்பல் கும்பலாய்ப் போய்விடுகின்ற மையால், கிராமங்களிற் பயிர்த்தொழில் சீரழிந்து கிடக்கின்றது. தோட்டக்கால் பயிர் என்பது காண்பதற்கு அரிதாகிவிட்டது. மக்கள் தங்கள் ஊரிலேயே இருந்துகொண்டு வழக்கம்போல் வேலை செய்து உடல் நலம் பேணி உயிர் வாழ்வதை விட்டு, நகரங்களுக்குச் சென்று அடிமைகளைப்போல் ஊழியஞ் செய்துகொண்டு, இழிவான குடித்தனம் செய்வதற்குக் காரணம் யாதோ! கிராமங்களில் தோட்டக்கால் பயிர்களுக்கு மிக்க அநுகூலமான புன்செய் புறக்கடைக ளெல்லாம் புறக்கணிக்கப் பட்டுப் பாழாய்க் கிடக்கின்றன. ஒருவன் குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு புறக்கடையே போதும்! பண்டுதொட்டுப் பயிர் செய்யப்பட்டுவரும் தோட்டக் கால்களே இயற்கைத் தொழிற்சாலைகளாகும்.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a)	**உடையவன்**	**விளிம்பு**	**கங்கு**
	மஞ்சி	**கிடங்கு**	**புறக்கணித்தல்**
	கொத்தடம்	**சேர்வை**	**அநுகூலம்**

(b) சொறசொறப்பு இடையிடுதல் உடல் நலம்
பெரும்பான்மை பதிபோடுதல் கொத்தவரை
சிறுபான்மை வாணிப நிலயம் சீரழிதல்

எழுவாயோடு ஆல் சேர்ந்தால் மூன்றாம் வேற்றுமை—

1. நிலத்தில் மக்களால் விதைவிதைக்கப்படுகிறது. இங்கே 'மக்களால்' மூன்றாம்வேற்றுமை. மரத்துக்கு மூங்கில்களால் முட்டுக்கள் கொடுக்கலாம். இங்கே மூன்றாம் வேற்றுமைச் சொல் எது?
2. வெற்றிலைப் பயிர் செய்வதெப்படி

OF BOOKS
7 - FEB 1940
MADRAS

———

7. இரக்கமுள்ள இளைஞன்

மூத்து முதிர்ந்து நரைத்துத் திரைத்து
முதுகு வளைந்த கிழவி
காற்றும் மழையும் வீசி அடிக்கக்
கலங்குகின்றாள் வழியில் 1

குளிரில் நடுக்கம் கொண்டு கையில்
கோலை யூன்றிச் சென்றாள்
கொடிய மழையின் இடிக்குப் பயந்து
குமுறிப் பதைக்கும் நெஞ்சாள் 2

வயது தளர்ந்து வலிமை குறைந்து
வாடி மெலிந்த நடையாள்
வருத்தும் மழையில் இருக்க நேர்ந்த
வாட்டம் பெரிதும் உடையாள் 3

ஓய வில்லை ஒழிய வில்லை
ஓரே வேகம் மழையே
ஒருவர் கூட அறிய வில்லை
ஓ, ஓ ! கிழவி நிலையே ! 4

மிகுந்து வானம் பொழியப் பயந்து
வெருண்டு நின்று கொண்டாள்
விரைந்து பலபேர் அவளை உராய்ந்து 5
வேக மாகச் சென்றார்.

பள்ளிக் கூடம் விட்ட உடனே
பாலர் செல்லுங் கூட்டம்
பக்கத் திருந்த கிழவித் துன்பம்
பாரா தெடுத்தார் ஓட்டம் ! 6



பனித்த விழியும் நனைந்த துணியும்
பார்க்கச் சோர்ந்த நிலையே !

பாவம் ! கிழவிக் குதவி புரியப்
பாலர் யாரும் இலையே ! 7

அப்போ தருகில் ஓடும் குதிரை
வண்டி அவளின் மீதே
அடித்து மோதக் கிழவி வீழ்ந்தாள்
ஆ, ஓ! அந்தப் போதே! 8

விழுந்த அவளைக் காணப் பலபேர்
வேக மாக மொய்த்தார்
விரைந்து உதவி செய்ய யாரும்
விரும்பி மனது வையார் ! 9

அங்கு வந்த இளைஞர் கூட்டத்
தறிவில் ஒருவன் உயர்ந்த
அவளைச் சூழ்ந்த அனை வரையும்
அகற்றி உதவி புரிந்தான். 10

பயிற்சி

ஒரு கிழவிக்கு நேரிட்ட நிகழ்ச்சியை இப்பாடம் கூறுகிறது. ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு வாக்கியமாக அந்நிகழ்ச்சியைச் சுருக்கி எழுதுக.

---

8. உடன்வாழ் உயிர்கள்

பசுமாடு :—பசுமாடுகள் பயிரிடுங் குடிகட்குப் பலவழிகளிற் பயன் படுபவை. பசுவின் பால் சிறப்பாகக் குழந்தைகட்கும் நோயாளிகட்கும், பொதுவாக மக்கள் யாவருக்கும் உடல் நலத்தையும், உறுதியையுங் கொடுக்கும். பசுவின் சேங்கன்றுகள் உழவர்களுக்குச் சிறந்த உழைப்பாளிகளாம். பசுமாட்டின் சாணத்தினல் வீட்டை மெழுகுவது சுகாதாரத்துக்கு நல்லது. அச் சாணமே சிறந்த உரமுமாகும். மேல் நாடுகளிற் குடிகள் பயிர் வேலைக்குக் குதிரைகளையே பயன்படுத்திக்கொள்கிறபடியால் அவர்கள் பசுவின் சேங்கன்றுகளைக் கொன்று தின்றுவிடுகிறார்களாம். அந்தோ ! இஃது என்ன கொடுமை! நமது நாட்டிலும் பட்டினங்களிற் பசுவின் பால் விற்போர், கன்றுக்கு விடாமலே பாலைக் கறந்துகொள்கின்றார்கள்! அதனல் அக்கன்றுகள் இரண்டொரு திங்களிலேயே இறந்துபோய்விட, பசுக்களுக்குப் பொய்க்கன்றுகளைக் காட்டிப் பால் கறக்கின்றார்கள். அப்படிப்பட்ட பசுவின் பாலை மக்கள் வாங்கி அருந்துவது கொடிய தீவினையே யாகும். இவ்வாறெல்லாஞ் செய்யாமல் பயிர் செய்யுங் குடிகள் பசுமாடுகளை மிகக் கவலையோடு பாதுகாக்க வேண்டும்.

ஆடுகள் :—ஆடுகள் பெரும்பாலும் வெள்ளாடு செம்மறியாடு என இருவகைப்படும். இவை குடி

யானவர்களுக்குப் பசுமாட்டுக்கு இரண்டாவதாக உதவியாயிருப்பவை. ஆட்டின் சாணம் பசுமாட்டின் சாணத்திலும் சிறந்த உரமாகும். ஆகையாற் குடிகள், நிலங்களில் இராக்காலத்தில் ஆட்டு மந்தைகளை மடக்கி வைத்துப் பிறகு உழுவார்கள். மழை காலங்களில் ஆடுகளைக் கிராமத்திற்குள் கொட்டில்களில் அடைத்துவைத்துச் சாணத்தை வாரிக் குழிகளிற் சேர்த்துப், பிறகு கழனிகளுக்குக் கொண்டுபோய்க் கொட்டுவார்கள். வெள்ளாட்டுப் பால் நோயாளிகட்குப் பத்தியப் பொருளாக உதவும்; ஆட்டு நெய்யும் அப்படியே. ஆடுகளையும் குடியானவர்கள் கவலையுடன் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு குடியானவனுக்கும் ஆட்டுமந்தை இன்றியமையாததாம்.

எருமைகள் :—மூன்ருவதாகக் குடிகளுக்குப் பயன்படக்கூடியவை எருமைகள். எருமையின் பாலைக் காய்ச்சித் தயிராக்கி வெண்ணெய் எடுப்பார்கள். வெண்ணெயைக் காய்ச்சினல் நெய்யாகும். எருமைத் தயிரும் மோரும் உணவாகப் பயன்படுகின்றன. பசுநெய் கிடைப்பது அருமை யாகையால் எருமை நெய்யே பெரும்பாலும் மக்களால் உணவுடன் சேர்த்துக்கொள்ளப் படுகின்றது. எருமைப் பால் பத்தியத்துக்கு உதவாது. நாட்டுப் புறங்களினின்றும் பட்டினங்களிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளுக்குக் குடங்குடமாய்க் கொண்டுபோய் விற்கப்படுவது எருமைப் பாலே. எருமைச் சாண

முங் கழனிகளுக்கு நல்ல எருவாகும். எருமைக் கடாக்கள் சுறுசுறுப்பற்றவைகளானாலும், ஊன்றி வேலை செய்யும் வலி வுடையன. எருமைகளை எரு மாடு எனவும் வழங்குவார்கள்.



குதிரைகள்:—நமது நாட்டில் மேல் நாடுகளிற் போலக், குதிரைகளைப் பயிர்வேலைக்குப் பயன் படுத்துகிறதில்லை. பட்டினங்களிலும், பெரிய ஊர் களிலும் பணக்காரர்கள் குதிரைகளை வண்டியிற் பூட்டி யோட்டுவார்கள். மின்சார வண்டிகளும், உந்து வண்டிகளும் மிகுதியாய்விட்டன வாதலால், இப் போது ஏழைகள் சிலர் குதிரை வண்டிகளைக் கூலிக்கு ஓட்டிப் பிழைக்கின்றார்கள். உத்தியோகஸ் தர்கள் குதிரைகளின் மேலேறிச் செல்கிறார்கள்.

அராபியாவில் மக்கள் குதிரைகளைத் தங்கள் பிள்ளைகளைப்போன்று, ஊட்டிப் பாதுகாத்து வருகின்றனர். அந் நாட்டினருக்கு அவை பல வழிகளிற் பயன்படுகின்றன. அங்கு, குதிரைவாணிகம் சிறப்பாக நடந்து வருகின்றது. அராபிக் குதிரைகள் வீட்டாரிடத்தில் மிக்க அன்புகொண்டவை. மக்கள் போர்க்களங்களிலும் குதிரைகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

கழுதைகள் :—கழுதைகள் பளுவான சுமைகளைத் தாங்கிக்கொண்டு போகும். வண்ணார் பெரிய பெரிய அழுக்குத்துணி மூட்டைகளையும், சலவைத் துணி மூட்டைகளையும் கழுதைகளின்மேற் போட்டுக் கொண்டு போவார்கள். ஊர் சுற்றித்திரிந்து காலங் கழிக்குங் கழைக்கூத்தாடியர் முதலிய ஏழைப் பிச்சைக்காரக் கூட்டத்தார் தங்கள் கூடாரச் சாமான்கள், தட்டுமுட்டுகள் முதலியவைகளைக் கழுதைகளின்மேல் ஏற்றி நடத்திக் கொண்டு போவார்கள். கழுதையை வைத்துக்கொண்டிருப்பவர்கள் அவற்றிற்குத் தீனி தேடிப் போடுவதில்லை. அவை தாமாகப் புல்லை மேய்ந்து உயிர் பிழைத்திருக்கும். கழுதையில் ஒருவகை, கோவேறு கழுதை என்பது. அது பட்டாளத்திற் பலவகையிற் பயன்படுகிறது.

நாய்கள் :—குடியானவனுடைய வீட்டிலும் வயல்களிலும், அவனையும் அவன் சொத்துக்களையுங் காவல் செய்ய நாய்கள் உதவுகின்றன. நாய்கள்

தமது கூரிய மோப்பத்தால் தொலைவில் திருடர் வருகையைக் கண்டுபிடித்துக்கொள்ளும். நாய்கள் இராவிட்டாற் குடியானவனுடைய மந்தையிலுள்ள ஆடுகளைத் திருடர்கள் வெகு எளிதிற் கொண்டுபோய் விடுவார்கள். வளர்ப்போரிடத்தில் அன்பு வைத்திருக்கும் வீட்டு விலங்குகளில், நாய்கள் தலைசிறந்து விளங்குகின்றன. நாய்கள் மக்களைக் கேட்டினின்றும் காப்பாற்றினதாகப் பல உண்மைக் கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நாய்கள் எங்கே தவறிப் போய்விட்டாலும், வீட்டைத் தேடிக் கண்டுபிடித்துக்கொள்ளும்.

பூனைகள் :—நாய் ஒரு வீட்டில் உள்ள மக்களை விரும்ப, பூனையோ அவ்வீட்டையே விரும்பும். ஒரு வீட்டில் உள்ளவர்கள் வேறொரு வீட்டிற்குக் குடி போய்விட்டாலும், பூனை நாயைப் போல அவர்களோடு போய்விடாமல், அங்கேயே தங்கிவிடும். ஆயினும், பூனையால் மக்கட்கு உண்டாகும் உதவி யாதென்றால், வீட்டில் உள்ள தின்பண்டங்களைத் தின்றுவிடும் எலிகளை அது கொல்லும். ஆனாலும் பால் முதலியவற்றைப் பூனை துணிவாக உட்கொண்டு விடும். அறிவுள்ள நாய்கள் அவ்வாறு செய்யா.

பன்றிகள் :—பன்றிகளை ஊர்த் தோட்டிகள் என்று சொல்லலாம். மலம் முதலிய அழுக்குக்களைத் தின்று அவை ஊரைத் துப்புரவாக்குகின்றன. அவற்றைக் குறவர்கள் வளர்க்கின்றார்கள். அவை நிலங்களைத் தங்கள் மூக்கினால் தோண்டி, ஆங்

குள்ள கிழங்குகளை உணவாகக் கொள்ளும். பன்றி மலமும் சிறந்த எருவே.

கோழிகள் :—பன்றிகள் ஊர் வெளிகளிலுள்ள அழுக்குக்களைத் தின்றொழித்து விடுவதுபோல, கோழிகள் வீட்டின்கண்ணுந் தெருக்களின்கண்ணு முள்ள அழுக்குக்களைக் கொத்தித் தின்றொழித்து விடும். சேவற்கோழிகள் கொக்கரித்துக் கூவிக் குடியானவனுக்கு வைகறை நேரத்தைக் காட்டும். அவன் விடியற்காலத்திற் கோழி கூவ எழுந்து, தன் வேலைமேற் செல்வான்.

இந்த உடன்வாழ் உயிர்களைக் குடியானவர்களும் ஏனையோரும், தம் மக்களைப்போற் பாது காத்து வரவேண்டும். அவர்கள் அவ்வாறு செய்வார்களாயின், அவைகள் பல்கிப் பெருகி அவர்களுடைய அழியாச் செல்வத்துக்கும், குறையா மகிழ்ச்சிக்குங் காரணமாகும்.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a)	உழைப்பாளி	பட்டாளம்	பகுத்தல்	தொகுத்தல்
	அந்தோ	கொக்கரித்தல்	ஓம்புதல்	துப்புரவு
(b)	பொய்க் கன்று		ஊன்றிச் செய்தல்	
	மந்தை மடக்குதல்		மின்சார வண்டி	
	சிற்றுண்டிச்சாலை		போர்க்களம்	
	குடம் குடமாக		கழைக்கூத்தாடி	

1. குடிகள்—எழுவாய்ச் சொல்; அதனோடு 'கு' சேர்ந்தால் குடிகட்கு என்று ஆகும். இது நான்காம் வேற்றுமை.

நோயாளிகளுக்குப் பத்தியம் பண்ணவேண்டும்—இதில் நான்காம் வேற்றுமைச் சொல் எது ?

2. இப்பாடத்தில் முதல் நான்கு வேற்றுமைகளைக்கொண்ட சொற்கள் இரண்டிரண்டு எடுத்துக்காட்டு.

3. வீட்டு விலங்குகளிற் சிறந்தவை எவ்வெவை? ஒவ்வொன்றினு லுண்டாகும் ஒவ்வொரு சிறந்த பயனைத் தெரிவி.

---

9. சர்க்கரை எடுத்தல்

சிறு பிள்ளைகளாகிய நீங்கள் சில பண்டங்களை அதிக ஆவலுடன் உண்கிறீர்கள். பழம் என்றால் பதைக்கின்றீர்கள், தேன் என்றால் நாக்கைத் தட்டுகின்றீர்கள், தெருவில் மிட்டாய் விற்றுக்கொண்டு வந்தால் வீட்டில் வம்பு செய்து அழுது அதனை வாங்கிக்கொடுக்கச் சொல்லுகின்றீர்கள். ஏன் ? அவைகள் உண்பதற்குத் தித்திப்பாய் இருக்கின்றன. அவைகள் ஏன் தித்திப்பாய் இருக்கின்றன ? அவைகளிற் சர்க்கரை கலந்திருக்கின்றது. சர்க்கரை உடம்புக்குச் சூடு கொடுக்கின்றது; சுறுசுறுப்பை உண்டாக்குகின்றது. அது குழந்தைகளின் வளர்ச்சிக்கு வேண்டிய முக்கியமான பொருள்களில் ஒன்று. ஆகையினாலேதான் இயற்கையிற் குழந்தைகள் சர்க்கரை சேர்ந்த இனிப்புப் பண்டங்களையே பெரும்பாலும் தின்ன மிக விருப்பம் கொள்ளுகின்றன.

இயற்கையிலேயே சர்க்கரை அதிகமாகக் கலந்துள்ள பொருள்களினின்றும், சர்க்கரையைத்

தனியே பிரித்து எடுக்கலாம். கரும்பை வெட்டித் துண்டு துண்டாக நறுக்கி நீங்கள் மென்று சாற்றை விழுங்கித் திப்பியை உமிழ்ந்து விடுகின்றீர்கள் அல்லவா? கருப்பஞ்சாற்றில் அதிகமாகச் சர்க்கரை இருப்பதினாலேதான், அதனை நீங்கள் மிகவும் விரும்புகின்றீர்கள். அந்தக் கருப்பஞ் சாற்றினின்றுதான் நமது நாட்டிற் பெரும்பாலுஞ் சர்க்கரை செய்கின்றார்கள்.

கரும்புக் கோலிலுள்ள கணுக்களை நீங்கள் பார்த்திருக்கின்றீர்கள். கரும்புக் கோலை ஒவ்வொன்றிலும் இரண்டொரு கணுக்கள் இருக்கும்படி துண்டு துண்டாக வெட்டி, அவைகளை உழுது மஞ்சியிட்ட நிலங்களில் அம் மஞ்சிக் கால்களில் நட்டு நீர் பாய்ச்சுவார்கள். கரும்புத் துண்டுகளின் கணுக்களிலுள்ள அரும்புகளினின்றும் முளை கிளம்பிச், செடிகள் நீண்ட இலைகள் விட்டு வளர்கின்றன. இச் செடிகளின் தண்டுகள் அல்லது கோல்கள் ஓராண்டுக் காலத்தில் ஆறு முதல் பன்னிரண்டு அடி நீளமும், ஓர் அங்குலம் முதல் இரண்டங்குலம் கனமுமுடையனவாக வளர்ந்து முற்றிவிடுகின்றன.

முற்றின கரும்பை வெட்டி, மக்கள் ஆலைக்குக் கொண்டு போவார்கள். தழைகளைப் போக்கிக் கருப்பங் கழிகளைத் துண்டுகளாகத் தறித்து ஆலையிற் கொடுப்பார்கள். ஆலையிற் பெரிய உருளைகள் உண்டு. அவ்வுருளைகள் சுழன்று சுழன்று கரும்பை நசுக்கச் சாறு வெளி வந்து அண்டையில் வைத்

திருக்குஞ் சாலில் விழும். இந்தச் சாற்றிற் சுண்ணும்பு சேர்த்துத் தெளியவைத்து வடிகட்டிப், பிறகு சிறிது கந்தகம் சேர்த்துக் கலக்கினுற், சாறு அழுக்கு நீங்கிச் சுத்தமாகும். பிறகு மக்கள் இந்தச்



கரும்பாலை

சாற்றை வாயகன்ற அண்டாக்களில் ஊற்றிக் காய்ச்ச, சாறு வற்றிப் பாகு பதமாக வரும். அப்போதுஞ் சிறிது சுண்ணும்புநீர் தெளிக்க, அழுக்கெல்லாம் பிரிந்து நுரையாக மேலே பொங்கி எழும்பும். அந்த அழுக்கை எடுத்துவிட்டுப் பாகை இன்னும் நன்ருகக் காய்ச்சிச் சிறு தொட்டிகளில் விட்டு வைப்பார்கள். இத் தொட்டிகளிற் பாகு ஆறிக் கட்டிகளாகும். இக் கட்டிகளே பழுப்புச் சர்க்கரை அல்லது நாட்டுச் சர்க்கரை என்று சொல்லப்படும்.

இந்தப் பழுப்புச் சர்க்கரையை மறுபடி சில ரசாயனப் பொருள்கள் சேர்த்து நீரிற் கரைத்துத் தெளிய வைத்து, வடிகட்டிச் சுத்தமாக்கி, ஒரு கொப்பரையில் விட்டுக் காய்ச்சினால், அது பதப்பட்டு வெள்ளைச் சர்க்கரை ஆகும். இதுவே சர்க்கரை செய்யும் விதம்.

கரும்பு அதிகமாகப் பயிராகும் இடங்களிலெல்லாம் நாட்டுச் சர்க்கரை வீட்டுத் தொழிலாகச் செய்யப்படுகிறது. முக்கியமாக இத் தொழில், சேலம் ஜில்லாவிற் பல ஊர்களில் நடத்தப்பட்டு வருகின்றது. கரும்பு ஏராளமாய்ப் பயிர் செய்யப்படும் பீகார் மாகாணத்திலும் மைசூரிலும், தமிழ் நாட்டின்கண் நெல்லிக்குப்பத்திலும் பெரிய இயந்திர சாலைகளில் வெள்ளைச் சர்க்கரை செய்யப்படுகிறது.

இன்னும் சில நாடுகளிற், **பீட்** என்னும் ஒரு வகைக் கிழங்கினின்றுஞ் சர்க்கரை செய்கிறார்கள். இந்தக் கிழங்குகள் மண்ணில் விதையிட்டுப் பயிர் செய்யப்படுகின்றன. கிழங்கு முற்றிய பின், மக்கள் அவைகளைத் தோண்டி எடுத்துச் சிறுசிறு துண்டுகளாகச் சீவித் தொட்டிகளிற் போட்டு வெந்நீரில் ஊற வைப்பார்கள். பிறகு அந்நீர் வெல்லப் பானகம்போல் ஆய்விடும். மக்கள் அப் பானக நீரைக் கருப்பஞ் சாற்றைப் போலவே, பொருள்களைச் சேர்த்துக் கலக்கிக் காய்ச்சித் தொட்டிகளில் ஊற்றி ஆறவைத்துச் சர்க்கரை செய்வார்கள்.

இச் சர்க்கரையும் முதலிற் பழுப்பாகவே காணப்படும். கரும்பின் பழுப்புச் சர்க்கரையைப் போலவே, பீட் சர்க்கரையையும் மறுபடியுங் காய்ச்சி வெள்ளைச் சர்க்கரை ஆக்க வேண்டும்.

மற்றும் பனை மிகுதியாயுள்ள இடங்களிற் பனஞ்சாற்றையுஞ் சுண்ணும்பு சேர்த்துத் தெளிய வைத்துக் காய்ச்சிச் சர்க்கரை எடுக்கிறார்கள். இதற்குப் பனைவட்டு அல்லது பனைவெல்லம் என்று பெயர். பனைவெல்லமும் நிறத்திற் பழுப்புச் சர்க்கரைபோலவே மங்கலாயிருக்கும். இது தெலுங்கு நாட்டிற் கோதாவரி ஜில்லாவிலும், தமிழ் நாட்டில் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிலும் மிகுதியாய் நடந்துவரும் வீட்டுத் தொழிலாம். தெற்கே தக்கலையிலும், திருநெல்வேலியிலும் வடக்கே சாமல்காட்டிலும் பெரிய இயந்திர சாலைகளில் இவ்வாறு பனஞ்சாற்றினின்று எடுக்கப்படும் வெல்லம் சுத்தி ஆக்கி வெள்ளைச் சர்க்கரையாகச் செய்யப்படுகின்றது. பனைவெல்லத்தை மறுபடி காய்ச்சிப் பனங் கற்கண்டுஞ் செய்கிறார்கள். வெள்ளைச் சர்க்கரையை மறுபடியுங் காய்ச்சினால் வெள்ளைக் கற்கண்டு ஆகும்.

முன் காலத்திற் சர்க்கரை என்றால் அருமை. அதுவும் வெள்ளைச் சர்க்கரை மிகவும் அருமையாக இருந்தது. நமக்கு வரும் வெள்ளைச் சர்க்கரையெல்லாம் வெளிநாடுகளிலிருந்து—முக்கியமாக ஜாவாவிலிருந்து வந்துகொண்டிருந்தது. அக் காரணத்தி

ளுல் விலையும் அதிகமாக இருந்தது. இப்போதோ, சர்க்கரை நம் நாட்டில் எந்த வீட்டிலும் வாங்கப்படு கின்றது. நம் நாட்டிற் பற்பல இடங்களிற், கரும்பு, தோட்டங்களில் பயிர் செய்யப்படுகின்றது. கரும் பாலைகள் ஆடுகின்றன. பெரிய இயந்திர சாலைகளி லும் சர்க்கரை செய்யப்படுகின்றது. அத் தொழிற் சாலைகளின் எண்ணிக்கையும் இப்போது பத்து ஆண்டுகளாய்ப் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. முன், மிக்க விலையாயிருந்த சர்க்கரை இப்போது மிகவும் மலிவாய்க் கிடைக்கின்றது. பார்த்தீர்களா! கைத்தொழிலினுல் வரும் நன்மையை!

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a) **மலிவு** **சால்** **கொப்பரை** **இனிப்பு**
எண்ணிக்கை **அண்டா** **உமிழ்தல்** **பதைத்தல்**

(b) **வம்பு செய்தல்** **மஞ்சிக்கால்** **பதப்படுத்தல்**
கருப்பஞ்சாறு **பாகுபதம்** **வீட்டுத் தொழில்**

1 சர்க்கரை நமது உடல் நலத்துக்கு அவசியம் வேண்டியதா?

2. கரும்புக்கோல்களினின்று சர்க்கரை செய்யும் விதத்தை இரண்டு பத்தியில் எழுது.

3. பலவித சர்க்கரைகள் எவை? அவை எங்கெங்கே செய்யப்படுகின்றன?

4. எழுவாய்ச் சொல்லோடு, **இலிருந்து**, **இனின்று** என்பவைகளைச் சேர்த்தால் ஐந்தாம் வேற்றுமை ஆகும். கரும்பிலிருந்து சர்க்கரை செய்யப்படுகிறது. இங்கே

கரும்பிலிருந்து—ஐந்தாம் வேற்றுமை; கரும்பினின்று என்றும் சொல்லலாம். பனஞ்சாற்றிலிருந்து அல்லது பனஞ்சாற்றினின்று சர்க்கரை செய்யலாம்—இந்த இரண்டும் ஐந்தாம் வேற்றுமை. ஐந்தாம் வேற்றுமைக்குப் பாடத்திலிருந்து இன்னோர் உதாரணம் கொடு.

---

10. தமிழகம்

பிள்ளைகளே! நாம் பேசும் மொழி தமிழ்; நம் தாய் தந்தையர் பேசும் மொழி தமிழ்; சிறு குழந்தைகளாய் இருந்த நம்மை நம் அன்னைமார் பாலூட்டித் தாலாட்டி வளர்த்தபோது, நம்மோடு பரிவுடன் பேசிய மொழியும் தமிழ். இத் தமிழ் மொழியினைப் பேசும் மக்கள் வாழ்ந்து வரும் நாடு தமிழகம்.

ஆகவே இத்தமிழகத்தின் இப்போதைய எல்லையை நீங்களே சொல்லக்கூடும். அதாவது: வடக்கே திருவேங்கடம் என்று சொல்லப்படுந் திருப்பதி முதல் தெற்கே கன்னியாகுமரி வரையும், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கிழக்கே கடல் வரையும் பரந்து விரிந்து கிடக்கும் நாடே தமிழகம்.

ஆனால், பண்டைக் காலத்தில் தமிழகம் இதனினும் பரந்து விரிந்து கிடந்த ஒரு பெரும் நிலப்பிரிவாய் இருந்தது என்பதை, நாம் பழைய நூல்களிலிருந்து அறிகிறோம். தெற்கே தமிழகம் இப்போதிருக்குங் குமரி முனைக்குப் பல்லாயிரம் மயில்களுக்குந் தென்பக்கத்திற் பரந்து கிடந்தது. குமரி என்

னும் பெயரையுடைய ஓர் ஆறு, அங்குப் பல நூறு மைல்கள் ஓடிச் சென்று, கடலில் விழுந்துகொண்டிருந்தது.

எத்தனையோ பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு, தமிழகம், வடக்கே மத்திய இந்தியாவிலுள்ள விந்திய மலையிலிருந்து தென்புறம் பரந்து சென்று, இந்துப் பெருங் கடலின்கண், கிழக்கே ஜாவாத் தீவுமுதல் மேற்கே ஆப்பிரிக்காவின் அருகிலுள்ள மடகாஸ்கர் தீவு முடிய, நீண்டு அகன்று இருந்ததாம். இப் பூப்பிரிவின் பெரும்பகுதியைக் கடல் கொண்டுவிடத் தற்காலம் தென்னிந்தியாவும், இலங்கை, சாவகம், மடகாஸ்கர் ஆகிய சிறு தீவுகளுமே எஞ்சி நின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தென்னிந்தியாவினின்று பிரிவுபட்டுப் பல்லாயிரம் மைல்களுக்கப்பால் எஞ்சி நின்ற சாவக மடகாஸ்கர் தீவுகளில், மக்கள் மொழியும் நாகரிகமும் மாறுபட்டன. இக்கடல்கோள் ஒரு காலத்தே அன்றிப் பல முறையும் நடந்து, நாடுகள் சிறிது சிறிதாகக் கடல் கொள்ளப் பட்டிருக்க வேண்டுமென்று, நிலநூல் வல்லுநர் ஊகிக்கின்றனர்.

இக் கடல்கோளுக்குப் பிறகும், வடக்கேயும் மேற்கேயும் விரிந்திருந்த தமிழகத்தில் தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலிய மொழிகள் தோன்றிவிடவே, நாடு பல பிரிவுகளாய்விட்டது. ஆதலால், தமிழகம், தற்கால எல்லைக்குள் சுருங்கிக் காணப்படுகின்றது.

இத்தமிழகத்தின்கண், சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடைமன்னர் மூவர் ஆண்டுவந்தனர். கடல் கொண்ட நிலம் போக பாண்டிய மன்னர் ஆண்டுவந்த நாட்டில் அடங்கி யிருந்தவை, இப்போதுள்ள மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்கள். காவிரியாறு பாயும் திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாக்கள் சோழ நாட்டின்கண் அடங்கி யிருந்தன. சோழமன்னர்களிற் பெரும்புகழ் படைத்தவர்கள் அரசாட்சி புரிந்துவந்த காலத்திற், சோழ நாட்டின் வட எல்லை இந்தியாவிலே வெகுதூரம் வரை எட்டியிருந்தது. தமிழ் நாட்டில் தற்பொழுது மேற்கு ஓரத்தில் இருக்கும் பகுதியும், மலையாளம் ஜில்லாவும், கொச்சி திருவாங்கூர் என்னும் சுதேச நாடுகளும் சேர நாட்டில் அடங்கி யிருந்தன.

இம்மூன்று அரசர்களும் தமிழ்ப் புலவர்களைத் தக்க வழிகளிற் போற்றித், தமிழ் மொழியை வளம் பெறச் செய்து எங்குந் தமிழ் மணங் கமழும்படி செய்தனர். அவர்களிற் பாண்டிய மன்னர்கள் முதல் இடை கடை என்னும் புலவர்கள் நிறைந்த மூன்று தமிழ்ச் சங்கங்களைப் பல்லாயிரம் ஆண்டுகளாக நடத்தி வந்தனர். இம்மூன்று சங்கங்களின் வாயிலாகவந்த தமிழ் நூல்கள் பலதிறப்பட்டவைகளாய் இருந்தன. தமிழ் நாடு கடல் கொள்ளப் பட்டபோது, அவைகளிற் பல கடல் வெள்ளத்தில் அகப்பட்டு அழிந்தன. எனினும் எஞ்சி இதுவரை

நிற்குந் தமிழ் நூல்களின் எண்ணிக்கையுங் குறைவு பட்டதன்று.

திருக்குறள் என்று வழங்கும் திருவள்ளுவ நாயனர் இயற்றிய பல பொதுநீதிகள் அடங்கிய பெரு நூலானது, இக்கடைச் சங்க காலத்தில் வெளி வந்ததே. இதுபோன்று இச் சங்கங்களில் வெளி வந்த நூல்களில் இறந்தனபோக மிகுந்திருப்பன வாகிய இலக்கண இலக்கிய நூல்களும் நீதிநூல்களும் பற்பல.

இச் சங்க நூல்களினின்றும், தமிழர் நாகரிகத் தின் தன்மையினையும், வாழ்க்கை முறைமையினை யும், கைத்தொழிற் சிறப்பினையும், வாணிபப்பெருக் கினையும், இன்னும் வீரஞ்செறிந்த ஆண் பெண் மக் களின் துணிவுச் செயல்களினையும் பற்றிய பற்பலச் செய்திகளை அறிகின்றோம். தமிழரின் நாகரிகம் அக் காலத்தில் தலைசிறந்து விளங்கியது. மற்ற நாடு களிற் குடிகொண்டிருந்த மக்கள் காட்டுமிராண்டிக ளாயிருந்தபோது தமிழர், நாகரிகத்தில் விஞ்சி யிருந்தனர். வேளாண்மையும் நெய்தற்றொழிலும் தமிழகமெங்கும் செழித்தோங்கி வளர்ந்து வந்தன. தமிழர் மிகப் பழைய காலத்திலேயே அரேபியா, எகிப்து, யவனத் தீவுகள், உரோமாபுரி முதலிய இடங்கட்குத் தம் சரக்குகளை அனுப்பித் தரை மூல மும் கடல் மூலமும் வியாபாரஞ் செய்து ஏற்றம் பெற்றனர். இலட்சக் கணக்கான பொன்கள் வியா பாரத்தின் மூலம் தமிழ் நாட்டிற்குச் சென்று விட்ட

னவே என்று அக்காலத்து உரோமாபுரியில் மக்கள் தலைவர் துக்கித்தனராம்.

தமிழர் உள் நாட்டில் உழன்றும், வெளி நாடுகளுக்குச் சென்றும் ஏராளமாய் வியாபாரத்தொழிலை நடத்தி வந்தனர். அவர்கள் வாணிபப் பொருள்களில் மயிலிறகு, முத்து, தந்தம், மிளகு முதலியன முக்கியமானவைகளாகும். தொலை நாடுகளுக்குச் செல்ல வேண்டுமானால், தமிழ் வணிகர் பலர் ஒன்று கூடிக் கூட்டங் கூட்டமாகப் போவார்கள். அத்தகைய கூட்டத்துக்குச் **சாத்து** என்றும், அதனிற் சேர்ந்தவர்களுக்குச் **சாத்துவர்** என்றும் பெயர். கடலோடிச் சென்று வாணிபம் நடத்தும் தமிழர் **நாய்கர்** எனப்பட்டனர். அவர்களுடைய கப்பல்கள் கரிமுக அம்பி, பரிமுக அம்பி எனப் பெயர்கள் பெற்றன. யானை முகத்தையுடைய கப்பலைக் கரிமுக அம்பி என்றும், குதிரை முகத்தையுடையதனைப் பரிமுக அம்பி என்றும் வழங்கினர். ஐரோப்பாவின் தென்கீழ்ப் பகுதியிலுள்ள கிரேக்க நாட்டாரான யவனர்களிற் பலர், வாணிபத்திற்காகத் தமிழ்நாடு வந்து போயினர். அவர்களைப்பற்றிப் பழைய தமிழ்க் காவியங்களில் ஆங்காங்குப் பல செய்திகள் காணப்படுகின்றன. தமிழ்நாட்டிலிருந்து மேற்கு நாடுகளுக்குத் தமிழ் வணிகர்களாற் கொண்டுபோகப்பட்ட மயிலிறகைப்பற்றி, விவிலிய நூலிலும் பேசப்பட்டிருக்கின்றது. தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையிலிருந்த **காவிரிப்பூம் பட்**

டினமும், மேற்குக் கடற்கரையிலிருந்த **தொண்டி** என்னும் நகரும் அக்காலத்து ஏற்பட்ட கடற்றுறைப் பட்டினங்களாயிருந்தன. அத் துறைகளில் நிறைந்து கிடந்த ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகளைப்பற்றிப் பழைய தமிழ் நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. காவிரிப்பூம் பட்டினத்தில் அக்காலத்திற் கலங்கரைவிளக்கம் ஒன்றும் இருந்ததாகத் தெரிய வருகின்றது.

போர் புரியுந் தொழிலிலும் தமிழர் சிறந்து விளங்கினர். தமிழரசருடைய போர்க்களச் சிறப்புக்களும் முற்றுகை செய்யுஞ் சூழ்ச்சிகளும், ஒற்றர்களின் திறமை சான்ற செயல்களும் பழந்தமிழ் நூல்களிலே பற்பல இடங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. போர் வீரர்களின் மனவன்மையையும் துணிவுச் செயல்களையும், வீரமாதரின் வியக்கத்தக்க வரலாறுகளையும் அந்நூல்களிற் காணும்போது, நம் மனத்தின்கண் புது ஊக்கமும் வீரமும் பிறவாமற் போகா. போர்க்களத்தில் தன் மகன் இறக்க, மார்பிற் புண்பட்டான் என்றபோது மகிழ்ச்சி யடைந்து, முதுகிற் புண்பட்டானென்றபோது தன் மார்பைக் குத்திக் கொண்டு உயிர் விடுவாள் ஓர் அன்னை என்றால், அக்காலத்துத் தமிழ்ப் பெண் மக்களின் ஒப்புயர்வற்ற வீரத்தை என்னென்று சொல்வது!

தமிழகத்தின் அத்தகைய பழைய மேம்பாட்டினைத் திரும்ப அடைவது, இக்காலத்துள்ள தமிழ் மக்களின் கடமை அன்றோ!

பயிற்சி

கவனிக்க வேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a) பிரிவு ஊகித்தல் இலக்கியம் நாய்கர்
வல்லுநர் இலக்கணம் சாத்து காவியம்
ஏற்றுமதி இறக்குமதி

(b) மலைத்தொடர்ச்சி காட்டு மிராண்டி
நிலப்பிரிவு கடலோடுதல்
கடல்கோள் ஆங்காங்கு
எஞ்சி நிற்றல் கலங்கரை விளக்கம்
நிலநூல்

1. பழைய தமிழகம் எது? புதிய தமிழகம் எது?

2. பழந் தமிழரைப் பற்றிய சிறப்புக்களில் இரண்டு சொல்லு.

3. சாத்துவர், நாய்கர்—இவர்கள் யார் யார்?

4. பழந்தமிழர் சிறப்பை நாம் எப்படி அறிகின்றோம்?

5. எழுவாய்ச்சொல்லோடு **அது, உடைய** என்னும் உருபுகளைச் சேர்த்தால் ஆறும் வேற்றுமை ஆகும்—
திருவள்ளுவரது திருக்குறள். பாண்டியனுடைய நாடு.
இங்கே திருவள்ளுவரது, பாண்டியனுடைய என்பவை ஆறும் வேற்றுமைச் சொற்கள்.

6. ஆறும் வேற்றுமைச் சொற்கள் சொந்தமாக இன்னும் நான்கு சொல்லு.



11. குயில் பாட்டு

மாமரத்தின் கிளையில்—நின்று
மகிழ்ந்து இசை பாடி,
பூமணத்தை நுகரும்—ஓ!
பூவை இளங் குயிலே! 1.

சந்தனச் சோலையிலே—பாயும்
சந்திரன் வெள்ளொளியின்
விந்தை யினைப் பார்த்தே—அந்த
மேன்மையைப் பாடாயோ! 2.

வானந் தனைப்பார்த்து—நீயும்
வாய்திறந் தேதொனித்தால்,
வீணை முதலியன—உன்முன்
வீணல்லவோ குயிலே! 3.

இத்தனை இன்னிசையும்—நீ
யாரிடத்தே பயின்றாய்?
கற்ற இடந்தனைக் காணக்
காட்டாயோ குயிலே! 4.

உண்ண உணவளிப்பேன்—உனக்கு
உறங்கிடக் கூண்டளிப்பேன்
இன்னல் உனக்கியற்றேன்—மகிழ்ந்து
இறங்கி வாராய் குயிலே! 5.

வேடர்கள் இங்கே உளர்—பின்பு
வேறு பயம் எதற்கோ!
தேடி மிக அலைந்தேன்—உன்றன்
சித்தம் இரங்காயோ! 6.

புத்தமுதும் வேண்டேன்—நீ
புகலிசை கேட்டிருந்தால்!
நித்த முனை மறவேன்—சற்றே
நெஞ்ச மிரங்கா யோ! 7.

பயிற்சி

(1) குயிலைப்பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

(2) குயில் மாமரத்தின் கிளையில் இருக்கிறது—இங்கே கிளையில் ஏழாம் வேற்றுமை. இல், இடத்தில் என்பன அதற்கு உருபுகள். சோலையில், யாரிடத்தில்—இவையும் ஏழாம் வேற்றுமைச் சொற்கள்.

(3) குயிலே—இது எட்டாம் வேற்றுமை. இது மக்களைக் கூப்பிடுவதிலும் வரும். இதற்கு ஏ என்பது உருபு.

(4) ஏழாம் வேற்றுமை எட்டாம் வேற்றுமை கொண்ட சொற்களை அமைத்து இரண்டு வாக்கியங்கள் சொல்லு.

---

12. சுகாதார வழிகள்

1. குடிநீர்க் கிணற் றருகிற் குப்பை முதலிய தூய்மையற்றவற்றைச் சேர்த்துவைத்தல் கூடாது. அக் கிணற்றருகில் அழுக்கு நீர் தங்கவைக்கப் படாது. கிணற்றை அடிக்கடி தூர்வாரி இறைத்துக் கொண்டிருக்கவேண்டும். புறக்கடைகளில் வாலிபர்கள் ஒரு சிறு கறிகாய்த் தோட்டம் வைத்துப் பயிர் செய்தல் நல்லது. அதனாற் கிணற்றுநீர் அடிக்கடி தூய்மை யடையும்; பிள்ளைகள் உடற்பயிற்சிக்கும், குடும்பச் சிக்கனத்திற்கும் இடமுண்டாகும். காய்ச்சி ஆறவைத்த நீரே குடிநீராதற்குத் தக்கது.

2. அதிகாலையில் இரண்டு மூன்று நாழிகை வழிதூரம் நடந்துபோய்த் திரும்பிவந்து தண்ணீரில் தலைமுழுக வேண்டும். முழுகும்போது உடம்பின் மேல்தோலை நன்ருய்த் தேய்த்து, அழுக்கை அறப் போக்கவேண்டும். குளித்தபின் தூய்மையான ஆடைகளையே தரித்துக்கொள்ள வேண்டும்.

3. வேளைதோறும் ஒழுங்காக உணவுகொள்ளல் வேண்டும். கண்டபொழுதெல்லாம் சிற்றுண்டி கொள்ள லாகாது. சிற்றுண்டி விற்பவர்களிடஞ்

சென்று உணவு கொள்ளாதிருப்பது நலம்; ஏன்? அவர்கள் தூய்மையை மேற்கொள்வார்களென்பது அவ்வளவு உறுதியன்று. உணவு உடலின் தன்மையோடும், கால இயல்போடும் மாறுகொள்ளாததாக இருத்தல் வேண்டும். அதனை அளவுக்கு மிஞ்சியேனும் அற்பமாகவேனும் கொள்ளுதல் கூடாது. இரண்டு வேளை உணவு கொள்ளுதலே சிறந்தது. மூன்று வேளை உணவு அடிக்கடி நோய்க்குக் காரணமாகும். சோடா, காபி, தேயிலை முதலிய பானங்கள் உடல் நலத்திற்குக் கேடு பயப்பனவாகும்.

4. நாம் உட்கொள்ளும் காற்று தூய்மையுடையதாய் இருத்தல் வேண்டும். தூய்மையற்ற காற்று இரத்தத்தைக் கெடுக்கும். அதனல் நோய்கள் உண்டாகும். ஆகையால், வீடுகள் பல வாயில்கள் பலகணிகளோடு கூடிக், காற்று நுழைவதற்குத் தடையற்றனவாகக் கட்டப்படல் வேண்டும். ஒரே அறையிற் பலர் படுத்துறங்குதல் கூடாது. வீடுகளுள் சூரிய ஒளியும் தாராளமாய் உட்புகுதல் வேண்டும். பட்டினங்களிற் பலர் ஒரே அறையிற் குடியிருக்கிறுர்கள். அவ்வாறு செய்வது, அவர்களுக்கும் அவர்களுடன் குடியிருப்பவர்களுக்கும் நோயுண்டாக்கும்.

5. இருக்கும்போதும், நிற்கும்போதும், நடக்கும்போதும், வேலை செய்யும்போதும் உடம்பு குனிந்த நிலையிலிராமல் நிமிர்ந்த நிலையிலேயே

இருத்தல் வேண்டும். குனிந்த நிலை உடம்பை ஒடுக்கி நோயுண்டாக்கும். அது மூச்சைத் தாராள மாக இயங்கவிடாது.

6. பிள்ளைகள் வாய்திறந்து சிறிது சத்தத்துட னேயே படிக்கவேண்டும். பேச்சுப் பெருக்கம் கூடாது. எப்போதும் சொல்பவற்றைச் சுருக்கமாக வும் விளக்கமாகவும் சொல்லவேண்டும்.

7. உடல் மன முயற்சிகளுக் கேற்ப, மக்கள் இளைப்பாறுதல் வேண்டும். இளைப்பாறுவதற்கு ஏற்றது உறங்கி எழுதலே. இரவு ஏழரை நாழிகைக் கெல்லாம் படுக்கைக்குப் போய், விடிய ஐந்து நாழி கைக் கெல்லாம் கண் விழித்து, நாட் கடமைகளைச் செய்யத் தொடங்க வேண்டும். **சேமம் புகினும் யாமத் துறங்கு** என்றும், **வைகறைத் துயிலெழு** என்றும் பணித் துள்ளார் **ஔவையார்**. பகலில் தூங்குவது எவருக் கும் நோய் செய்யும். இரவில் நாடக மேடை முத லியவைகளுக்குச் சென்று கண் விழித்திருத்தல், உடலுக்கு ஒழியாத ஊறுபாட்டைக் கொடுக்கும். இரவின் முற்பாதியிற் கொள்ளும் சிறிது நேரத் தூக்கமே, அதன் பிற்பாதியிற் கொள்ளும் நெடுநேர நித்திரைக்குமேற் பலமடங்கு நல்லது. விடியற் காலத்தில் விழித்துக்கொண்டபின், மறுபடி உறக் கங் கொள்ளுதல் உடல் நலத்துக்கு ஒவ்வாது. உண்ட உணவு செரிக்குமுன் உறக்கங்கொள்ளுதல் கூடாது. முகத்தை மூடிக்கொண்டு தூங்குதல் மூச்சுப்பைக்கு ஊறுபாடு உண்டாக்கும்.

8. ஒரு வாரத்திற்கு இருமுறை உடல் முழுதும் எண்ணெயிட்டுச் சிகைக்காய் கொண்டு நனருய்த் தேய்த்துச் சுடுநீரில் தலைமுழுகுதல் வேண்டும். இதனால் உடலின் மேல்தோலிலுள்ள மயிர்க்கால் துளைகள் சுத்த மடைய, உள்ளே யிருக்கும் அழுக்குநீர் வெளியேறிவிட ஏதுவாகும்.

9. நோயடைந்திருக்கும்போது உடல் முயற்சியும் மன முயற்சியுங் கூடாவாம். நோயாளிகள் தமது நோய் நிலைமையை வைத்தியரிடத்தில் உள்ளபடி அறிவிக்க வேண்டும். அவர் கொடுக்கும் மருந்தை அமிழ்து என அன்போடு உட்கொண்டு, அவர் சொல்லும் பத்தியத்தின்கண் தவருது நிற்றல் வேண்டும். நோயாளியின் காதில் உரத்த ஓசை கேட்கப்படாது. அவன் இருக்கும் அறையிற் பல பேர் நடமாடுதல் கூடாது. அவனுடன் எவரும் அதிக நேரம் பேசிக்கொண்டிருத்தல் கூடாது. அவ்வறையிற் காற்று எப்போதுந் தூய்மையாகவே இருத்தல் வேண்டும். நோயாளியின் உடம்பும் உடையும் அடிக்கடி தூய்மை செய்யப்படல் வேண்டும். மக்கள் அவனேடு அன்புடன் பேசி அவனை எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்ய வேண்டும்.

10. உடற்பயிற்சியையும், அறிவுப் பயிற்சியையும் சமமாகச் செய்தல் வேண்டும். உடற்பயிற்சியை மிகக் கொண்டு அறிவுப்பயிற்சி ஒழிந்திருத்தலும், அறிவுப்பயிற்சியே மிகக்கொண்டு உடற்பயிற்சி

ஒழிந்திருத்தலும் பிள்ளைகட்குக் கூடாவாம். ஏனெனில், பயிற்சியடையாத உடல் நோயடைந்து, அறிவு வளர்ச்சி குன்றும் என்பதாம்.

11. உடல் நலத்தைப் பற்றியும், அறிவு வளர்ச்சியைப் பற்றியும் பிள்ளைகள் தாய், தந்தை, தம் முன்னோன், ஆசிரியர் ஆகிய இவர்கள் நிறுத்தும் வழியில் தவறாது நிற்றல் வேண்டும். இது, பிள்ளைகள், அறியாமையால் தாமே தேடிக்கொள்ளும் பல நோய்களைத் தடுக்கும்.

12. கோபம், பொறாமை, பொய்ம்மை, வஞ்சனை, முரட்டுத்தனம், செருக்கு, அடங்காமை, வீண் வேலைகளில் அவா வைத்தல், பிடிவாதம், செய்ய வேண்டிய கடமைகளைக் காலத்திற் செய்யாமை முதலிய தீமைகளைப் பிள்ளைகள் அறவே ஒழித்து, மனத்தின்கண் தூய்மை கொண்டிருத்தல் அவர்களுடைய உடல் நலத்துக்கும், அறிவு முதிர்ச்சிக்கும் அடிப்படையாகும்.

பயிற்சி

கவனிக்க வேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a) தூய்மை ஒவ்வுதல் இயங்குதல் அமிழ்து
வைகறை தம்முன்னோன் சேமம் செருக்கு
ஊறுபாடு அவா

(b) தூர்வாருதல் பேச்சுப் பெருக்கம்
அறப்போக்கல் உடல்மன முயற்சி
காலவியல்பு நாட்கடமை

1. இப்பாடத்திலுள்ள இடப் பெயர்களை எடுத்தெழுது.
2. உன் உடலை நோயினின்றும் பாதுகாக்க நீ என்னென்ன செய்வாய்?

சுகாதார வாக்கியங்கள்

1. சனிநீ ராடு.
2. இலவம் பஞ்சில் துயில்.
3. அனந்த லாடேல்.
4. நோய்க் கிடங்கொடேல்.
5. மனந் தடுமாறேல்.
6. மீதூண் விரும்பேல்.
7. வைகறைத் துயிலெழு.
8. சேமம் புகினும் யாமத் துறங்கு.
9. தையும் மாசியும் வையகத் துறங்கு.
10. பாலோ டாயினுங் கால மறிந்துண்.

---

13. நீரின் நிலை வேறுபாடுகள்

ஒரு சிரங்கைத் தண்ணீரை ஒரு சட்டியில் வார்த்து அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சினால், சிறிது நேரத்தில் அந்நீர் குறைந்து குறைந்து மறைந்து போகின்றது. ஏனெனிற், சட்டியிலிருந்த நீர் நீராவியாக மாறி மேலே கிளம்பி ஆகாயத்திற் காற்றோடு காற்றாய்ச் சேர்ந்துவிட்டதனாலே யாம். இதனால் நீரைவிட நீராவி இலேசானதென அறி கின்றோம்.

நாலா பக்கங்களிலும் நம்மைச் சூழ்ந்திருக்குங் காற்ருனது பல வாயுக்கள் சேர்ந்த ஒரு கலவைப் பொருளாகும். அது நம்மீது பட நாம் அதனை உணர்ச்சியினுல் அறியலாமே ஒழியக், காட்சியினுற் காணமுடியாது. கடற்காற்றில் நீராவி நிறைந் திருக்கிறபடியால், அது குளிர்ச்சியா யிருக்கின்றது. நிலக்காற்றில் நீராவி குறைந்திருக்கிறபடியால், அது வறட்சியா யிருக்கின்றது. மழைகாலத்திற் காற்று குளிர்ச்சியாகவும், வெயிற்காலத்திற் காற்று வறட்சியாகவும் இருப்பதை நாம் உணருகின்ருேம் அல்லமோ?

மிகுந்த குளிர்ச்சியினுல் தண்ணீர் கட்டியாகக் கெட்டிப்படுகின்றது. அந் நீர்க்கட்டி பளபளப்பான கல்லைப்போற் காணப்படுகின்றது; அதனைச் சம் மட்டியினுல் உடைத்துத் துண்டு துண்டாக்கலாம்; உளியினுலும் வில்லை வில்லையாகப் பேர்த்தெடுக்க லாம். ஒரு துண்டு நீர்க்கட்டியை உள்ளங்கையில் வைத்தாலும், அனலிற் காண்பித்தாலும் அஃது உருகி நீராக மாறும். நீர் ஆவியாகவும் மாறும் என்பதை நீங்கள் முன்பே அறிந்தீர்கள். இவ்வாறு நீர் என்னும் ஒரு பொருளே கெட்டித் தன்மையை யும், ஆவியின் தன்மையையும் அடைகின்றது. ஆகையால் நீருக்கு மூன்று வித நிலை வேறுபாடுகள் உண்டென்று அறிகின்றீர்கள்?

நீரைப் போன்றே நீராவியும் பலவித வேற்று நிலைகளை அடைகின்றது. வானிற் காற்றின்கண்

நிறைந்துள்ள நீராவியானது, குளிர்ச்சியினற் சிறிது இறுகி நீர்த்துளிகளாக மாறிப் பூமியின்மேல் மழையாகப் பெய்கிறது. அந் நீராவியே படிப்படியாக இறுகாமல், திடீரென மிக்க குளிர்ச்சியால் தாக்கப் பட்டால், அது நீர்த்துளிகளாகாமல் பனிப்படலங்களாக மாறி விடும். இவை பூமியின்மேல் விழுவதைத் தான் **பனி பெய்கிறது** என்கிறோம். பூமி வெப்ப மடைந்திருந்தால் இப் பனிப் படலங்கள் இறுகி நீராகி விடும். குளிர்ச்சியான தேசங்களிற் பனியே எப்போதும் பெய்துகொண்டிருக்கும். பனிப்படலங்கள் ஒன்றின்மேலொன்று தாக்க அடிப்படலங்கள் வரவரப் பனிக்கட்டிகளாக மாறிவிடும். வடகடலைச் சார்ந்த நாடுகள் அடிக்கடி பனிப்படலங்களால் மூடப்பட்டு விடும். அக் கடற்கரை யோரங்களிற் பனிக்கட்டிப் படலங்கள் மிதந்துகொண்டிருக்கும். அவைகளைப் **பனிக்கட்டித் தீவுகள்** என்பார்கள். அவைகளால் கப்பல்களுக்குக் கேடு நேரிடுவது முண்டு.

வானின்கண் ணுள்ள நீராவி சில வேளைகளில் இறுகிக் கூழாங்கற்கள் போலாகிப் பூமியின்மீது மழைபோல் விழுகின்றது. இதனைக் **கல்மழை** என்பார்கள். கன்மழை பட்டுக் கண்ணடிப் பலகணிகள் சுக்கல் சுக்கலாய் நொறுங்கிப் போய்விடும். சிற்சில வேளைகளில் இருப்புத் தகடுகளால் வேயப்பட்ட வீட்டுக் கூரைகளும் அதனற் பழுதுபடுதலுண்டு. தானியப் பயிர்களுக்கும் பழந்தரு மரங்கட்கும் அதனல் மிக்க கேடு விளைதலுங் கூடும்.

மழை காலத்தில் அதிகாலையில் மரஞ் செடி களிலுள்ள இலைகளின் மீதும், புல் நுனிகளிலும், பூக்களின் இதழ்களிலும் நீர்த்துளிகள் முத்துமுத் தாகச், சூரியன் ஒளியிற் பளபளத்துக் கொண்டிருக் கக் காணலாம். இவைகள் **பனித்துளிகள்** எனப்படும். நிலத்தை யொட்டிக் காற்றில் தங்கியிருக்கும் நீராவி குளிர்ச்சி யடைந்து, இவ்வாறு நீர்த் துளிகளாகக் காணப்படுகின்றது. சூரியன் வானின்கண் ஏறஏற, இவை ஆவியாக மாறி இருந்தவிடந் தெரியாமல் மறைந்துபோய்விடும்.

சில வேளைகளில் வானின்கண் ணுள்ள நீராவி சிறிதே இறுகி, நம் கண்களுக்குச் சாம்பல் பூத் தாற்போற் காணப்படுகின்றது. இதுதான் **மூடுபனி** எனப்படும். மழையின்கண் ணுள்ளவை நீராவியின் பெரு நீர்த்துளிகளாம். மூடுபனியின்கண் ணுள் ளவை நீராவியின் சிறு நீர்த் துளிகள். இச் சிறு நீர்த் துளிகள், வானத்திலிருந்து மிக மெதுவாகக் கீழே யிறங்கிக் காற்றிற் படர்ந்து மூடுபனி யுண்டா கின்றது. இந் நீர்த்துளிகள் காற்றில் மிக அடர்ந்து நின்றால், அதுவே **கன மூடுபனிப் படல** மாகும். காற்றின்கண், நீராவியை இறுகச் செய்யத்தக்க குளிர்ச்சி இல்லாமலும் அதனை வற்றச் செய்யத் தக்க வெப்ப மில்லாமலு மிருந்தால், மூடுபனிப் பட லங்கள் உண்டாகும். கன மூடுபனிப் படலங்கள் வானத்தை இருளச் செய்து, மக்கள் முகத்துக்கு முகம் பார்க்கவுங்கூடாமல், பூமியின்கண் ணுள்ள

மரஞ் செடிகளையும் மலைகளையுங்கூடக் கண்களுக்குத் தெரியாமல் மறைத்துவிடுகின்றன. குளிர்ச்சியான தேசங்களிலுள்ள பட்டினங்களில், மூடுபனியுள்ள பகல் வேளைகளில், வீடுகளிலும் வேலைச் சாலைகளிலும் விளக்கேற்றும்படி நேரிடுகின்றது. அக்காலங்களில், அங்கு மக்கள் மூடுபனிச் சட்டைகளை மேற்போர்த்துக் கொண்டுதான் வெளியிற் செல்லவேண்டும்.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a) **வறட்சி அடர்தல் நொறுங்குதல் சிரங்கை**

(b) **கலவைப் பொருள் பழுதுபடுதல் மூடுபனிச் சட்டை கன் மழை வேற்றுநிலை நிலக்காற்று சாம்பற்பூத்தல்**

1. இப்பாடத்தினின்றும், இடைச் சொற்கள் பத்து எடுத்துக்காட்டு.
2. பனி, பனிக்கட்டி, கன்மழை, மூடுபனி—இவற்றின் ஒன்றற்கொன்றுள்ள வேறுபாடுகள் யாவை?
3. ஏற்கெனவே வினைச் சொல் என்பது உங்களுக்குத் தெரியும்: அது முற்றுவினையாகவும் முற்றுத வினையாகவும் இருக்கலாம். முற்றுத வினைச் சொற்களில், வினைச்சொல் அல்லது வினைமுற்று—இவைகளைக் கொண்டு முடிவது வினை எச்சம். நீர் ஆவியாகமாறி மறைந்து போகிறது.—இங்கே 'மாறி' வினையெச்சம். இதுபோல் நீர்த் துளிகள் காற்றில் அடர்ந்து நிற்கின்றன.—இதில் அடர்ந்து வினையெச்சம். காற்றில் நீராவி நிறைந்து இருக்கிறது.—இதில் எது வினை எச்சம்?

14. திருவள்ளுவர்

தமிழகத்தைப்பற்றிப் படிக்கும்போது கடைச் சங்க காலத்தில் நூல் எழுதிய புலவர்களில் ஒருவர் திருவள்ளுவர் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இவர் பிறப்பு வளர்ப்புகளைப் பற்றித் திட்டமான செய்திகள் ஒன்றும் நமக்குக் கிடைத்தில. ஆதி என்னும் அம்மையாருக்கும் பகவன் என்னும் தந்தையாருக்கும் பிறந்தவர் இவர் என்பதும், கபிலர், ஔவையார் முதலிய அருந்தமிழ்ப் புலவர்களும் இவர் உடன்பிறந்தவர்கள் என்பதும் மாத்திரமே நமக்குத் தெரிகின்றன. பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பிறந்தபோதே அவ்வவ்விடத்திலேயே விட்டுப் போயினர் அப் பெற்றோர்கள். அவ்வண்ணம் சென்னை மயிலாப்பூரில் விட்டுப்போகப்பெற்ற இவர் அங்கு ஒரு வள்ளுவனால் எடுத்து வளர்க்கப்பட்டார். அது காரணம் பற்றியே இவர் பெயர் **திருவள்ளுவர்** என்று உலகில் வழங்கலாயிற்று.

வள்ளுவர் இளமையிலேயே தமிழ் நூல்களிற் பழகிக் கல்வியில் தேர்ந்து தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங்கினார். அக்காலத்தில் தமிழ்ப் புலவர்கள், அரசர்களையும் செல்வர்களையும் புகழ்ந்து பாடிப் பரிசு பெற்றுத், தமது உயிர் வாழ்க்கையை நடத்திக் கொண்டு வந்தனர். வள்ளுவர் அத்தகைய வாழ்க்கையை இழிவென்று கருதித் தள்ளி, உடலால் உழைத்து வரும் ஊதியங்கொண்டு உயிர் வாழ

திருவள்ளுவர்.

எண்ணினர். அவர் தமது வீட்டிலேயே நெய்யுந் தறி ஒன்று அமைத்து வைத்து, நெசவு தொழில் செய்துகொண்டு வந்தார். அந்நாட்களில் அந்த மயிலாப்பூரில் **ஏலேல சிங்கன்** என்னும் செல்வந்தனை பெரிய கப்பல் வணிகன் ஒருவன் இருந்தான். துணி நெய்வதற்கு வள்ளுவர் அவனிடஞ் சென்று நூல் வாங்கிக்கொண்டு வருவது வழக்கம். ஏலேல சிங்கன் வள்ளுவருடைய நாணயத்தையும் கல்விச் சிறப்பையுங் கண்டு, அவரைத் தனக்கு உற்ற நண்ப ராகவும், ஆசிரியராகவுங் கொண்டான்; அவர் அவ் வப்போது சொல்லும் புத்திமதிகளைக் கேட்டு, அவ ரிடம் பயபக்தியாக நடந்துகொண்டு வந்தான்.

காவிரிப்பூம்பட்டினத்தில் **மார்க்கசகாயர்** என் னும் ஒரு வேளாளச் செல்வரிருந்தார். அவருக்கு, அறிவிலும் குணத்திலும் சிறந்த **வாசுகி** என்னும் ஒரு பெண் குழந்தை இருந்தது. அப் பெண்மணி யைத் திருமணஞ் செய்துகொண்டு திருவள்ளுவர் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார். திருவள்ளு வரின் கல்விப் பெருமையையும் அறிவுப் பெருக்கை யுங் கேள்வியால் அறிந்த அன்பர் சிலர் அவரிடம் வந்து வணங்கி, 'இல்லறமோ துறவறமோ எது பெரிது' என்பதைத் தங்கட்கு விளங்க வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். வள்ளுவர் அவர்களுக்கு வேறு ஒன்றுஞ் சொல்லாமல், அவர் களைத் தமது வீட்டிற் சில நாள் தங்கி இருக்கும்படி கட்டளையிட்டார்.

ஒரு நாள், பட்டப்பகலிற் கையிலிருந்த ஒரு பொருள் தவறிக் கீழே விழ, அதனை எடுக்கத் திருவள்ளுவர் வாசுகியாரை அழைத்து விளக்குக் கொண்டுவரச் சொன்னார். அம்மையார் ஒன்றும் பேசாமல் அப்படியே செய்தனர். இன்னொருநாள், வள்ளுவர் பழஞ்சோறு உட்கொள்ளும்பொழுது அச் சோறு சுடுகிறதென்று சொல்லி மனைவியாரை விசிறி கொண்டுவரச் சொன்னார். அப்போதும் அவர் வாய்திறவாமல் அவ்வாறே செய்தார். வேறொரு நாள், வாசுகியம்மையார் கிணற்றில் நீர் முகந்து கொண்டிருக்க, நாயனார் அவரைத் திடீரெனக் கூப்பிட்டார். அம்மையாரோ, பாதிக் கிணற்றிற் பாத்திரத்தை அப்படியே விட்டு ஓடிவந்தனர். இவ்வாறு நடந்துவந்த பல வியத்தக்க செய்திகளை நாடோறுங் கண்டுவந்த அன்பர்கள், 'பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால், எத்தாலுங் கூடி இருக்கலாம்' என்று தங்களுக்குத் தாங்களே அறிந்துகொண்டு, வள்ளுவரை வணங்கி விடைபெற்றுத் தங்கள் தங்கள் இருப்பிடம் சேர்ந்தனர்.

ஏலேல சிங்கனும், ஏனைய நண்பர்களும் பல காலம் வேண்டிக்கொள்ள அவர்கள் வேண்டுகோளுக்கு இசைந்து, திருவள்ளுவர் திருக்குறள் என்னுஞ் சிறந்த நீதி நூலை இயற்றியருளினார். அக் காலத்தில் தென்மதுரையில் கடைச்சங்கம் நக்கீரர் முதலிய பல பெரும் புலவர்களால் நடத்தப்பட்டு வந்தது. தாம் இயற்றிய திருக்குறளை அச் சங்கத்

தில் அரங்கேற்றஞ் செய்ய வேண்டுமென்று திருவள்ளுவர் மனங்கொண்டார். அவர் வழி நடந்து மதுரைக்குச் சென்று, சங்கத்தில் தமது நூலைக் கொடுத்தார். சங்கப் புலவர்கள் எல்லோரும் பொற்றாமரைக் குளத்தில் இருந்த சங்கப் பலகையின்மேல் திருக்குறள் நூலை வைத்துக்கொண்டு உட்கார்ந்தனர். அப்போது அப்பலகை குறுகிப்போய் அந்நூலுக்கு மாத்திரம் இடங் கொடுத்தது. அதனால் அந்நூல் தனக்கு ஒப்பு உயர்வு இல்லாத அத்துணைச் சிறந்ததொன்று என்று உணர்ந்து, சங்கப் புலவர்கள் எல்லோரும் வள்ளுவரையும் குறள் நூலையும் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தினர். அவர்களில் ஒருவர்,

"கடுகைத் துளைத்து எழுகடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்று, இக்குறட் பாக்களில் சில சொற்களிற் பொருள் பெருக்கம் பெற வைத்துப் பாடி யிருப்பதைப் பற்றிப் புகழ்ந்து பாராட்டி யிருக்கின்றனர்.

இத்திருக்குறள் என்னும் அரிய பெரிய நீதி நூல் தமிழகத்திலே அன்றி, எந்நாட்டிலும் எல்லா மக்கட்கும் பொதுநூலாகக் கொள்ளப்படுகின்றது. இதனை மேனாட்டார் தம் தம் மொழிகளிற் பெயர்த்தெழுதி வைத்துக்கொண் டிருக்கின்றனர். இதன்கண் பொது மக்கட்கும், அரசர்களுக்கும் வேண்டிய நீதிகள் எல்லாம் குறைவின்றிக் காணப்படுகின்றன.

தமிழ் மொழிக்குச் சிறப்புத் தந்துள்ள நூல்களில் இத் திருக்குறள் சிறந்ததொன்ருக நின்று நிலவி உலவுகின்றது. ஆகையினுலேயே தமிழ் மணியாகிய பாரதியார்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து,
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

என்று தமிழ் நாட்டைச் சிறப்பித்துள்ளார்.

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a)	பரிசு	திருமணம்	நெசவு	தறி
	துறவறம்	இல்லறம்	நிலவுதல்	நல்லறம்
(b)	புத்திமதி	பட்டப் பகல்	பயபக்தி	
	பதிவிரதை	அரங்கேற்றம்	பொருட் பெருக்கம்	
	ஒப்புயர்வு	பெண்மணி	வியக்கத்தக்க செய்தி	

1. முதல் பத்தியின் கருத்தை நான்கு வாக்கியங்களில் எழுது.
2. புலவர்கள் பழைய காலத்தில் எப்படி உயிர் வாழ்ந்து வந்தனர்? திருவள்ளுவர் எப்படி வாழ்க்கை நடத்தி வந்தார்? அவர் அவ்வாறு செய்தது ஏன்?
3. ஏலேல சிங்கனைப்பற்றி இரண்டு மூன்று வாக்கியங்கள் எழுது.
4. அன்பர்கள் திருவள்ளுவர் வீட்டிற் கண்ட வியக்கத் தக்க செய்தி ஒன்று சொல்லு.
5. திருக்குறளைச் சங்கத்தார், ஒப்பு உயர்வு இல்லாத நூல் என்று எவ்வாறு கண்டனர்?
6. முற்ருத வினைச் சொற்கள் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தால் அவை பெயரெச்சம் எனப்படும். வள்ளு வர் செய்த திருக்குறள்—'இங்கே செய்த' என்பது

திருக்குறள் என்னும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடி கிறது; ஆகையால் அது பெயரெச்சம். இதுபோலவே வள்ளுவன் வளர்த்த பிள்ளை—இங்கே 'வளர்த்த' என்பது பெயரெச்சம்.

எலேல சிங்கன் வாங்கின கப்பல்;
நெல்லிக்குப்பத்தில் செய்கிற சர்க்கரை;
குழந்தைகள் தின்னும் மிட்டாய்;
இவ்வாக்கியங்களிற் பெயரெச்சங்கள் எவை?

---

15. திருக்குறள்

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

2. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

3. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

4. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்.

5. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

6. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

7. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

9. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

10. தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

கேள்விகள்

1. எவ்வாறு கல்வி கற்க வேண்டும்? கற்றபின் எவ்வாறு நடக்கவேண்டும்?

2. தந்தை மகனுக்குச் செய்யவேண்டிய கடமை என்ன?

3. மகன் தந்தைக்குச் செய்யவேண்டிய கடமை என்ன?

4. இன்சொற்கள் இருக்கக் கடுஞ் சொற்கள் கூறுவது எதனைப்போல் ஆகும்?

5. உண்மையான நட்பை எதற்கு ஒப்பிடலாம்?

6. எதனை ஒருபோதும் மறக்கக் கூடாது?

7. எதனை உடனே மறக்க வேண்டும்?

---

16. நால்வரும் ஒன்றுசேர்ந்து வாருங்கள்

(ஒரு நாடகம்)

காட்சி—க

இடம் :—ஊருக்கு வெளியே ஒரு பாதையினருகே உள்ள புன்செய் நிலத்தில் புதிதாகத் தோண்டிக் கொண்டிருக்கும் கிணறு.

நேரம் :—முற்பகல்.

[வேலன், காளன், முத்தன், பொன்னன் என்னும் நான்கு வேலையாட்கள் கடப்பாரை, மண்வெட்டி முதலிய கருவிகள் கொண்டு கிணறு தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். கடப்பாரை பட்டு ஒரு வெண்கல ஓசை கேட்க, அவர்கள் ஆச்சரியம் அடைந்து வேலையை நிறுத்துகிறார்கள்.]

காளன் :—வேலா! என்ன ஓசை இது! புதுமையாய் இருக்கிறதே. உன் கடப்பாரை எதிலே தட்டிற்று?

முத்தன் :—அது வெண்கல ஓசையடா!

பொன்னன் :—அடே! அங்கே ஆழமாகத் தோண்டிப் பார்?

[எல்லோரும் சேர்ந்து தோண்டுகிறார்கள். ஒரு சிறிய வெண்கலப் பானை தென்படுகிறது. அதனைத் தோண்டி எடுத்து அதில் உள்ளதைக் கீழே கொட்டுகிறார்கள்.]

காளன் :—அடே! கல்லு மண்ணுக்குள்ளே என்ன கிடக்கிறது பார்த்தாயா!

வேலன் :—இவை என்ன பளிச்சுப் பளிச்சென்று மின்னுகின்றனவே!

முத்தன் :—அவை தங்கக் கட்டிகளடா!

பொன்னன் :—ஒரு புறத்தில் ஏதோ தலைபோல் இருக்கிறது! மறுபுறத்தில் ஏதோ எழுதியிருக்கிறது!

காளன் :—இவை பழைய காலத்துப் பொன் காசுகள்; அடே! நமது பாக்கியமே பாக்கியம்!

[எல்லோரும் பொன் நாணயத்தைப் பொறுக்கி எண்ணுகிருர்கள். நூற்று இருபது இருக்கின்றன.]

காளன் :—அடே! இவைகளை இங்கே வைத்திருத்தல் கூடாது. கிணற்று வேலையை மேல் பார்க்க வருபவர்களுக்கு இது தெரியக் கூடாது. மாலை



யில் நாம் வீடு சென்று அடைந்த பிற்பாடு, இவைகளை நாம் நால்வரும் பங்குவைத்துக் கொள்ளலாம். அதுவரை இதை நாம் எங்கே யாவது பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்.

வேலன் :—எங்கே வைப்பது?

பொன்னன் :—அதோ எதிரே பாதையின் மறுபக்கத்தில் இருக்கும் வெற்றிலைபாக்குக் கடையில் இந்த வெண்கலப் பானையை ஒரு துணியிற்

கட்டி மூடி வைக்கலாம். கடையில் இருப்பவள் கிழவி; நம்பிக்கையுள்ளவள்; மூட்டையை அவிழ்த்துப் பார்க்கமாட்டாள்.

முத்தன் :—மாலையில் நாம் வீட்டுக்குப் போகும்போது திரும்ப வாங்கிக்கொண்டு போகலாம்.

[எல்லோரும் அவ்வாறே செய்வதென்று தீர்மானிக்கிறார்கள். பொற்காசுகளைத் துணியில் கெட்டியாய் முடிந்து வெண்கலப் பானைக்குள் போட்டு, அப்பானையையும் துணியில் மூட்டையாகக் கட்டுகிறார்கள். பிறகு அதனைக் கொண்டுபோய் நால்வரும், கடையிற் கிழவியிடம் கொடுக்கிறார்கள்.]

நால்வரும் :—அம்மா! இஃது ஒரு வெண்கலப் பானை. இதனைத் தயவு செய்து பத்திரமாய் ஒருபுறம் வைத்திரும். நாங்கள் நால்வரும் வந்து கேட்கும் போது கொடும்.

[எல்லோரும் திரும்பிப் போய்க் கிணற்றில் இறங்கி வேலை செய்கிறார்கள்.]

காட்சி 2

இடம் :—அதே கிணறு.

நேரம் :—பிற்பகல்.

[வேலை செய்து களைத்த நால்வரும் சிறிது பசியடங்க உணவு கொள்ளும் நேரம் ஆகிறது]

காளன் :—அடா! தம்பிமார்களே! பசி வந்துவிட்டதே! நாம் சிறிது உணவு உண்டு இளைப்பாறி விட்டுத் திரும்ப வேலையைத் தொடங்கலாம்.

முத்தன் :—துணியில் முடிந்து வைத்திருக்கும் பழைய சோற்றை உண்ணலாம்.

பொன்னன் :—இன்று கடு வெயிலால் மிகுந்த தாகமாக இருக்கிறது. ஆகையால் இந்தப் பழைய சோற்றைக் கரைத்துக் குடிப்போம்.

வேலன் :— எதிலே கரைப்பது? சட்டியோ பானையோ ஒன்றுமில்லையே!

பொன்னன் :—அதற்கென்ன! நேரேயுள்ள கடைக்குப் போய்க் கிழவியிடம் ஒரு பானை வாங்கிக் கொண்டு வந்தால், திரும்பக் கொடுத்துவிடலாம்.

காளன் :—நல்லது, அப்படியானால், பொன்னா! நீயே போய் வாங்கிக் கொண்டுவா.

[பொன்னன் போகிறான்; போகும் வழியிலேயே அவன் திடீரென ஒரு திருட்டு எண்ணங் கொள்கிறான்.]

பொன்னன் :—அம்மா! பாட்டி! நாங்கள் கொடுத்த பானையைக் கொடு; கொண்டு வரச் சொல்லுகிறார்கள்.

கிழவி :—என்ன தம்பி! மற்ற மூவரும் எங்கே? நால்வரும் வந்து கேட்டால் அல்லவோ அதைக் கொடுக்க வேண்டும்.

பொன்னன் :—இல்லை, அம்மா! அவர்கள்தான் வாங்கிக்கொண்டு வரச் சொல்லுகிறார்கள். இதோ, அவர்களைக் கூப்பிடுகிறேன்.

[அவர்களை உரக்கக் கூப்பிடவும், அவர்கள் கிணற்றின் உள்ளிருந்து வெளியே வருகிறார்கள்]

கிழவி :—என்ன அப்பா! பானை வேண்டுமா? கொடுக்கவா?



மூவரும் :—ஆம், அம்மா! கொடுத்தனுப்புங்கள்.

[மூவரும் திரும்பவும் கிணற்றுக்குள் இறங்கி விடுகிறார்கள். வெண்கலப் பானையை வாங்கிக்கொண்டு பொன்னன் ஓடி மறைந்து விடுகிறான். நேரம் ஆகியும் பொன்னன் திரும்ப வராமையினால் மற்ற மூவரும் திகைத்துக் கடைக்கு வருகிறார்கள்]

காளன் :—அம்மா ! பாட்டி ! எம்மவன் எங்கே ?

கிழவி :—உங்கள் வெண்கலப் பானையை வாங்கிக் கொண்டு உங்களிடம் வந்தானே !

மூவரும் :—(திடுக்கிட்டு) ஆ ! (மூவரும் நடந்திருப்பதை உணருகிறார்கள்)

வேலன் :—அம்மா ! நாங்கள் நால்வரும் வந்து கேட்டாலல்லவோ அந்தப் பானையைக் கொடுக்கவேண்டும் ? ஒருவனிடம் ஏன் கொடுத்தீர் ?

கிழவி :—ஏன் அப்பா ! நீங்கள் மூவரும் கிணற்றுக்கு மேல் வந்து, நான் பானை கொடுக்கவா என்று கேட்டதற்குக் கொடுத்தனுப்புங்கள் என்றீர்களே !

காளன் :—அம்மா ! நாங்கள் எங்கள் வெண்கலப் பானையைக் கேட்கவில்லை. வேறு ஒரு மண் பானை சிறிது நேரத்திற்கு இரவல் கேட்டோம்.

முத்தன் :—இப்போது எங்கள் நால்வருக்கும் பொதுவான பணம் அதில் இருந்ததைப் பொன்னன் ஒருவனே அடித்துக்கொண்டு போய்விட்டான்.

கிழவி :—இவை எல்லாம் எனக்கு எப்படித் தெரியும் அப்பா !

காளன் :—வாருங்கள் அப்பா ! நாம் இதை ஊர்நீதிபதியிடம் சென்று கூறுவோம்.

(மூவரும் போகிறார்கள்.)

காட்சி—ரு

இடம் :—நீதிபதி முன்பு.

நேரம் :—மாலை.

காளன்:—ஐயா, பெரியீர்! நாங்கள் மூவரும் இன்னும் ஒருவனும் சேர்ந்து இந்த அம்மையாரிடம் ஒரு வெண்கலப் பானையை ஒப்படைத்து, 'நாங்கள் நால்வரும் வந்து கேட்கும்போது கொடும்' என்று சொல்லி வைத்தோம். இவர் அதனை மீறி ஒருவனிடமே அப்பானையைக் கொடுத்து விட்டார். அதனல் எங்கள் நால்வருக்கும் பொதுவான பொருளை, இப்போது நாங்கள் மூவரும் இழக்க நேரிட்டது.

நீதிபதி:— (கிழவியை நோக்கி) உண்மைதானு?



கிழவி:—இவர்கள் அவ்வாறு சொல்லி ஒப்படைத்தது உண்மையே. ஆனல் இவர்களில் ஒருவன் வந்து பானையைக் கொடு என்று கேட்க, நான் கடை

யில் இருந்தபடியே இவர்களைப் பானை கொடுக்கவா என்று கேட்டேன். இவர்கள் ஆமாம் கொடுத்தனுப்புங்கள் என்றார்கள். ஆதலால், பானையை நான் அவனிடம் கொடுத்தனுப்பி விட்டேன்.

நீதிபதி:—இப்போது அந்தப் பெரியம்மாள் சொன்னதைக் கேட்டீர்கள்; அவர்மேல் என்ன குற்றம் இருக்கிறது?

காளன்:—நாங்கள் எங்களில் ஒருவனை அனுப்பிக் கேட்டது, சோறு கரைத்துக் குடிக்க ஒரு மண் பானையே. நாங்கள் முதலில் ஒப்படைத்து வைத்த வெண்கலப்பானை அன்று.

நீதிபதி:—(நடந்ததை உணர்ந்துகொண்டார். வழக்கை இரு பக்கத்தவர்க்கும் பொருந்தத் தீர்ப்பளிக்க யோசித்தார். சிறிது நேரத்திற்குள் அவர் ஒரு முடிவுக்கு வந்தவர் போல்) ஆம், இப்போதும் நீங்கள் நால்வரும் ஒன்று சேர்ந்து வாருங்கள்; அந்த அம்மாள் ஒப்பந்தப்படி வெண்கலப் பானையைக் கொடுத்து விடுவார்கள். உங்கள் மூவரிடம் மாத்திரம் கொடுப்பது நியாயம் இல்லை அல்லவா?

[மூவரும் ஏமாறிப்போய் வீடு செல்கின்றனர்]

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a) **புன்செய்** **நாணயம்** **இரவல்**
தென்படுதல் **மேல்பார்த்தல்** **ஒப்பந்தம்**
பாக்கியம் **நம்பிக்கை**

(d) பளிச்சுப்பளிச்சு	பழையசோறு
தங்கக்கட்டி	பங்கு வைத்தல்
பொன் காசு	அடித்துக்கொண்டு போதல்.

1. பொன்னன் எப்படிக் கிழவியை ஏமாற்றினான்?
2. நீதிபதி செய்த தீர்மானத்தின் உட்கருத்து என்ன?
3. மக்களின் பெயர், தேவர்களின் பெயர் ஆகிய இவைகள் **உயர்திணை** என்று சொல்லப்படும்; மற்றவைகள் உயிர் உள்ளவை ஆனாலும் இல்லவை ஆனாலும் அல்திணை அதாவது அஃறிணை என்று சொல்லப்படும். வேலையாட்கள் — உயர்திணை. மாடு — அஃறிணை. மரம்—அஃறிணை.

கிழவி, கிணறு, நால்வர், நீதிபதி, பணம், பானை, இவைகளில் உயர்திணைச்சொற்கள் எவை? அஃறிணைச் சொற்கள் எவை?

---

17. கிறிஸ்துநாதர்

பிள்ளைகளே! டிசம்பர் மாதக் கடைசியில் உங்களுக்குப் பத்துப் பதினைந்து நாட்கள் விடுமுறை கொடுக்கப்படுகின்றதன்றோ? நீங்கள் அதனைக் ‘கிறிஸ்த்மஸ் விடுமுறை’ என்று சொல்கிறீர்கள். கிறிஸ்த்மஸ் என்றால், ‘கிறிஸ்து என்னும் பெரியார் பிறந்த நாள்’ என்பது பொருள். அவர் பிறந்த நாளைக் கிறிஸ்தவர்கள் பெருமகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றார்கள். அஃது அவர்கட்கு ஒரு பண்டிகை நாள். அந்த நாள் டிசம்பர் மாதம் இருபத்தைந்தாம் தேதி ஆகும். அன்று கிறிஸ்தவர்கள் தூய ஆடைகள் அணிந்து கோயிலுக்குப் போவார்கள். அங்கே அவர்கள் விவிலிய நூலிற் சில பகுதிகள்

படித்துக் கிறிஸ்துவைப் புகழ்ந்து பாட்டுப் பாடுவார்கள். அக்கோயிலில், அவர்கள் குரு கிறிஸ்துவைப் பற்றி அவர்களுக்குச் சொல்லுவார். இவைகள் எல்லாம் முடிந்தபின், கிறிஸ்தவர்கள் வீட்டுக்குப்போய் மகிழ்ச்சியுடன் அந்நாளைக் கழிப்பார்கள். அந்நாளில் அவர்கள் ஒருவரை யொருவர் கண்டு அன்புஉறவாடி ஆனந்தங் கொள்ளுவார்கள். தொலைவில் இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் அன்புரைக் கடிதங்கள் அனுப்பிக்கொள்வார்கள். ஒருவருக்கொருவர் பரிசுகள் அனுப்புவதும் உண்டு. இவ்வாறு மக்களாற் கொண்டாடப்படுகின்ற கிறிஸ்துவின் வரலாற்றினை நீங்கள் தெரிந்து கொள்வது நலமே.

கிறிஸ்துப் பெரியார் பாலஸ்தீன் என்னும் நாட்டிலே பெத்லஹேம் என்னும் நகரில் பிறந்தார். அது நமது நாட்டிற்கு வடமேற்கே வெகுதூரத்திற் கப்பால் இருக்கிறது. கிறிஸ்து பன்னிரண்டாவது வயதுமுதல் கோயிலுக்குப் போவதும், குருமார்களுடன் சாஸ்திரங்கள் படிப்பதும், அவற்றின் பொருள்களைப்பற்றி வாது செய்வதும், தம்மோடொத்த பிள்ளைகட்கு நற்போதனை செய்வதுமாகக் காலங் கழித்து வந்தார்.

இவ்வாறு கிறிஸ்து கடவுள் அன்பிலும், கலை ஆராய்ச்சியிலும் மிக்கவராய் வளர்ந்து, தமது முப்பதாம் ஆண்டினை அடைந்தார். அதுமுதல் அவர் மக்கட்குக் கடவுளைப்பற்றியும், மக்களின் உயிர் மறுமையில் நற்கதி அடைய வேண்டிய வழிகளைப் பற்றி

யும் போதித்துக்கொண்டு வந்தார். அக்காலத்தில் அந்நாட்டு மக்கள் மூட நம்பிக்கைகளில் முழுகி, வீண் சடங்குகளிலேயே மனம் அழுந்திக் கிடந்தனர். அவர்கள் அறிவில் உயரவும், மறுமையைப் பற்றி நன்கு அறியவும், அவர் வெகு இலேசான வழி களில், அவர்கள் மனத்தில் ஊன்றும்படி போதனை களைச் செய்துகொண்டு வந்தார்.

ஒரு நாள் அவர்தம் மாணவரிற் சிலர் அவரிடம் வந்து, "ஐயனே! நாங்கள் முத்தி அடைய ஓர் இலேசான வழியைச் சொல்லியருளுங்கள்" என்று கேட்டனர். அதற்கு அவர் அவர்களை ஒரு குழந் யைக் கொண்டுவரச் சொல்லி, அக்குழந்தையைச் சுட்டி, "அன்பர்களே! உங்கள் மனம் இக் குழந் தையின் மனத்தைப்போ லானால், நீங்கள் முத்தியை அடைவது திண்ணம்," என்றார். 'மனத்தூய்மையே முத்திக்கு வழி' என்னும் பெரும்பொருளை ஒரு சிறு உவமானத்தால் மாணவர் மனத்தில் எவ்வளவு ஆழ மாய்ப் பதியவைத்தார் பார்த்தீர்களா, கிறிஸ்து நாதர்! இவ்வாறே, இவர் சிறு கதைகளின் மூல மாகச் சிறந்த பொருள்களை மக்கட்கு உரைத்து வந்தார். இவைகளே அன்றிக் கிறிஸ்துப்பெரு மான் மக்கட்கிடையே பல அற்புதங்களும் இயற்றி வந்தனர்.

ஒரு நாள் அவர் ஊருக்குத் தொலைதூரத்தி லிருந்த ஒரு புல்வெளியில் மக்களுக்குப் போதனை செய்துகொண் டிருந்தார். பகல் பதினைந்து நாழிகை

ஆய்விட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் அவர்தம் பொன் மொழிகளைக் கேட்க ஆங்கு வந்திருந்தார்கள். பசிவேளை ஆய்விட்டபடியால் அவர் தம் மாண



வரிடமிருந்த ஐந்து அப்பங்களை எல்லோருக்கும் கொடுத்துக்கொண்டு வரும்படி கட்டளை இட்டார். அவர்கள் ஜனங்களுக்குக் கொடுத்துக்கொண்டேவர அவர்கள் கைகளில் அப்பங்கள் இருந்துகொண்டே இருந்தன! இதனைக் கண்டு மாணவர்களும் மக்களும் பெருவியப்படைந்தனர்! இன்னும், இவர் ஊமையைப் பேசவைப்பது, குருடனுக்குப் பார்வை அளிப்பது, பெரு நோய்களைத் தீர்ப்பது, இறந்

தவனை எழுப்புவது முதலான பற்பல அற்புதங்களையும் செய்தனர் என்று சொல்லுகின்றார்கள்.

'உலக இன்பத்திலும், மூடநம்பிக்கையிலும், அறியாமையிலும் அழுந்திக் கிடக்கும் மக்களின் மனத்தை மாற்றித் தூய்மை செய்து, அவர்கள் மறுமை இன்பத்தை அடையும்படி செய்ய நான் ஆண்டவன் கட்டளையினால் இவ்வுலகத்திற் பிறந்தேன்; இறைவன் அரசை இவ்வுலகில் நிலை நிறுத்த வந்தேன்' என்று கிறிஸ்துப் பெரியார் சொல்லிக் கொண்டு வந்தார். இவருடைய பகைவர்களான மூடநம்பிக்கையிலே மனவுறுதி கொண்ட ஆசிரியன்மார், இந்தச் சொற்களையே காரணமாக வைத்துக்கொண்டு, 'இவன் அரசுக்குத் துரோகஞ் செய்பவன்,' என்று அரசப் பிரதிநிதியினிடம் இவர்மேல் குற்றஞ்சாட்டி, இவரைச் சிலுவையில் அறையும்படி வற்புறுத்தி வாதாடினார்கள். ஆனால் அந்த அதிகாரியோ, கிறிஸ்துவின்மேல் ஒரு குற்றமும் ஏற்படவில்லை என்று கைகழுவி விட்டார். ஆனாலும் ஆசிரியன்மார் ஒரே பிடிவாதமாக நின்று கிறிஸ்துவைச் சிலுவையில் அறையும்படி செய்தனர். அவர் சிலுவை மீதிருந்தே கடவுளை விளித்து, "தந்தையே! இவர்கள் அறியாமற் செய்யும் இக்குற்றத்தை இவர்களுக்கு மன்னியும்" என்று வேண்டிக் கொண்டே இவ்வுடலை நீத்து, ஆவியாக ஆண்டவர் பக்கம் சார்ந்தார். தம்மைக் கொலை செய்யப்

புகுந்த பகைவரிடமும் அவர் காட்டிய கருணையைக் கண்டீர்களா!

கிறிஸ்துநாதரின் அருமை வாக்குக்கள் பொன்னேபோற் போற்றத்தக்கன. அவைகளிற் சிலவற்றை அடியிற் காட்டுவோம் :—

1. உலகத்தில் தாழ்மையுடன் நடந்து கொள்பவர்கள் கடவுளால் உயர்த்தப்படுவார்கள்.

2. பிற உயிர்களிடத்து இரக்கங் காட்டுபவர்கள் இறைவனிடமிருந்து தாமும் இரக்கம் பெறுவார்கள்.

3. மனத்துக்கண் மாசில்லாதவர்களே கடவுளைக் காண்பார்கள்.

4. மக்களிடையே சமாதானத்தை நிலைநிறுத்துகிறவர்களே கடவுளுடைய அன்புக்குரிய மக்களாவார்கள்.

5. நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் இறுதியில் ஆறுதல் அடைவார்கள்; அவர்களே இறைவன் அருகில் இடம் பெறுபவ ராவார்கள்.

பயிற்சி

கவனிக்க வேண்டிய மொழிகளும் தொடர்களும் :—

(a)	**தூய்மை**	**சடங்கு**	**அற்புதம்**	**வற்புறுத்தல்**
	மறுமை	**அறியாமை**	**துரோகம்**	**பிடிவாதம்**
	முத்தி	**உவமானம்**	**பிரதிநிதி**	**கருணை.**

(b)	**அன்புரை**	**வாதாடுதல்**	**நிலைநிறுத்தல்**
	வாது செய்தல்	**காலங்கழித்தல்**	**குற்றஞ் சாட்டுதல்**
	நற்போதனை	**மூடநம்பிக்கை**	**கைகழுவல்.**

1. கிறிஸ்து பிறந்தநாளைக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு கொண்டாடுகிறார்கள்?

2. கிறிஸ்து இளமையில் என்ன செய்துகொண் டிருந்தார்?

3. பாலஸ்தீனில் மக்கள் அக்காலத்தில் எத்தன்மையராய் இருந்தனர்?

4. அவர் அவர்களுக்குச் செய்த போதனை யாது?

5. அவர் மாணவர்க்கு முத்தி அடைய வழி யாதென்று காட்டினார்?

6. அவர் செய்த அற்புதம் ஒன்று சொல்லு.

7. அவர் கருணை நிறைந்தவர் என்று எதனால் தெரிகிறது?

---

18. பிதாக்கள் எவர், எவர்?

தவமது செய்தே பெற்றெடுத்தவன் முதற்பிதா;
  தனை வளர்த்தவன் ஒருபிதா;
தயையாக வித்தையைச் சாற்றினவன் ஒருபிதா;
  சார்ந்த சற்குரு ஒருபிதா;
அவமறுத் தாள்கின்ற அரசொருபிதா; நல்ல
  ஆபத்து வேளை தன்னில்
அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோன் ஒருபிதா;
  அன்புள முன்னோன் ஒருபிதா;
கவளமிடு மனைவியைப் பெற்றுளோன் ஒருபிதா;
  கலிதவிர்த் தவன் ஒருபிதா;
காசினியில் இவரை நித்தம் பிதாவென்றுளம்
  கருதுவது நீதியாகும்.
மவுலிதனில் மதிஅரவு புனைவிமலர் உதவுசிறு
  மதலையென வருகுருபரா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
  மலைமேவு குமரேசனே!

19. தேனீ வளர்த்தலும் தேன் எடுத்தலும்

(முதற் பாகம்)

அறுசுவை உணவுப் பொருள்களில் மக்கள் மிகவும் விரும்புபவை தித்திப்பான தின்பண்டங்களே. பால், பழம், கருப்பஞ்சாறு, சர்க்கரை ஆகிய இவைகளெல்லாம் பிள்ளைகள் பெரிதும் விரும்பும் இனிப்பான பொருள்கள். ஆனல், உண்ணுவதற்கு இவைகளைக் காட்டிலும் அதிக ஆசையைக் கொடுப்பது தேன். தேன் என்றபோதே உங்கள் உள் நாக்கில் நீர் சொட்டுகின்றதல்லவா? இத்தகைய தேன் எப்படி எடுக்கப்படுகின்றது என்று இப்போது தெரிந்து கொள்வோம்.

தேனைப் பூக்களினின்றும் தேனீக்கள் எடுத்துத் தங்கள் கூடுகளில் நிரப்புகின்றன என்று நீங்கள் கேட்டிருப்பீர்கள். அது முற்றிலும் உண்மை அன்று. பூக்களின் அகத்தே நிறைந்திருப்பது நாம் உபயோகிக்கும் தேன் அன்று; அஃது ஓர் இனிப்பான இரசமே. பூக்களின் அழகிய நிறங்களும் நறுமணமும் தேனீக்களை வாவென்று அழைப்பதுபோல் தம்மிடம் இழுக்கின்றன. பூக்களைச் சுற்றிச் சுற்றித் தேனீக்கள் பறந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். தேன்

ஈக்கள் அப் பூக்களில், தங்கள் வாயில் அமைந்துள்ள நீண்ட உறிஞ்சுகுழாய் போன்ற நாக்கினைச் செலுத்தி, அந்த இரசத்தைப் பருகி, அதனைத் தம் வாயின்கண் உள்ள ஒரு பையில் நிரப்புகின்றன. தம் கூடு செல்வதற்குள் அஃது அப்பையில் தேனாக மாறவும், தேனீக்கள் கூட்டை அடைந்ததும், தங்கள் தேனடையில் உள்ள அறைகளில் அதனை உமிழ்ந்து நிரப்பி வைக்கின்றன. இதுவே நாம் உபயோகிக்கும் தேன் ஆகும்.

தேனீக்களில் பலவகை உண்டு. அவைகளில் பெரியது **மலைத் தேனீ.** இது குவிந்த மலைப்பாறைகளிலும், காட்டில் உயரமான மரக் கிளைகளிலும் கூடு கட்டி வசிக்கும். அக் கூடு ஐந்தடி நீளம் ஐந்தடி அகலம்வரை அவ்வளவு பெரியதாய் ஒரே அடையாகத் தொங்கும். மலைகளில் வாழும் மக்கள் தீயிட்டுக் கொளுத்தி இத் தேனீக்களைத் துரத்தி விட்டு, அடையை எடுத்துப் பிழிந்து தேன் எடுத்து, அதனைக் கொண்டுபோய் அடுத்துள்ள ஊர்களிலும் நகர்களிலும் விற்பார்கள்.



தேனீக்களில் சிறியது **கொம்புத் தேனீ.** இது மரக்கிளைகளிலும், புதர்களிலும், வீட்டுக் கூரையின் மூலைகளிலும் தன் கூட்டை ஒரே அடையாகக் கட்டி வாழும். இந்த அடைகள் ஆறு முதல் பத்து அங்குல அளவிற்குள்ளேயே இருக்கிறபடியால், இவைகளி லிருந்து கிடைக்கும் தேன் மிகக் குறைவாக இருக்கும்.

மலைத் தேனீயை விடச் சிறியதாயும், கொம்புத் தேனீயை விடப் பெரியதாயு முள்ளது இன்னொரு வகை இனம். அஃது **அடுக்குத் தேனீ** என்றும், **பல்லடைத் தேனீ** என்றும் அழைக்கப் படுகின்றது. அஃது இருட்டான மரப் பொந்துகளிலும், பாறை களின் இடுக்குகளிலும், சுவர்களின் சந்துகளிலும் தன் கூட்டை அடுத்தடுத்துப் பத்துப் பதினைந்து அடைகளாகக் கட்டி வசிக்கும். வீட்டுப் புறங்களில் கழித்துப் போடப்பட்ட பெட்டிகளிலும் மட் பாண் டங்களிலுங்கூட இது கூடு கட்டி வாழ்வதைச் சில வேளைகளில் நாம் பார்க்கலாம்.

தேனீக்களில் அடுக்குத் தேனீக்கள் மிக்க சாந்த குணமுடையன. பசு, எருமை, வெள்ளாடு முதலியவைகளை வளர்த்து நாம் பால் கறந்து கொள்வதுபோல், இந்த அடுக்குத் தேனீக்களையும் வளர்த்து நாம் எளிதாய்த் தேன் எடுத்துக் கொள்ள லாம். அடுக்குத் தேனீக்களின் பழக்கவழக்கங் களைப் பார்த்துத் தெரிந்தவர்கள் அவைகளை வளர்ப்பதற்குத் தக்க பெட்டி ஒன்றை அமைத்

துள்ளார்கள். அதனை இப் படத்தில் பாருங்கள். இப் பெட்டி பலகைகளால் இணைக்கப்பட்டது;



பார்ப்பதற்கு ஒரு சிறு வீடுபோலவே தோன்றுகின்றது. இது நான்கு பாகங்களை யுடையது; ஒவ்வொரு பாகமும் ஒன்றின்மே லொன்ருய் வைக்கப்பட்டுள்ளது; வேண்டியபோது எளிதில் பிரித்தெடுத்துக் கொள்ளும் விதத்தில் பொருத்தப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகமும் சுற்றுப் பக்கங்கள் நான்கினுமே பலகைகளால் மூடப்பட் டிருக்கின்றது; அடிப் பக்கமும் மேல் பக்கமும் மூடப்படாமல் திறந்தபடி யிருக்கும். ஆதலால், ஒரு பாகத்திலிருந்து மற்ருெரு பாகத்திற்குத் தேனீக் கள் எளிதில் செல்லக் கூடும். இப் பெட்டியின்

அடியில் காணப்படுவது ஒரு பலகையே. அதன்மேல் வைக்கப்பட்டிருப்பது **புழு அடைப் பெட்டி**. அதன் மேல் தெரியும் மூன்ருவது பாகம் **தேனடைப் பெட்டி**. இவற்றின் மேலே இருக்கும் கடைசிப் பாகம் கூட்டின் கூரை.



பெட்டியின் அடிப் பலகை மற்றப் பாகங்களை விடச் சிறிது முன்னே நீண்டிருக்கும். இது தேனீக் கள் பெட்டியிலிருந்து வெளியே செல்லவும், பெட்டிக் குள் திரும்பப் புகவும் ஏற்பட்ட இடமாகும். இதன்மே லிருக்கும் புழு அடைப் பெட்டியின் அடிப்பக்கத்தில் நீட்டுப்போக்கில் ஒரு துவாரம் தெரிகின்றதல்லவா ? அதுதான் தேனீக்கள் பெட்டிக்குள் போகவும் வரவும் ஏற்பட்ட வழியாகும்.

புழு அடைப் பெட்டியிலும் அதன்மேலிருக்கும் தேனடைப் பெட்டியிலும் குறுக்கே அடுத்தடுத்துச்

சிறிது இடம் விட்டுப் பல சட்டங்கள் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. இச் சட்டங்களிலேதான் தேனீக் கள் தங்கள் கூடுகளைக் கட்டுகின்றன. இக் கூடு கள் பார்வைக்கு அடைபோல் தோன்றுவதனால் அவைகளைத் **தேன் அடைகள்** என்கின்றோம். அந்த அடைகள் ஒவ்வொன்றிலும் ஆயிரக் கணக்கான சிறு அறைகள் இருக்கும். இந்த அறைகளிலே தான் தேனீக்கள் வாழ்கின்றன ; தேனைக் கொண்டு வந்து நிரப்புகின்றன.

புழு அடைப் பெட்டியில் தொங்கும் தேனடை களிலுள்ள அறைகளில் தாய்த் தேனீ இடும் முட்டைகள் அறைக் கொவ்வொன்றாக வைக்கப் படுகின்றன. அறைகளிலிருந்து உற்பத்தியாகும் புழுக்கள் அங்கேதான் வளர்க்கப்படுகின்றன. இதனாலேயே நாம் இதனைப் புழுஅடைப் பெட்டி என்கின்றோம். தேனீக்களுக்குத் தேனடைகளின் கீழ்ப் பாகங்களில் புழுக்களை வைத்தும், மேற்பாகங் களில் தேனை வைத்தும் பழக்கமாதலால், அவை கள் புழு அடைப் பெட்டியில் புழுக்களை வைத்து வளர்க்கின்றன. அடுத்து மேலுள்ள தேனடைப் பெட்டியின் அடைகளிலுள்ள அறைகளில் அவை தேனையே நிரப்பி வைக்கின்றன. ஆதலால், அதனைத் தேனடைப் பெட்டி என்று சொல் கின்றோம்.

கடைசியாக மேலே இருக்கும் கூரை, காற்று மழைகளினின்றும், அதிகக் குளிர் அதிக வெயிலி

னின்றும் கூட்டினைக் காப்பாற்ற உதவுகிறது. தேனீக்களுக்கு வேண்டிய நல்ல காற்று கூட்டினுள் புகுவதற்காக, அதில் மெல்லிய கம்பியினால் அடைக்கப்பட்ட இரண்டு துவாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பெட்டியை நாமே செய்து கொள்ளலாம்; அல்லது விவசாய இலாகா அதிகாரிகளிடமிருந்து சொற்ப விலைக்கு ஈக்களோடுங் கூடிய தேனடைகள் கொண்ட பெட்டி ஒன்றை வாங்கியுங் கொள்ளலாம். பெட்டியை மாத்திரம் நாம் செய்து கொண்டால், தேனடைகளையும் தேனீக்களையும் அவை இருக்கும் மரங்களிலிருந்து எடுத்து நம் பெட்டிக்குக் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டுவருவது எப்படி?

அடுக்குத் தேனீக்கள் அடக்கமாய் வசித்து வருவதற்காக மரப் பொந்துகளில் கூடுகட்டிக் கொண்டிருக்கும். அவைகளைத் தேடிப் பார்த்து, அப் பொந்துகளைக் களிமண்ணால் அடைத்து, அதில் மேலுங் கீழுமாக இரண்டு துவாரம் இடுவர். மேல் துவாரத்திற்கு நேரே ஒரு பெட்டியை வைத்து, இன்னொன்றின்வழியே புகை யடிக்குங் கருவியினாலாவது அல்லது வேறு எவ்விதமாகவாவது புகையைச் செலுத்துவர். உடனே, ஈக்கள் திக்குமுக்கடைந்து தேனடைகளிலிருந்து வெளியே நோக்கிப் பறந்து, பெட்டியில் வந்து கூடி விடும். அப்போது பெட்டியை ஒரு துணியால் மூடித் தேனீக்களைக் கொண்டுவந்து

விடலாம். ஈக்கள் விட்டுப்போய் விட்ட தேனடைகளையும் நாம் இப்போது எடுத்துக் கொள்ளலாம். அடைகளைக் கொண்டுவந்து நாம் வைத்திருக்கும் பெட்டிகளிலுள்ள சட்டங்களிற் பொருத்திவைத்துப் பின்பு தேனீக்களையும் பெட்டிக்குள் புகுவித்தால் அவை அடைகளில் வந்து தங்கி முன் போலவே வாழும்.

தேனடை கிடைக்காமல் தேனீக்கள் மாத்திரம் கிடைத்தால், தேன் மெழுகு கடையில் வாங்கி நாம் அடைகள் செய்து பெட்டியிலுள்ள சட்டங்களில் பொருத்திக் கொள்ளலாம். தேவையானபோது இன்னும் வேண்டிய அடைகளைத் தேனீக்களே தங்கள் அடிவயிற்றிலிருந்து உற்பத்தியாகி வெளியே வரும் தேன் மெழுகினால் செய்து கொள்ளும்.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a) பருகல் இடுக்கு உற்பத்தி விவசாயம்
அதிகாரி பொந்து பொருத்துதல் தேவை

(b) உறிஞ்சுகுழாய் தேனடை அடுத்தடுத்து
சாந்தகுணம் பழக்க வழக்கம் திறந்தபடி
நீட்டுப்போக்கு திக்குமுக்கடைதல்

1. பலவகைத் தேனீக்கள் எவை? அவற்றில் எவ்வகைத் தேனீ, தேன் யெடுக்குந் தொழிலுக்குப் பயன்படுகிறது? ஏன்?

2. உயர்திணைச் சொற்களைப் போல் அஃறிணைச் சொற்களுக்கும் பால்வகை உண்டு. அஃறிணை ஒருமைச்

சொல் ஒன்றன்பால் எனப்படும்; அஃறிணைப் பன்மைச் சொல் பலவின்பால் எனப்படும். ஈ-ஒன்றன்பால்; ஈக்கள்-பலவின்பால். இதுபோலவே, பெட்டி, கூடு-ஒன்றன்பாற் சொற்கள்; பெட்டிகள், கூடுகள்-பலவின் பாற் சொற்கள்.

---

20. தேனீ வளர்த்தலும் தேன் எடுத்தலும்

(இரண்டாம் பாகம்)

இந்தப் பாடத்தில் தேனீக்களின் வாழ்க்கையைப் பற்றிச் சிறிது கவனிப்போம். ஒவ்வொரு தேனீக் குடும்பத்திலும் மூன்று வகைத் தேனீக்கள் உண்டு. அவை **இராணித்தேனீயும், உழைப்பாளித் தேனீக்களும், ஆண் தேனீக்களுமாம்.** ஒரு குடும்பத்தில் ஓர் இராணித் தேனீயே இருக்கும். அதுவே அக்குடும்பத்திலுள்ள பல்லாயிரக் கணக்கான தேனீக்களுக்கெல்லாம் அரசி; அதுவே அக்குடும்பத்தில் எல்லோருக்கும் தாயுமாம். அது மற்றத் தேனீக்களைவிடப் பெரியது. அடையிலிருக்கும் அதன் அறையும் அதற்குத் தக்கவாறு பெரிதாக அமைக்கப்பட் டிருக்கும். அதன் தொழில் முட்டையிடுவதைத் தவிர வேறொன்று மில்லை. அது குடும்பத்தின் தேவைக்கு வேண்டியவாறு நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான முட்டைகளுக்குமேல் இடவல்லது.

தேனீக் குடும்பத்தின் வேலைகளை யெல்லாம் செய்து கொடுப்பது உழைப்பாளித் தேனீக்களே. இவை ஒரு குடும்பத்தில் நாற்பது அல்லது ஐம்பதாயிரம் வரை இருக்கும். இவை முழுவளர்ச்சி அடையாத பெண் ஈக்களே யாகும். பிறந்தது முதல் இறக்கும் வரை, தங்கள் குடும்பத்துக்கு உழைப்பதே இவற்றின் வேலையாகும். இராணி ஈ இடும் முட்டைகள் வெடித்துப் புழுக்கள் வெளி வந்ததும், அவைகளுக்கு இவை தம் தலையிலிருந்து கசியும் ஒரு விதக் கட்டியான பாலைச் சில நாட்களுக்கும், தேனும் மகரந்தமும் கலந்த உணவைப் பின்பு சில நாட்களுக்கும் கொடுத்து வளர்க்கும். தேனையும் மகரந்தத்தையும் பூக்களிலிருந்து எடுத்துவந்து, பக்குவப் படுத்துவதும் இவைகளின் வேலை. அறைகளில் வைக்கப்படும் தேனில் கலந்துள்ள நீர், ஆவியாக மாறித் தேன் பதமானதும், இவை அவ்வறைகளை மெழுகால் மூடித் தேனைப் பத்திரப்படுத்தி வைக்கும். மற்றும் கூட்டைச் சுத்தமாக வைப்பதும் இவ்வுழைப்பாளித் தேனீக்களின் வேலையே யாகும்.

தேனீக் குடும்பத்தில் மிகுதியாயுள்ள ஆணீக்கள் சோம்பேறி ஈக்களே. இவை ஒரு கூட்டில் நூற்றுக் கணக்கிலேதான் இருக்கும். பூக்களிலிருந்து தேனை உறிஞ்சி இழுப்பதற்கு வேண்டிய நீண்ட நாக்கு இவைகளுக்கு இயற்கையிலேயே இல்லை. உழைப்பாளி ஈக்கள் கொண்டுவரும் தேனை உண்டு

இவை உயிர்வாழும். மாரி காலங்களில் மரஞ்செடி கொடிகள் பூக்கா. அக்காலங்களில் கூட்டினுள் தேன் குறையும்போது உழைப்பாளி ஈக்கள் இவைகளைச் சிறிதும் இரக்கமின்றிக் கொன்றுவிடும்.

இனித், தேன் நிறைந்துள்ள தேனடைகளிலிருந்து தேன் எடுப்பது எவ்வாறு என்று கவனிப்போம். முற்காலத்தில் தேனீக்களைப் புகையிட்டுக் கொன்று, அடைகளைக் கசக்கிப் பிழிந்து, தேன் எடுத்து வந்தனர். இது சுத்தமான தேன் ஆகாது; புழுக்கள் மிதக்கும். தவிரவும், இச்செய்கை பொன்னுக்கு ஆசைப்பட்டு மூடன் ஒருவன் நாள்தோறும் பொன்முட்டை இடும் வாத்தின் வயிற்றைக் கிழித்ததற்கு ஒப்பாகும். மிகவும் உபயோகமான தேனீக் குடும்பமும் அவைகளின் அடைகளும் அழியும். தேனடை செய்யும் மெழுகு ஒரு பவுண்டு அளவு உற்பத்தி செய்ய, தேனீக்கள் பத்து அல்லது பதினைந்து பவுண்டு தேனை உண்டு ஆகவேண்டுமானால், இத்தேனடை எத்துணை அருமையானது என்று நீங்களே அறிந்துகொள்ளலாம்.

ஆதலால் தேன் அடைக்கும் தேனீக்களுக்கும் யாதொரு கெடுதியும் நேராமல், தேன் எடுக்கும் இயந்திரம் ஒன்று இப்போது செய்யப்பட்டிருக்கிறது. இங்கே இருப்பது அதன் படமே. அது துத்தநாகத் தகட்டால் வட்டமாகச் செய்யப்பட்ட ஓர் உயரமான சிறிய அண்டாவே. அதன் மத்தியில் இருப்புக்கோல் ஒன்று பொருத்தப்பட்டிருக்

கிறது. அக்கோலில் காற்றாடி போன்று நான்கு இறக்கைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் நாம் தேனடைப் பெட்டியின் சட்டங்களிலுள்ள தேன் அடைகளை எடுத்துப் போட வேண்டும். கோலின் தலைப்பாகத்தில் பற்களையுடைய சக்கரம் ஒன்று இருக்கிறது. அதனுடன் சேர்ந்து ஒரு கைபிடி வெளியே இருக்கிறது. கைபிடியை விரைவாய்ச் சுற்றவே சக்கரம் சுழலும்; இருப்புக்கோலின் நான்கு பக்கங்களிலுள்ள இறக்கைகளும் சுற்றிச் சுற்றி வரும். அப்போது அடைகளிலுள்ள தேன், அண்டாவில் துளித்துளியாகச் சிதறித் தெறித்து விழும். அண்டாவின் அடிப்பாகத்தில் காணப்படும் துவாரத்திலிருந்து ஒரு குழாய் வழியே நாம் தேனை வெளியே பாத்திரங்களில் பிடித்துக் கொள்ளலாம். தேன் எடுத்து முடிந்ததும் அடையைத் திரும்பவும் சட்டத்துடன் பெட்டியில் வைக்கத் தேனீக்கள் அதனைத் திரும்பவும் உபயோகப்படுத்திக்கொள்ளும்.



இவ்வாறு நாம் எடுக்கும் தேன் மக்களுக்கு மிகவும் உபயோகமான பொருள்களில் ஒன்றாகும். உணவுப் பொருள்களுள் தேன் உடம்புக்கு மிகுந்த ஆரோக்கியத்தையும் திடத்தையும் கொடுக்க வல்லது.

தேனைத் தம் உணவிற் சேர்த்து உண்டு வருபவர் நீண்ட ஆயுளைப் பெறுவர். தேனையும் தினைமாவையுமே கலந்து உணவாகக்கொண்டு தமிழ்நாட்டுவேடுவர்கள்புகழ்பெற்ற வீரர்களா யிருந்தனர். பழனிப் பஞ்சாமிர்தத்தில் தேன் ஏராளமாகக் கலந்திருப்பதை நீங்கள் சுவைத்துப்பார்த்திருக்கலாம். பழங்களைத் துண்டுதுண்டுகளாக அரிந்து,தேனில் போட்டு வைத்திருந்தால் நெடுநாட்கள் அவை கெட்டுப் போகாமல் அப்படியே இருக்கும். தேனைப்பாலிலும் எலுமிச்சம்பழச் சாற்றிலும் கலந்து உட்கொள்ளலாம். ரொட்டி, தோசை முதலியவற்றைத் தேனில் தோய்த்து உண்ணலாம். குழந்தைகளுக்கும், நோயாளிகட்கும் தேன் எளிதில் செரிக்கும் உயர்ந்த உணவாகும். தேன் மருந்துகளுக்கும் உதவும். வாயில் போட முடியாத அத்துணைக் கசப்பான மருந்துளைத் தேனில் கலந்து உட்கொண்டுவிடலாம்.

தேனடைகளை உருக்கினல் தேன் மெழுகு உண்டாகும். இதுவும் விலையுயர்ந்த பொருள்களில் ஒன்று. பலகைகளை இணைத்து மரச் சாமான்கள் செய்யும்போது உபயோகிப்பது இத்தேன் மெழுகே.

தேனீக்களை வளர்க்கப் பெட்டியும் தேனெடுக்க இயந்திரமும் மட்டுமே வேண்டுவன. இவைகளை நாட்டுப் புறங்களிலுங்கூட மக்கள் எளிதிற் செய்து கொள்ளலாம், அல்லது சிறு தொகைக்கு வாங்கிக் கொள்ளலாம்.

இத்துணை இலாபகரமான தேனீ வளர்த்தல் என்னுந் தொழில் மேல்நாடுகளிற்போல் நம் நாட்டிலும் இன்னும் அதிகமாய்ப் பரவலாம். தென்னிந்தியாவில் திருக்குற்றாலம், கோடைக்கானல், நீலகிரி, கொச்சி, திருவாங்கூர், மைசூர் முதலிய காடும் மலையும் சூழ்ந்த இடங்களில் தேனெடுக்குந் தொழிலைப் பெரிதும் விருத்தி செய்யலாம். அங்கு மாத்திரமேயன்றி எங்குமே விவசாயிகள் இதனை ஓர் இரண்டாந் தொழிலாகத் தங்கள் தோட்டங்களிலும் பண்ணைகளிலும் நடத்தலாம். பயிர் செய்யும் மரஞ் செடி கொடிகளிலிருந்து காய்கறி கிழங்குகளைப் பெறுவது போலவே அவைகளின் பூக்களிலுள்ள தேனையும் சேகரித்துக்கொள்வது அறிவுடைமையன்றோ! இத்தொழில் அதிகப் பணச் செலவு பிடிப்பதுவுமன்று. நாம் வளர்க்கும் தேனீக்களுக்கு நாம் செலவு செய்து தீனி போட வேண்டுவதில்லை. அவைகள் தம்மைத் தாமே வளர்த்துக் காப்பாற்றிக் கொண்டு, நமக்கும் உழைத்துக் கொடுக்கின்றன.

மேல் நாடுகளில் உள்ள விவசாயிகள் தேனீ வளர்க்குந் தொழிலைச் செய்து மிக்க இலாபம் அடைகின்றார்கள். நம்நாடு நீர்வள நிலவளங்களுள்ளது; தேன் பெருக்கெடுத்தோடும் மலர்ச் சோலைகளையுடையது என்று புலவர்களால் பாடப் பெற்றது. ஆதலால் நம் மக்களும் தேன் கூடுகளை அமைத்துத் தேனீக்களை வளர்த்துச் செல்வத்தில் ஓங்கி உயர்வார்களாக.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்:—

(a) **வாழ்க்கை அரசி உழைப்பாளி மகரந்தம் நேர்தல் ஆரோக்கியம் தொகை பண்ணை புலவர் சோலை.**

(b) **தங்கவாறு முழுவளர்ச்சி சிதறித் தெறித்தல் தினைமா பஞ்சாமிர்தம் நாட்டுப்புறம் நீர்வளம் நிலவளம் பெருக்கெடுத்தல் ஓங்கிஉயர்தல்**

1. தேனீ வளர்த்துத் தேனெடுத்தலைச் சுருக்கமாக இரண்டு பத்திகளில் எழுது.
2. அஃறிணை ஒன்றன்பாற் சொற்கள் இரண்டும், பலவின் பாற் சொற்கள் இரண்டும் இப்பாடத்திலிருந்து எடுத்துக் காட்டு.

---

21. தமிழ் நாட்டு வீரர் சிதம்பரம் பிள்ளை

நம் இந்தியத் தாய் நாட்டின் நலத்தையும் உயர்வையும் முன் நிறுத்த எழுந்த வீரரின் முதல் அணியைச் சேர்ந்தவர் **சிதம்பரம் பிள்ளை.** தமிழ் நாட்டிலே தேசாபிமானம் என்னும் மதலையைப் பெற்றெடுத்த தந்தையார் அவரே. பலப்பல இடுக்கண்களுக் கிடையே அதனை நாட்டுப்பணியாக வளரச் செய்தவரும் அவரே. அஞ்சா நெஞ்சத்துடன்

அதற்குத் தன் உடல் பொருள் ஆவி மூன்றினையும் உவந்து அளித்தவரும் அவரே. தமிழ் நாட்டிலே அவர் பெயர் தெரியாதவர் எவரும் இலர்.

நாட்டுப்பற்றே உருவெடுத்துவந்த இப் பெரியார், தூத்துக்குடியை அடுத்த ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில், வேளாளர் வகுப்பிலே பிறந்தார். இவர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலுந் தேர்ச்சி பெற்று, நீதிக் கலையிலும் நிபுணரானார். இவர் முதன் முதல் ஒட்டப்பிடாரம் என்னுந் தமது ஊரிலேயே வக்கீலாக வேலை செய்துகொண்டு வந்தார். தம் அறிவையும் ஆற்றலையும் முழுதும் பயன்படுத்த அச் சிற்றூர் போதாமை கண்டார்; எனவே தூத்துக்குடி சென்று சேர்ந்து, அங்கு அவ்வேலையில் தமது அருந் திறமையைக் காட்டிப் பெரும் புகழ் பெற்றார்.

சிதம்பரம் பிள்ளை இந்த வக்கீல் வேலையிலேயே தமது முழு மனதையுஞ் செலுத்தியிருப்பாரானல் அவர் பெரும் பொருள் திரட்டியிருக்கலாம். ஆனல் அவர் மனம் அவ்வாறு செல்லவில்லை; நம் நாட்டு மக்களின் நிலைமை அவர் மனத்தை வாட்டிற்று. இந்திய மக்களின் அறியாமையையும் வறுமையையும்

பொறுக்க முடியாதவராய், அவர் அவர்களின் முன்னேற்றத்துக்குத் தக்க வழிகளைக் கருதுவாராயினர். மக்கள் கல்வி கற்றுத் தம் வாழ்க்கையைச் சீர்திருத்திக்கொள்ள அவர்களை ஊக்கினர். நாட்டின் வறுமை ஒழிந்து செல்வம் வளரக் கைத்தொழில்களும் வாணிபமும் ஓங்கவேண்டுமென்பதை மக்களுக்கு ஊன்ற உணர்த்தினர். அவரது முயற்சியின் பயனாகவே, ஐரோப்பிய நூல்நூற்குஞ் சாலை ஒன்றே இருந்த தூத்துக்குடியில், இந்திய நூல்நூற்குந் தொழிற்சாலைகள் பலவாக எழுந்தன.

மற்றும் வாணிபம் வளர்வதற்கு நம் மக்கட்குச் சொந்தமாகக் கப்பல்கள் இருக்கவேண்டும் என்பதைச் சிதம்பரம் பிள்ளை அக்காலத்திலேயே உணர்ந்திருந்தார். தூத்துக்குடி வியாபாரப் பெருக்கம் பெற்ற துறைமுகப் பட்டினம். இலங்கைத் தீவின் தலைநகராகிய கொழும்புக்கு அனுப்பப்பட்ட தென்னிந்திய வியாபாரப் பொருள்கள் எல்லாம், இத்தூத்துக்குடியின் வழியாகவே சென்றுகொண்டிருந்தன.

தூத்துக்குடிக்குங் கொழும்புக்கும் போய்வந்துகொண்டிருந்த வர்த்தகக் கப்பல்களெல்லாம் ஐரோப்பியர்களுடையனவாகவே இருந்தன. ஆகவே நம்மவர்களின் கொழும்பு வியாபாரம் சிறக்கச் சொந்தக் கப்பல்கள் இன்றியமையாதவை என்று அவர் கண்டார். ஒரு கப்பலின் விலை இலக்ஷக்கணக்கு ஆகுமன்றோ! ஆகையாற், கூட்டுறவின்மூலம் கப்பல்

கள் வாங்கவேண்டும் என்று பிள்ளையவர்கள் உறுதி கொண்டார்கள். அத்தகைய சங்கத்திற்குப் பங்குகள் சேர்க்கப் பிள்ளையவர்கள் நகர் நகராய் அலைந்து சென்று, பெரியோர்கள் செல்வந்தர்கள் பலரையுங் கண்டு பேசினர். இப்பெருமுயற்சியைப் பற்றிச் சிதம்பரம் பிள்ளை பம்பாய் நகரிற் பலநாட்கள் விடாமல் தங்கவேண்டிய தாயிற்று.

அப்போது தூத்துக்குடியிற் பிள்ளையவர்களின் மனைவியார் உடல்நலம் மாறியும், மகன் ஒருவன் பெரிதும் நோய்வாய்ப்பட்டும் இருந்தனர். இவ் விடுக்கண்களைத் தாங்காது ஏக்கமுற்று ஊருக்கு எப் போது திரும்பி வருவீர்கள் என்று எழுதிய மனைவி யார் கடிதத்துக்குப் பிள்ளையவர்கள், "நான் திரும்பு வது எப்போது என்று சொல்லமுடியவில்லை. தூத் துக்குடிக்குத் திரும்புவது எனிற் கப்பலோடு திரும்பு வேன்; இல்லையேற் கடலிலேயே விழுந்து உயிர் விடு வேன்." என்று பதில் எழுதினர். பிள்ளையவர்க ளின் குடும்பத் துன்பத்தைக் கண்டு வருந்திய நண் பர் ஒருவர், "ஒரு முறையாவது ஊர்வந்து போக லாமே" என்று எழுதிய கடிதத்துக்குப் பிள்ளையவர் கள், "என் மனைவி மக்களைக் கடவுள் கையில் ஒப் பித்துவிட்டேன்; அவர்களின் பாதுகாப்பைப் பற்றி அவர் என்னைவிட நன்குணர்வார்" என்று விடை யெழுதிவிட்டார். என்னே நம் வீரரின் மன உறுதி யும், தியாகமும்! நாட்டு மக்களின் நன்மை ஒன்றே அவர் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது.

சிறிது காலத்திற் சிதம்பரனார் எண்ணங்கைகூடி யது. "இந்தியன் நாவிகேஷன் கம்பெனி" என்று புதிதாகக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைத் தார். அதன் பெயரால் வாங்கிய இரண்டு கப்பல்க ளுடன் அவர் பம்பாய் விட்டுத் தூத்துக்குடிக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

சிதம்பரனார் தேசத்தொண்டு இதோடு நின்று விடவில்லை. அக்காலத்தில் "தேசாபிமான சங்கம்" என்று ஒரு சபை திருநெல்வேலியில் நிறுவப்பட்டது. அவ்விடத்திலும், தூத்துக்குடியிலும் அது மக்க ளிடையே நிரம்ப வேலை செய்தது. அதன் சார்பில் மற்றவர்களுடன் பிள்ளையவர்களும் சொற்பொழிவு கள் ஆற்றிவந்தார். அவர் தமிழில் மிக அழகாகவும் திடமாகவும் பேசவல்லவர். சொல்லவேண்டியவை களை ஒழுங்காகக் கோத்து அவைகள் பசுமரத்தாணி போல் மக்கள் மனத்திற் பதியும் வண்ணம் பேசுவார். அவர் பேசுங் கூட்டங்கட்கு ஆடவரும் பெண்டிருந் திரள் திரளாய் வந்து கூடுவர். இடம் போதாமை யாற் கூட்டங்கள் தூத்துக்குடிக் கடற்கரையிலே நடத்தப்பட்டன.

அந்நாட்களில் தூத்துக்குடியில் ஐரோப்பிய ரால் நடத்தப்பட்டுவந்த "கோரல்மில்" என்னுந் தொழிற்சாலையில், ஆட்கள் கூலி குறைவு என்று வேலை நிறுத்தஞ்செய்தனர். அந்த ஆட்களும், சிதம் பரனார் கூட்டங்களுக்கு வரத் தலைப்பட்டனர். அத் தொழிலாளிகளுக்காகச் சிதம்பரனார் முதலாளிகளி

டம் கூலியை உயர்த்திக் கொடுக்க மன்றாடினர். மேலும் அவர்கள் வேலையைவிட்டு இருந்த காலத்து மக்களிடமிருந்து நன்கொடை பெற்று, அத்தொழிலாளிகளுக்கு உதவினர்.

இவ்வாறு சிதம்பரனர் நாட்டுத்தொண்டுபுரிந்து வருங்காலையில் இவர் வேறு இருவருடன் அரசியல் குற்றஞ் சாட்டப்பட்டு இருபதாண்டு சிறைவாச தண்டனை யடைந்தார். இத்தண்டனை உயர்நீதிமன்றத்தில் ஆறு ஆண்டு என்று குறைக்கப்பட்டது. வீடுஞ் சிறையும் ஒன்றே யென்ற மனஉறுதியுடன் சிதம்பரனர் அந்த ஆறு ஆண்டுக் காலத்தையும் மக்களுக்கே பயன்படுத்திக்கொண்டு மகிழ்ச்சியுடன் அச் சிறையிற் கழித்தார். அக்காலத்தை அவர் தமிழ்நூல்களின் ஆராய்ச்சியிலும், ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பிலும் செலவு செய்துகொண்டு வந்தார். இவற்றின் பயனுகை அவர் சிறையை விட்டு வெளிவந்த பின்னர், 'திருக்குறள் அறத்துப்பால் புதிய உரை' 'அகமே புறம்' 'மனம்போல வாழ்வு' 'வலிமைக்கு மார்க்கம்' 'சாந்திக்கு மார்க்கம்,' 'பாடல் திரட்டு' 'தொல்காப்பியம் இளம்பூரணம்' முதலிய உயர்ந்த தமிழ்நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

தமது நல்ல வயதில் உடல் பொருள் ஆவி மூன்றையும் மக்கள்தொண்டுக்கென்றே உதவிய சிதம்பரனர், சிறையை விட்டு வெளியேறித் தமது முதுமையிற் சிலகாலம் கோவில்பட்டியிலும், பின் தூத்துக்குடியிலும் அமர்ந்து வக்கீல் அலுவல் பார்த்து

வந்தனர். 1936-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ஆம் நாள், இவர் தமது அறுபத்தைந்தாம் வயதில் பூத உடலை நீத்துப் புகழுடம்பை எய்தினர்.

பயிற்சி

கவனிக்க வேண்டிய மொழிகளும் தொடர்களும் :—

(a)	மதலை	அறியாமை	ஊக்குதல்	நிரம்புதல்
	இடுக்கண்	வறுமை	செல்வந்தர்	சார்பு
	நீதிக்கலை	முன்னேற்றம்	தியாகம்	தலைப்படுதல்
	நிபுணர்	சீர்திருத்தம்	நிறுவுதல்	மன்றுடுதல்

(b)	நாட்டுப்பணி	கூட்டுறவு	சிறைவாசம்
	நாட்டுப்பற்று	உறுதிகொள்ளல்	பயன்படுதல்
	முதன்முதல்	தேசாபிமானம்	நல்லவயது
	ஊன்றஉணர்தல்	சொற்பொழிவு	தொண்டாற்றுதல்
	தொழிற்சாலை	வேலைநிறுத்தம்	பூதஉடல்
	தலைநகர்	நன்கொடை	புகழுடம்பு

1. சிதம்பரனூர் நாட்டுக்குச் செய்த நல்ல வேலைகளை எடுத்துச் சொல்லு.

2. அவர் தியாகி என்று காட்ட இரண்டோர் உதாரணங்கள் கொடு.

3. அடியில் வரும் சொற்றொடர்களை நிரப்பி முடித்துக் காட்டு :—

1. அஞ்சா———. 2. உடல் ——— ஆவி 3. இலக்ஷக்———. 4. கொள்ளை ———. 5. பசுமரத்து ———. 6. உயர்நீதி———. 7. பூத ———. 8. ———உடம்பு. 9. ———பசேர். 10. ——— கைகூடுதல்.

22. நன்றும் இன்றே செய்யவும் வேண்டும்.

உலகத்தீரே! உலகத்தீரே!
நாக்கடிப் பாக வாய்ப்பறை அறைந்து
சாற்றக் கேண்மின்! சாற்றக் கேண்மின்!
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை.
ஐம்பது இரவில்அகலுந் துயிலினுல்;
ஒட்டிய இளமையால் ஓரைந்து நீங்கும்;
ஆக்கை இளமையில் ஐம்மூன்று நீங்கும்;
எழுபது போக இருப்பன முப்பதே;

அவற்றுள்,

இன்புறு நாளுஞ் சிலவே; அதான்று
துன்புறு நாளுஞ் சிலவே ஆதலால்,
பெருக்காறு ஒத்தது செல்வம்,பெருக்காற்று
இடிகரை ஒத்தது இளமை, இடிகரை
வாழ்மரம் ஒத்தது வாழ்நாள்—ஆதலால்,
ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்; இன்னும்
நாளை நாளை என்பீ ராகில்,

நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர்!
நம்முடை முறைநாள் ஆவதும் அறியீர்!

கேள்விகள்

1. நமது வயது நாட்கள் எவ்வெவ்வாறு கழிந்துபோய் விடுகின்றன?

2. செல்வம், இளமை, வாழ்நாள் இவை ஒவ்வொன்றையும் எதற்கு ஒப்பிட்டிருக்கின்றது?

3. செய்யவேண்டிய வேலைகளை நாம் எவ்வாறு எப்போது செய்யவேண்டும்?

4. நாளை செய்யலாம் என்று ஏன் தாமதம் செய்தல் ஆகாது?

---

23. ஆடை நெய்தல்

பிள்ளைகளே! பஞ்சிலிருந்து நூல் நூற்பது எப்படி என்று நீங்கள் முன்னரே தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். இந்தப் பாடத்தில் நூலை எப்படி ஆடைகளாக நெய்வது என்பதைப் படிப்போம்.

பழைய காலந்தொட்டே நமது நாட்டில் நாட்டுப் புறங்களிலும், நகரங்களிலும் நூலைத் தறியில் இட்டு ஆடைகளாக நெய்து வருகிறார்கள். அத்தறியில் உள்ள முக்கிய கருவிகளைப் பற்றியும், அவை

களால் துணி எவ்வாறு நெய்யப்படுகிறது என் பதைப் பற்றியும் இங்கே படிப்போம். தறியி லுள்ள கருவிகள் பெரும்பாலும் மரத்தினுல் செய் யப்பட்டவைகள். முதன்முதல் துணி நெய்வோன் நூல் இழைகளைத் தூய்மைசெய்து கஞ்சிபோட்டு ஓர் உருளைக் கட்டையில் தனித்தனியாக நெருங்கச்



சேர்த்துச் சுற்றி வைத்துக்கொள்வான். இந்த நூல் இழைகளைப் **பாவு** என்று சொல்லுவார்கள். இவ்விழைகளே தறியில் நெடுகே ஓடி இருப்பன. இவ்விழைகள், வேண்டிய ஆடைகளுக்குத் தக்க படி பல நிறங் கொண்டனவாகவும் இருக்கும். பிறகு நெய்வோன் இவ்விழைகளை ஒன்றுவிட்டு ஒன்ருக இரண்டு **அச்சுக்கோல்**களில் தொடுத்து வைத்துக்கொள்வான். இவ்விரண்டு கோல்களும் சேர்ந்தது **பன்னே** என்று சொல்லப்படும். இப் பன்னே தறிக்கு மேலே கட்டியிருக்கும் **பலகை**

யில் சேர்க்கப்பட்டிருக்கும். இன்னும் தறியின் மேல் ஒரு **மிதி உருளை** பன்னையின் கோல்களோடு தொடுக்கப்பட்டிருக்கும்.

துணி நெய்பவன் நீண்டோடியிருக்கும் பாவு நூல்களின் மறுமுனைகளைப் **படைமரம்** என்று சொல்லப்படும் ஒரு கட்டையில் தொடுத்து வைத்துக்கொள்வான்; பிறகு அதற்கெதிரிலுள்ள பள்ளத்தில் தன் கால்களைத் தொங்கவிட்டு உட்கார்ந்து கொள்வான். பாவில் இருப்பது போலவே ஒரு நிறத்தனவாகவோ, பல நிறத்தனவாகவோ நூலிழைகளைக் **குழல்**கள் என்று சொல்லப்படும் குறுகிய மரத்துண்டுகளில் சுற்றிப் பக்கத்தில் வைத்துக்கொண்டிருப்பான். அவன்



தனக்கு வேண்டிய நூற்குழல்களை எடுத்து அவ்வப்போது **நாடா** என்னும் சிறிது நீண்டு குறுகிய பள்ளமுள்ள ஒரு பலகைத் துண்டில் போட்டுக்கொள்வான். துணி நெய்பவன் உட்கார்ந்திருக்கும் பள்ளத்தில்

காலுக்கு ஒன்றாக இரண்டு **மிதிபலகைகள்** பன்னைப் பலகையில் தொடுக்கப்பட்டிருக்கும். எதிரில் மேலே தறியோடு தொடுக்கப்பட்டுத் தொங்கிக்கொண்டிருக்கும் ஒரு கைக்கயிற்றைப் பக்கத்துக்குப் பக்கம் மாறி மாறி இழுத்துக்கொண்டும், மிதிபலகைகளை மாறி மாறி மிதித்துக்கொண்டும் அவன் தறியை நடத்துவான். நெய்வோனுடைய இச்செயல்களினாலேயே துணி நெய்யப்படுகிறது. மிதி உருளை முன் பக்கமும் பின் பக்கமும் அசைவதினாற் ஒரு தடவை ஓர் அச்சுக்கோலும் மறுதடவை மற்றோர் அச்சுக்கோலும் மேலெழும்பும். அப்போது இருதிறப்பாவுகளும் மாறி மாறி மேலெழும்ப, நாடா பாவுகளின் மத்தியில் குறுக்கே



வலமும் இடமும் மாறி மாறி ஓடுகின்றது. அந் நாடாவிலுள்ள நூலினால் இருதிறப் பாவுகளும் பின்னப்படுகின்றன. நாடா குறுக்கே வலம் இடமாக ஓடும்போதெல்லாம் துணி நெய்பவன் பலகையைத் தன் பக்கமாக இழுத்துத் தட்டிக்கொண்டேயிருப்பான். அதனால் குறுக்கு நெடுக்கு இழைகள் ஒன்றோடொன்று சேர்ந்து பொருந்துகின்றன. துணி நெய்து ஆக ஆக நெய்து முடிந்த பகுதியை அவ்வப்போது அவன் படை மரத்திற் சுற்றிக் கொள்வான். இதுவே கைத்தறியில் துணி நெய்யும் விதமாகும்.

தறி நெய்பவர்கள் **சேடர், சேணியர், செங்குந்தர்** எனப்படுவார்கள். இவர்கள் வசிக்கும் ஊர்

களிலே வீடுகளிலெல்லாம் பெண் மக்கள் நூல் நூற்றுக் கொண்டிருப்பார்கள்; ஆண் மக்கள் தெரு அறைகளில் துணி நெய்து கொண்டிருப்பார்கள். துணிநெய்யும் கைத்தறிகளைத் தமிழ் நாட்டில்சேலம், ஈரோடு, காஞ்சிபுரம், ஆரணி, மதுரை, மேலப்பாளையம், கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், குளித்தலை முதலிய இடங்களில் ஏராளமாய்க் காணலாம். பஞ்சு நூல்போலவே ஆட்டு மயிரினாலும் பட்டு நூலினாலும் ஆடைகள் நெய்யலாம். சேலம் ஜில்லாவிலுள்ள ஊர்களில் ஆட்டு மயிரினால் கம்பளங்கள் நெய்யும் தொழில் அதிகமாய் நடக்கிறது. பட்டுப்பூச்சியினின்றும் உண்டாகும் பட்டினை நூலாக நூற்று அதனால் மைசூரிலும், கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள **கொள்ளே காலி**லும் அழகிய பட்டாடைகள் நெய்கிறார்கள்.

நூல்நூற்று ஆடை நெய்யும் இப்பழமையான தொழில் முற்காலத்திலே நம் நாட்டின்கண் மிகவுஞ் சிறந்த நிலைமையில் இருந்தது. ஒரு காலத்தில் கைவிரல் மோதிரத்திற்குள் மடித்து நுழைத்து வைக்கக்கூடிய அத்துணை மென்மையான ஆடைகள் நம் தேயத்தில் நெய்யப்பட்டு வந்தன. நம் நாட்டில் நெய்யப்பட்ட ஆடைகளைக் கடல் கடந்துவந்து ஐரோப்பிய வணிகர்கள் அதிக விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போய்த், தம் நாட்டில் இன்னும் பன்மடங்கு அதிக விலைக்கு விற்று, மிக்க இலாபம் அடைந்து வந்தார்கள். ஆனால் இக்காலத்திலோ

அந்நிலைமை முற்றிலும் மாறுதல் அடைந்துவிட்டது.

நம் நாட்டில் விளையும் பஞ்சு பெரும்பாலும் குறைந்த விலைக்குச் சீமை, ஜப்பான் முதலான அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அவ்விடங்களில் பெரிய இயந்திர சாலைகளில் அது நூலாக நூற்கப்பட்டும், துணியாக நெய்யப்பட்டும் மறுபடி நம் நாட்டுக்கு வருகின்றன. அவைகளை நாம் மிகுந்த இலாபம் கொடுத்து வாங்குகின்றோம். இதனால் நம் நாட்டுப் பணம் நம்மிடத்தை விட்டுப் போய்விடுகின்றது. இவ்வாறு நம் தேயத்துப் பஞ்சு அயல்நாடுகளுக்கு அனுப்பப்படாமல் நம் நாட்டிலேயே பெரிய இயந்திர சாலைகளில் நூலாக நூற்கப்பட்டு ஆடையாக நெய்யப்படல் வேண்டும். அங்ஙனமாயின் அத்தொழிற் சாலைகளால் பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்கு நம் நாட்டில் பிழைக்க வழி யுண்டாகு மல்லவா! இத்தொழில்களாலும் வியாபாரத்தாலும் வரும் ஆதாயம் நம் நாட்டு மக்களிடமே சேருமல்லவா! நம் செல்வம் நம் தேசத்தை விட்டுப் போகாமல் இங்கேயே தங்கி நாட்டைச் செழிக்கச் செய்யுமல்லவா!

இவ்வுணர்ச்சியின் பயனாகி இக்காலத்தில் பத்து இருபது ஆண்டுகளாக நம் நாட்டிலும் ஆங்காங்கு நூல் நூற்கும் இயந்திர சாலைகளும், ஆடை நெய்யும் இயந்திர சாலைகளும் நிறுவப்பட்டு வருகின்றன. பருத்தி ஏராளமாய் விளையும் இடங்களின் நடுவே

யுள்ள **மதுரை, தூத்துக்குடி, கோயிற்பட்டி** முதலிய நகரங்களில் இத்தகைய பெரிய இயந்திர சாலைகள் இருக்கின்றன. இவ்விடங்களிலுள்ள இயந்திரசாலை கள் நீராவியின் சக்தியினல் ஓட்டப்படுகின்றன. நீராவியின் சக்தியைவிடக் குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய சக்தியினல் மற்ற இடங்களில் நூலாலைகளும் நெசவாலைகளும் நடத்தப்படுகின் றன. திருநெல்வேலி ஜில்லாவில் **பாவநாசம்** நீர்வீழ்ச் சிக் கருகேயுள்ள பெரிய நூலாலை, அந்நீர் வீழ்ச்சி யின் சக்தியினல் ஓட்டப்படுகின்றது. பருத்தி விளை யும் **கோயம்புத்தூர் ஜில்லா**விலும் எண்ணிறந்த நூலாலை களும் நெசவாலைகளும் இப்போது பத்து ஆண்டுக ளாக நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளில் உள்ள இயந்திரங்கள், நீலகிரி மலையில் **பைக்காரா** என்னுமிடத்திலிருந்து வரும் மின்சார சக்தியினல் ஓட்டப்படுகின்றன.

தமிழ்நாடு தவிர, நம் இந்திய தேசத்தின் மற் றைப் பாகங்களில் முக்கியமாய் **பாம்பே, ஆமதாபாத்து** நகரங்களில் பஞ்சு நூல் ஆலைகளும் நெசவு ஆலை களும் நடக்கின்றன. **பெங்களூரிலும், மைசூரிலும்** பட்டு நூல் இயந்திரசாலைகளும், பெங்களூரிலும் வட இந்தியாவிலுள்ள **கான்பூரிலும்** ஆட்டு ரோம நெச வாலைகளும் இருக்கின்றன.

இப்போது நம் தேசத்தில் நெசவு தொழிலா னது விவசாயத்துக்கு அடுத்த படியாகவும், மற்றத் தொழில்களெல்லாவற்றிலும் முதன்மையாகவும்

நடந்து வருகிறது. ஏறக்குறைய நூறு கோடி ரூபா வரை நெசவு இயந்திரசாலைகளில் போடப்பட்டிருக்கின்றது. பருத்தி பயிரிட்டுப் பஞ்சு எடுத்து விற்கும் எண்ணிறந்த விவசாயிகள் தவிர, ஐம்பது இலட்சம் மக்கள் இந்த நெசவு இயந்திர சாலைகளிலேயே வேலை செய்து அமர்ந்து பிழைக்கிறார்கள். இவற்றைச் சொல்ல நீங்கள் கேட்கும்போது இந்த நெசவு தொழிலின் பெருமையையும், நன்மையையும் எளிதில் உணர்கிறீர்கள் அல்லவா! செய் தொழிலிற் சிறந்தது நெய் தொழில் என்று எண்ணி, உழுதுண்டு வாழ்வதற்கு அடுத்தபடியாகத் **திருவள்ளுவர்** பாராட்டியதும் இந்நெசவு தொழிலே ஆகும்.

பயிற்சி

கவனிக்கவேண்டிய மொழிகளும் தொடர்களும்

(a) **அவ்வப்போது** | **கம்பளம்** | **ஆதாயம்**
நிறுவுதல் | **எண்ணிறந்த** | **முதன்மை**
பாராட்டுதல் | **மின்சாரம்**

(b) **கஞ்சி போடுதல்** | **ஒன்றுவிட்டொன்று**
பக்கத்துக்குப்பக்கம் | **வலமும் இடமும்**
ஆகஆக | **கைத்தறி**
ஏறக்குறைய | **கடல் கடத்தல்**
நெய்தல் தொழில் | **அடுத்தபடி**

1. பாவு, பண்ணை, படைமரம், குழல்-இவை இன்னின்னவென்று சொல்லு,
2. சேணியர்கள் வாங்கும் நூல் எங்கிருந்து வருகிறது? அவர்கள் ஏன் நூல் நூற்றுக் கொள்ளக் கூடாது?

3. னடந்தான், யிருந்தான், டம்பம், பன்டாரம், நின்ருன் —இவைகளைத் திருத்தமாக எழுது ?

---

24. கணபதி எழுதிய கடிதம்

நீங்கள் முன்னமே ஆசிரியருக்கும் நண்பருக்கும் கடிதம் எழுத அறிந்திருக்கிறீர்கள். இந்தப் பாடத்தில் உறவினருக்கும் வணிகருக்கும் எழுதும் கடிதங்கள் இரண்டினைப் படிப்போம்.

I

9. திருப்பரங்குன்றம் ரோட்,
பசுமலை, மதுரை.
4-11-'39.

அன்பு மிக்க மணி,

என் அப்பா அவர்கள் மாமா அவர்களுக்கு எழுதிய கடிதங்களிலிருந்தும், நேற்று அனுப்பிய திருமண அழைப்புக் கடிதத்திலிருந்தும் என் அக்காள் திருமணம் பதினைந்தாந் தேதி வருகிற தென்பது உனக்குத் தெரிந்திருக்கும். திருமணம் திருப்பரங்குன்றத்திலே மயில்மண்டபத்தில் நடைபெறும். அங்கே அநேக மண்டபங்களும் அழகிய மாளிகைகளும் இருப்பதால், வருவோர் யாவருக்கும் தங்க வசதியும், முருகக்கடவுளை வழிபடத்தக்க தருணமும் வாய்க்குமென்று திருமணத்தை அங்கே நடத்தப் போகிறோம்.

நீ மாமா, அத்தை அவர்களுடன் வந்தால் போதாது; இரண்டு நாட்களுக்கு முன்னமேயே

வர முயற்சி செய். அவ்வாறு முடியாவிட்டால், திருமணத்திற்குப் பின்னுவது இங்கு ஒரு வாரம் தங்கிப்போக ஏற்பாடு செய்துகொண்டு வா.

சென்னையை விட்டு வெளி ஊர்களுக்கு இது வரை வராத நீ, மலை பார்த்திருக்க மாட்டாயே! இங்கே திருப்பரங்குன்றம், பசுமலை முதலிய சிறு மலைகளில் ஏறி விளையாடலாம். திருப்பரங்குன்றத்து ஏரியும் இப்போது நீர் பெருகி நிறைந்திருக்கின்றது. அதில் நீராடலாம். நீ அதில் நீந்தப் பழகிக் கொள்ளலாம். மதுரையிலுள்ள மீனுட்சியம்மை கோயில், வண்டூர்த் தெப்பக்குளம், திருமலை நாயக்கர் அரண்மனை முதலிய இடங்களுக்குப்போய்; கண்ணுக்கினிய காட்சிகளைக் கண்டு இன்புறலாம்.

உன்னுடன் உன் தங்கை கமலாவையும் கூட்டிக்கொண்டு வா. நீ வரும் நாளையும் நேரத்தையும் தெரிவித்துக் கடிதம் எழுதினல் நான் உன்னைப் புகைவண்டி நிலையத்தில் வந்து காண்கிறேன்.

அன்பு நிறைந்த,

கணபதி.

முகவரி :—

திரு. சி. தே. மணி,
தணிகாசலம் தெரு,
தியாகராயநகர், சென்னை.

9 திருப்பரங் குன்றம் ரோட்
பசுமலை, மதுரை. 7-6-'40

ஏஜண்டு அவர்கள்,
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.

ஐயா,

அடியிற்கண்ட மூன்று புத்தகங்களையும், தயவு செய்து, மேலே கொடுத்திருக்கிற இடத்திற்கு எனக்கு வி. பி. பார்சல் மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

புத்தகங்கள் :—

1. மாணவர் தமிழ்க் கையகராதி
2. திருக்குறள்
3. பாரதியார் கீதங்கள்—முதற்பாகம்

உண்மையுள்ள,
சி. நே. கணபதி.

---

25. செய்யுட் பாடம்

1. கடவுள் வாழ்த்துப்பாக்கள்

திருமால்

பச்சைமால் மலைபோல்மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா ! அமரரேறே !
ஆயர்தங் கொழுந்தே என்னும்

இச்சுவை தவிர யான்போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே! 1

—தொண்டரடிப் பொடி ஆழ்வார்

சிவபெருமான்

அப்பன்நீ! அம்மைநீ! ஐயனும்நீ!
அன்புடைய மாமனும் மாமியும்நீ!
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ!
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ!
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ!
துணையாய் என்நெஞ்சம் துரப்பிப்பாய்நீ!
இப்பொன்நீ! இம்மணிநீ! இம்முத்துநீ!
இறைவன்நீ! ஏறுஊர்ந்த செல்வம்நீயே!2

— திருநாவுக்கரசர்

குறிப்புகள்

1. அச்சுதன் - அழிவில்லாதவன்; (சுதம் - அழிவு). ஏறு - ஆண் சிங்கம், அரசன். ஆயர் - இடையர். கொழுந்து - இளமை இனிமை சத்தும் உடையவன்.

2. ஐயன் - குரு. ஒப்புடைய - சம உரிமையுடைய. ஒண் - சிறந்த. சுற்றம் - உறவினர். துய்ப்பன - அனுபவிப்பவை. உய்ப்பன - நேரிடுபவை. துரப்பிப்பாய் - நடத்துவாய். ஏறு - எருது.

கேள்விகள்

1. ஆழ்வார் எச்சுவை வேண்டும், எச்சுவை வேண்டாம் என்கிறார்?

2. கடவுள் உனக்கு எவரெல்லாம் ஆவார்?

2. நீதிச் செய்யுள்

க. மூதுரை

கைம்மாறு கருதாத நன்றி

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லார்க்கும் பொல்லார்க்குஞ் செய்யும் நன்றி

நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். 2

உற்றவிடத் துயிர்வழங்குவோர்

உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 3

நல்லார் சேர்க்கை

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று. 4

தீயார் சேர்க்கை

தீயாரைக் காண்பதுவும் தீதே திருஅற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது. 5

நல்லாரால் உண்டாம் நன்மை

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. 6

எழுத்தறியாதவன், குறிப்பறியாதவன்

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நல் மரம். 7

போலிப் புலவன்

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 8

அடக்கமுடையார் அறிவிலராகார்

அடக்கம் உடையார் அறிவிலர்என் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு. 9

உண்மை உறவினர்

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு. 10

வறுமையிற் செம்மை

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்(று)
அல்லாதார் கெட்டால் அங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும் என்
மண்ணின் குடம்உடைந்தக் கால். [னாகும்

சினங்கொள்வோர் மூவகையினர்

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பி
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே [டித்து
சீர்ஒழுகு சான்றோர் சினம். 12

கற்றாரும் கல்லாரும் முறையே விரும்பு மிடங்கள்

நற்றாமரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். 13

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 14

அரசனிற் கற்றேன் சிறப்புடையன்

மன்னனும் மாசறக் கற்றேனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றேன் சிறப்புடையன்—மன்னற்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றேற்குச் [குத்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு. 15

உ. நல்வழி

உயர்குலத்தவர் எவர், இழிகுலத்தவர் எவர்?

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. 1

இல்லாமையிலும் இல்லையென்னுமை

ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்அந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து. 2

இறந்தார் வாரார்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்!—வேண்டாம்
நமக்கும் அதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 3

உழதுண்டு வாழ்வதே ஒப்பிலா வாழ்க்கை

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்அன்றே—ஏற்றம்

உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 4

பிச்சையெடுத்தலினும் இச்சைபேசுதல் இழிவு

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர்விடுகை சால உறும். 5

உலோபத்தின் இழிவு

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்-கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின் யாரே அநுபவிப்பார்
பாவிகாள்! அந்தப் பணம். 6

அளவறிந் தழித்துண்

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 7

செல்வம் நிலையாது, அறமே ஒத்தும்

ஆறிடும் மேடும் மடுவும்போ லாம்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்!—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 8

இல்லது வாராது, உள்ளது போகாது

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி

நெஞ்சம்புண் ணுக நெடுந்தூரந் தாமினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 9

பசித்துன்பம் பொறுக்கொணுது

ஒருநா ளுணவை ஒழிஎன்ருல் ஒழியாய்
இருநாளுக் கேலென்ருல் ஏலாய்—ஒருநாளும்
என்னே அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னேடு வாழ்தல் அரிது. 10

தெய்வம் பொறுப்பாகாது

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்து
அறும்பாவ மென்ன அறிந்து அன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். 11

செய்வினை இருக்க தெய்வத்தை நோவதேன்

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்-போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். 12

உணவின் பொருட்டுப் படும்பாடு

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன-கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். 13

அறத்தினர் யாவருக்கும் உறவினராவர்

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்ரு தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்ரு ருலகத் தவர் 14

செய்யுட்பாடக் குறிப்புரை

வாக்குண்டாம் என வழங்கும் மூதுரையையும், நல்வழியை யும் இயற்றியவர் ஔவையார் என்னும் பெண்பேரறிஞர்.

க. மூதுரை

1 நன்றி - உதவி. செய்தக்கால் - செய்தால், என்று - எப் போது, தருங்கொல்-(திருப்பித்)தருவானோ, எனவேண்டா-என்று நினைக்கவேண்டா. தளரா - வாடாமல், தாள் - அடிவேர்.

2. கல்மேலெழுத்து - அழியாதது, நீர்மேலெழுத்து-அழிந்து போவது, அல்லாத - நல்லாரல்லாத, ஈரம் - அன்பு, ஈந்த - செய்த.

3. உற்ற இடம்- (மானக்கேடு) உண்டான இடம். உயிர் வழங் கல்-உயிரை விட்டு விடுதல், பற்றலர்-பகைவர், இறுவது-முறிவது.

4. உரைப்பது - எடுத்துப் பேசுதல், இணங்கி - கூடி.

5. திரு அற்ற - மேன்மை இல்லாத.

6. பொசிதல் - ஊறுதல். தொல் - பழைய.

7. கவை - கிளை, காட்டகம் - காட்டின் உள்ளிடம், சவை - சபை, நீட்டோலை - (படிக்க) நீட்டிய ஓலை, வாசியா - படிக்கமாட் டாமல், குறிப்பறிய மாட்டாதவன்-குறிப்பறிந்து நடக்கமாட்டாத வன், நின்றவனும் குறிப்பறிய மாட்டாதவனும் மரங்களாவார்.

8. கானம் - காடு, அதுவாக - அதுபோல, பாவித்து-நினைத் துக் கொண்டு, பொல்லா - அழகில்லா, கற்றகவி -பொருளறியாது நெட்டுருப் பண்ணிச் சொல்லும் கவி.

9. கடக்க-மேற்கொண்டு வெல்ல, கருதவும்-மனத்தால் நினைக் கவும், மடைத்தலை - நீர்பாயும் மதகினிடத்து, அல்லது வாய்க்காலி னிடத்து, உறுமீன் - (இரையாகப்) பொருந்தும் (பெரிய) மீன்.

10. அற்ற - நீர்வற்றிய, அறும் - நீங்குகின்ற, உற்றுழி -(வறு மை) வந்தபோது, தீர்வார் - நீங்கிவிடுவோர், ஆம்பல் - அல்லி, உறுவார் - பொருந்தி இருப்பவர்.

11. சீரியர் - மேன்மக்கள், அங்கு என்னுகும் - அப்போது அவர் குணம் யாதாகும்.

12. கற்பிளவு கூடாது. கயவர் - கீழ்மக்கள், கடுஞ்சினத்து - கொடிய கோபத்தால் மனம் வேறுபட்டால், பொற்பிளவு கூடும் - ஒப்பாரும் போல்வாரே - ஒத்தவர்களும் உண்டு, சீர்ஒழுகும் - சிறப்பு மிக்க, சான்றோர் - நற்குணம் நிறைந்த பெரியோர்.

13. நற்றாமரை - நல் + தாமரை, கயம் - குளம், காமுறுவர் - விரும்புவர், கற்பு - கல்வி, முகப்பர் - விரும்புவர், முதுகாடு - சுடுகாடு, உகக்கும் - விரும்பும்.

14. நஞ்சுடைமை - நஞ்சைக் கொண்டிருத்தல், நாகம் - நல்ல பாம்பு, கரந்து - மறைந்து, உறையும் - (வளையில்) உயிர் வாழும், கரவு - வஞ்சனை, கரப்பார் - மறைத்துக் கொள்வர்.

15. மன்னன் - அரசன், மாசறக் கற்றோன் - ஐயந்திரிபு அற நன்றாய்க் கல்வியில் தேறியவன், சீர்தூக்கல் - ஆராய்ந்து பார்த்தல்.

II. நல்வழி

1. சாற்றுங்கால் - சொல்லுமிடத்து, நீதிவழுவா நெறிமுறையின் - நீதி தவறாத நல்வழியில் முறைமைப்படி நின்று, மேதினி - உலகத்தில், இட்டார் - வறியோர்க்குக் கொடுத்தவர், பட்டாங்கில் உள்ளபடி - உண்மை நூல்களில் சொல்லியிருப்பது இதுவே.

2. பெருக்கு - வெள்ளம், உலகு ஊட்டும் - உலகத்தாரை உண்பிக்கும், ஏற்றவர் - இரந்தவர், நல்கூர்ந்தார் - வறுமையுடையார்,

3. போமளவும் - சாகுமளவும், எமக்கென்னென்று - நமக்கும் அதற்கும் ஒரு தொடர்பும் இல்லையென்று, இட்டு - பிச்சையிட்டு.

4. ஆற்றங்கரையின் மரம் வெள்ளத்தாற் கேடுறும். அரசு அறிய—அரசனும் நன்றாய் அறியும்படி, வீற்றிருந்த - பெருமையாக வாழ்ந்த. விழும் - அழியும், ஏற்றம் - உயர்வு, பழுது - குற்றம்,

5. மூத்த - (இழிவிற்) பெரிய, இச்சை - பொய்யான நயப்புப் பேச்சு, இடித்து உண்கை - வற்புறுத்தி வாங்கி உண்டு வாழ்தல், விடுகை - விடுதல், சால உறும் - மிகவும் பொருந்தும்.

6. கூடு - உடல், ஆவி - உயிர்.

7. ஆனமுதல் - கிடைத்த முதற் பொருள், நாடு - இதனை ஆராய்ந்து அறிவாயாக.

8. ஆறு இடும் - ஆற்று வெள்ளத்தில் உண்டாகும், மடு - பள்ளம், மாறிடும் - அழியும், ஏறிடும் - பெருகும், சார்பு - துணை, உண்ணீர்மை - உள் + நீர்மை - உள்ளத்தூய்மை, வீறும்-ஓங்கி வளரும்.

9. வாராத-கிடைக்கக்கூடாத பொருள்கள், பொருந்துவன-கிடைக்கக் கூடியன, ஏங்கல்-வருந்தல், துஞ்சல் - இறத்தல்.

10. ஒழித்தல் - விலக்கல், ஏலுதல் - ஏற்றுக்கொள்ளல், நோ - துன்பம், இடும்பை - துயரம், கூர் - மிகுதி, அரிது - முடியாது, ஒருநாளும் - எப்பொழுதும்.

11. தீவினை - கெட்ட காரியம், நோதல் - வருந்திக் குறை கூறல், எய்த வருதல்-கிடைத்தல், இருநிதியம்-பெரும் பொருள், வையம் - உலகம், அறுதல் - இல்லா தொழிதல், இடுதல்-கொடுத்தல், பொங்குதல் - நிரம்பி வழிதல்.

12. சேவித்தல் - ஊழியஞ் செய்தல், இரத்தல் - பிச்சையெடுத்தல், பாவித்தல் - நடித்தல், பார் - பூமி, இசைத்தல்-பாடல், போவித்தல் - போக்குதல்.

13. உண்பது - உணவுப் பொருள், உடுப்பது - உடை. கலம்-பாத்திரம், துணை - அளவு, வரை. சஞ்சலம் - துன்பம்.

14. இரத்தல்-கெஞ்சிக் கேட்டல், கற்று - கன்றோடு கூடிய பசு, கரத்தல் - ஒளித்தல், உற்றார் - சுற்றத்தார்.

THE SOUTH INDIA SAIVA SIDDHANTHA WORKS
- PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD. -
6, CORAL MERCHANT ST., MADRAS.

Price As. 6½